# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

Volume - 9
Issue -2

பிப்ரவரி 2016 - ரபியுல் ஆகிர் 1437

விலை ரூ. 20




## ISIS என்ற பூச்சாண்டி... முஸ்லிம் இளைஞர்களுக்கு சிறை!



2012 ஜனவரி 16 அன்று

## தலைநகர் டெல்லியை இராணுவம் முற்றுகை இட்டது ஏன்?

## ஜாதிக் கொலைகள் விஞ்ஞான வடிவம் பெறுகின்றன!

# வைகறை வெளிச்சம்

பிப்ரவரி 2016 - ரப்பியுல் ஆகிர் - 1437

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது

துணை ஆசிரியர்
கே.எம். இல்யாஸ் ரியாஜி

**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Cell.: 8148129887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in



**All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts.**


بسم الله الرحمن الرحيم


| | |
|---|---|
| தலைநகர் டெல்லியை இராணுவம் முற்றுகையிட்டது ஏன்? | 6 |
| மறுப்புக்கு விளக்கம் | 16 |
| வாழ்வின் வழிகாட்டி! | 25 |
| தென்காசியை சீரழிக்கும் உளவுத்துறை | 26 |
| கட்டாயமதமாற்றத் தடைச் சட்டம்! | 29 |
| பாரிஸ் தாக்குதலுக்கு பின். . . | 33 |
| தீன் சுடர் டி.எம். உமர் பாரூக் | 34 |
| தாருல் இஸ்லாம் – தொடரும் வெள்ள நிவாரணம்! | 35 |
| தலித் மக்கட்கு சாதியை ஒழிக்க ஒரே வழி இந்து மத மாற்றமே! | 36 |
| கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய் | 39 |
| சி.ஐ.ஏ. இரகசிய சித்திரவதை கூடங்கள் | 42 |
| ஐஎஸ்ஐஎஸ் (ஐ.எஸ்.ஐ.எஸ்.) என்ற பூச்சாண்டியைக் காட்டி முஸ்லிம் இளைஞர்களுக்கு சிறை | 44 |
| இருதயங்கள் இணைந்தன இடலாக்குடியில் | 51 |
| அடிப்படையாய் இருந்தது இஸ்லாமே! | 53 |
| நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்! | 55 |
| பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி | 58 |
| எது முதலில்? | 61 |
| முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? | 64 |


“மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும், ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் அவ்விருவரிலிருந்து அனேக, ஆண்களையும், பெண்களையும் (வெளிப்படுத்தி) உலகில் பரவச் செய்தான். ஆகவே அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குள்ள உரிமைகளைக்) கேட்டுக் கொள்கின்றீர்கள். மேலும் இரத்தக் கலப்புடைய உறவுகளையும் ஆதரியுங்கள். அல்லாஹ் நிச்சயமாக உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கின்றான்”

**(அல்குர்ஆன் அத்தியாயம் 4 வசனம் 1)**

**http:/www.facebook.com / vaigaraivelichammgm**

# சாதிக் கொலைகள் விஞ்ஞான வடிவம் பெறுகின்றன!

இளவரசன், கோகுல்ராஜ், விஷ்ணுபிரியா, ரோகித் வெமுலா இப்படிக் கொலைப்படங்கள்.

தாழ்த்தப்பட்ட அமுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள், கொலை செய்ய வைக்கப் படுகின்றார்கள். அல்லது கொலைச் செய்யப்படுகின்றார்கள்.

இதில் ஆராய்ச்சியாளர் வெமுலா ரோகித் போன்றவர்களே விதிவிலக்கல்ல. ஏன் தலித்கள் குடியரசு தலைவராகவே ஆனாலும், இந்த ஜாதிக் கொடுமைகள் ஓய்வதில்லை. பெருகிக் கொண்டே தான் போகின்றன.

நாம் பெரும் பொருளாதார வளர்ச்சிகள், விஞ்ஞான வளர்ச்சிகள் இவையெல்லாம் கூட நம்மை ஜாதி கொடுமைகளிலிருந்து வெளியே கொண்டு வந்திடவில்லை.

ரோகித் வெமுலாவின் மரணம் நம்மை உலுக்கிக் கொண்டிருந்தபோது, இன்னொரு செய்தியும் வந்தது. ஜாதிக் கொடுமைகளுக்கெதிராக கடுமையான சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது என்பதே அந்தச் செய்தி!

இந்தச் சட்டம் 26/1/2017 அன்று செயலில் வருகின்றது. இந்தச் சட்டம், The Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act 2015 பட்டியலின மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் 2015 என நாமம் சாற்றப் பெற்றுள்ளது.

தலித் மக்களை மொட்டை அடித்து கரும்புள்ளி, செம்புள்ளிக் குத்துவது, தண்ணீர் நிலைகளுக்குப் பக்கத்தில் போவதைத் தடுப்பது போன்ற பல நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால் இன்னொரு சட்டத்தைக் காட்டி மோடி அரசு தலித்களை ஏமாற்றிட முயற்சி செய்திருக்கின்றது.

ஆமாம், அரசியல் நிர்ணயச் சட்டம், பிரிவு 17A, தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதாகவே அறிவித்தது. Untouchability is abolished and its practice in any forms forbidden (Constituion of India Art :19)

ஆனால் இன்றளவும் வன்கொடுமைகளை தலித் மக்கள் மீது அவிழ்த்து விடுபவர்கள் யாரும் தண்டிக்கப்பட்டதில்லை.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 17 மீறியதற்காக ஆதிக்கச் ஜாதியைச் சார்ந்த யாரும் தண்டிக்கப் பட்டதில்லை. இது நாடறிந்த உண்மை. அரசியல் நிர்ணயச் சட்டத்தை மதிக்காததற்காக அவர்கள் யாரும் தேசத் துரோகி என அழைக்கப்பட்டதில்லை.

1989இல் ஜாதிய கொடுமைகளுக்கெதிராக ஒரு கடுமையான சட்டம் கொண்டு வரப்பட்டது. அதைத் தான் SC/ST Atrocities ACt:1989 என்கின்றார்கள்.

இந்தச் சட்டம் எப்படி செயல்பட்டிருக்கின்றது என்பதை 20 ஆண்டுகளுக்குப் பின் 2009 ஆம் ஆண்டு 40 தலித் அமைப்புகள் ஆய்வுசெய்தன. அதில் தண்டனை விகிதம் 4 சதவீதத்திற்கும் குறைவு என்பதாகக் கண்டறியப்பட்டது. (Source : Communalism Combat, May 2009)

ஆனால் ஏறத்தாழ 4,50,000 வழக்குகள் பதிவாகி இருந்தன. தண்டனை மிகவும் குறைந்து போனதற்குக் காரணம் வழக்குகளைப் பயங்கர போராட்டங்களுக்குப் பின் பதிவு செய்யும் அதிகாரிகள் அவற்றை நடத்துவதில் ஆர்வம் காட்டுவதில்லை. காரணம் அவர்கள் ஆதிக்க ஜாதியைச் சார்ந்தவர்கள்.

பெரும்பாலான வழக்குகளில் வழக்குகளை நடத்திட வேண்டியவர்களே, சமரச ஏற்பாடுகளைச் செய்துவிடுகின்றார்கள். மிரட்டலும், உருட்டலும் இந்தச் சமரச ஏற்பாடுகளில் உள்ளவை.

*ஆக, சட்டங்கள் எதையும் சாதித்துவிடப் போவதில்லை என்பதன் நடைமுறை சாட்சியங்களே ரோகித் வெமுலா, விஷ்ணுபிரியா ஆகியோர்.*

*இந்நிலையில் தீண்டாமைக் கொடுமைகள், வன்கொடுமைகள் இவற்றைக் கட்டவிழ்த்து விடுபவர்களைத் தண்டிக்கக்கூடாது என்பது போல் சில ஆய்வுகளை வெளியிடத் தொடங்கி இருக்கின்றார்கள்.*

*இந்த ஆய்வுகளில் விஞ்ஞானத்தை வம்புக்கிழுத்திருக்கின்றார்கள். விஞ்ஞான பூர்வமாக தீண்டாமை கொடுமைகள் நடக்குமாம். ஏனெனில் அது, மனிதர்களின் 'ஜீன்' என்ற மரபணுவில் வீற்றிருக்கின்றதாம். ஆய்வுகள் கடந்த 70 ஆண்டுகளாக இந்த (*Caste Discrimination*) ஜாதியின் பெயரால் பேதம் கற்பிப்பது மனிதர்களின் மரபனுபில் ஊறிப் போய் விட்டது எனக் கூறுகின்றதாம். இதை மேற்கு வங்கத்தில் இருக்கும் தேசிய பயோ மெடிக்கல் ஜெனோமிக்ஸ்* National Institute of Bio Medical Genormics *என்ற ஆய்வு நிறுவனம் சொல்லுகின்றதாம்.*

**ஆதாரம் : The Hindu - Bangaluru 27th Janurary 2016**

*எப்படி இருக்கின்றது ஆய்வு. தீண்டாமையும், ஜாதி பாகுபாடுகளும் வேதங்களால் மொழியப்பட்டு வளர்க்கப்பட்டவை என்பதால்தான் தந்தைப் பெரியாரைப் போன்றவர்கள் வேதங்களை மறுத்தார்கள். அந்த வேதங்களை மறுக்க முடியாது காரணம் அவை கடவுளால் தரப்பட்டவை எனச் சொன்னார்கள். அப்படியானால் அந்த கடவுளும் வேண்டாம் என்றார். இப்படித்தான் நாத்திகம் காலூன்றிற்று. ஆனால் இப்போது ஒரு புதுப் புருடா விடப்பட்டுள்ளது. அதில் விஞ்ஞானம், ஆராய்ச்சி என்றெல்லாம் பேசப்படுகின்றது.*

*இன்றும் சில புருடாக்களை இதைப் போல் வெளியிட்டுவிட்டு, தீண்டாமைக் கொடுமைகளுக்கு தண்டனைகளைத் தந்திட முடியாது காரணம், அவை இயற்கையின் வடிவம் எனக் கூறிடுவார்கள் என்றே படுகின்றது.*

*இப்போது நாட்டை ஆளுகின்றவர்கள் எதையும் செய்வார்கள். காரணம் ரோஹித் வெமுலாவின் தற்கொலைக்கு ஆட்சியில் இருப்பவர்களின் மாணவர் அமைப்பும் ஒரு மத்திய அமைச்சரும் காரணம். ஆகவே தலீத்கள், தீண்டாமைக் கொடுமைகளிலிருந்து விடுபட வேறு வழிகளை தேடிட வேண்டியதுதான். அப்போது மட்டுமே இன இழிவு ஒழியும்.*

*அதற்குக் கைகண்ட மாமருந்து இஸ்லாம். அதுமட்டுமே! இஸ்லாத்தின் போதனைகள் நடைமுறை வாழ்க்கைத் தத்துவங்கள், இவையெல்லாம் மனிதர்கள் அனைவரும் ஒரே ஜீன் மரபணுவிலிருந்து பல்கிப் பெருகியவர்களே! அவர்கள் அனைவரும் சகோதரர்களே! அவர்களுக்கிடையே எந்தப் பேதமுமில்லை எனக் கூறுகின்றது.*

*இறைவன் மனிதர்களுக்கு அருளிச் செய்த இறுதி வேதத்தில் இப்படிப் பிரகடனப்படுத்து கின்றான்.*

*"மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும், ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் அவ்விருவரிலிருந்து அனேக, ஆண்களையும், பெண்களையும் (வெளிப்படுத்தி) உலகில் பரவச் செய்தான். ஆகவே அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குள்ள உரிமைகளைக்) கேட்டுக் கொள்கின்றீர்கள். மேலும் இரத்தக் கலப்புடைய உறவுகளையும் ஆதரியுங்கள். அல்லாஹ் நிச்சயமாக உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கின்றான்" (அல்குர்ஆன் அத்தியாயம் 4 வசனம் 1)*

*பிறப்பால் கற்பிக்கப்படும் அத்தனை பேதங்களையும் இந்த வசனம் வேரோடும், மண்ணோடும் கெல்லி எறிகின்றது. அவை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்ற போர்வையில் வந்தாலும் சரியே!*

*இந்த இறைவனையும் அவன் வகுத்து வழங்கிய வாழ்க்கை நெறியாம் இஸ்லாத்தை ஏற்போம். இன இழிவு நீங்கி மனிதன் என்ற மாண்பையும் கண்ணியத்தையும் பெறுவோம்.*

*இஸ்லாம் இந்த உலகில் மட்டும் வெற்றியைத் தருவதில்லை. மாறாக மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையிலும் வெற்றியைத் தரும். இன்ஷா அல்லாஹ்*

# 2012 ஜனவரி 16 ஆம் நாள் நமது இந்தியாவின்

# தலைநகர் டெல்லியை இராணுவம் முற்றுகையிட்டது ஏன்?



## இன்று அம்பலமான உண்மை!

**16.1.2012 நிகழ்வு**

*இராணுவத்தை இந்து மயமாக்கு!*

*இந்துக்களை இராணுவ மயமாக்கு!!*

*இப்படி ஒரு கோஷத்தை இந்தியாவின் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் முன் வைத்த போது, நாம் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.*

*75 ஆண்டுகளுக்கு முன்னால் வைக்கப் பட்ட இந்த முழக்கம் வெத்து வேட்டு என்றே எல்லோரும் எடுத்துக் கொண்டார்கள்.*

*ஆனால் சந்தடி இல்லாமல் இந்தக் கோஷங்கள் திட்டங்களாக ஆக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டிருக்கின்றன.*

*இதன் வெளிப்பாடுதான் 2012 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 16 ஆம் நாள் நமது இராணுவம் டெல்லியை நோக்கி நகர்ந்தது.*

*அப்போது இராணுவ தளபதியாக இருந்த ஏ.கே. சிங் ஓர் இந்துத்துவ வாதி. இவர் இராணுவத்தை இந்து மயமாக்கு என்ற கோஷத்தில் சிக்கியவர். இந்துத்துவ, பாசிச சிந்தனையில் வளர்ந்தவர், வார்த்தைக் குட்பட்டவர்.*

*இவர் நமது இராணுவத்தைப் பயன்படுத்தி தலைநகர் டெல்லியையும், அங்கிருந்து இயக்கப்படும் இந்திய நிர்வாகத்தையும் கைப்பற்றி இந்தியாவை இந்து இராஷ்டிரமாக ஆக்கிடவும் அறிவிக்கவும் சித்தமாயிருக்கின்றார். ஆனால் இவருடைய மொத்தத்திட்டமும் அப்போது அதாவது டெல்லியை இராணுவம் முற்றுகை யிட்ட 16.1.2012 அன்றே தெரிந்திட வில்லை. அஃதோர் அசாதாரணமான நிகழ்வு என்று மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்போதுதான் பச்சையாகவே அறிவிக்கப் பட்டுள்ளது அதன் நோக்கம்.*

*அப்போது நாடறிந்த நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கில நாளிதழ் மிகவும் இரகசியமாக ஓர் ஆய்வை நடத்தியது.*

*அதில் இராணுவம் டெல்லியை முற்றுகை இட வந்தது உண்மை. இடையில் சில தடங்கல்கள் ஏற்பட்டிருக்காவிட்டால்*

அல்லது தாமதப்படுத்தி இருக்கவில்லை என்றால் அது டெல்லியை முற்றுகை யிட்டிருக்கும், கைப்பற்றி இருக்கும் என்பதைக் கண்டுபிடித்து 2013 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 4ஆம் நாள், வெளியிட்டிருந்தது. அதனை மிகவும் சரியாக நாம் வைகறை வெளிச்சம், ஏப்பிரல் - மே 2012 இதழில் அட்டைப்படக் கட்டுரையாக வெளியிட்டி ருந்தோம். அன்றிருந்த காங்கிரஸ் அரசு அது பற்றிய முழுத் தகவலை யும் வெளியிடவில்லை.

அப்போது அதாவது 2012 ஆம் ஆண்டு ஒரு சாதாரண பயிற்சிக்காகத் தான். இராணுவத்தில் சில முக்கியப் பிரிவுகள் டெல்லியை நோக்கி நகர்ந்தன எனக் கூறப்பட்டது. ஆனால் இப்போது 2016 ஆம் ஆண்டு ஜனவரியில் அன்று நடந்தது உண்மையான முற்றுகை தான். அது இந்து இராஷ்டிராவுக்காகத்தான் என்பதை அப்போதைய மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் மணிஸ் திவாரி உறுதி செய்திருக்கின்றார். தினத்தந்தி 11.1.2016 இந்தப் பின்னணியில் உண்மையிலேயே நம் நாட்டுக்குள் என்ன நடந்து கொண்டிருக் கின்றது என்பதை வாசகர்கள் முன் வைக்கின்றோம்.

நாட்டு நலனில் அக்கறைக் கொண்டவர் கள் இவற்றை ஏனைய குடிமக்களின் கவனத்திற்கு கொண்டு சென்றிட வேண்டும். அப்போது மட்டுமே நாம் ஓர் இராணுவ ஆட்சியிலிருந்து நம் நாட்டைப் பாதுகாத்திட இயலும்.

அன்று நடந்தது?

அன்று, டெல்லியை நோக்கி இராணுவம் நகர்ந்த வரலாறு:

2012ஆம் வருடம் ஜனவரி பதினாறாம் நாள் (ஜனவரி 16,2012) காலை நமது இராணுவத்தின் இரு பிரிவுகள் மிகவும் வேகமாக டெல்லியை நோக்கி நகர்ந்தன.

இந்த இராணுவப் பிரிவுகள் டெல்லிக்கு முன்னாலும், பின்னாலும் 150 கிலோ மீட்டருக்கு அப்பால் முகாமிட்டிருந்தவை.



மனீஷ் திவாரி

ஒரு பிரிவு டெல்லிக்குப் பக்கத்திலுள்ள ஹிஸார் HISAR (ஹரியானா)விலிருந்தது. இன்னொரு பிரிவு ஆக்ராவில் இரு வேறு திசைகளில் இருக்கின்றன. ஆக்ராவுக்கும் டெல்லிக்கும் ஏறத்தாழ 150 கிலோ மீட்டர் தூரம்.

ஹிஸார் ஆக்ராவை விட டெல்லிக்கு சற்று பக்கத்தில் இருக்கின்றது.

இந்த இரு இராணுவப்பிரிவும் டெல்லியை நோக்கி, அதிரடியாக நகர்ந்தன என்பதை நமது உளவுத்துறை கண்டுபிடித்து நமது இராணுவ தலைமையகத்திற்கு சொல்லு கின்றது. அல்லாமல் அரசுக்கோ - இராணுவ அமைச்சகத்துக்கோ இராணுவத் தின் பொறுப்பாளர்கள் அவர்களின் தளபதி களிடம் சொல்லவில்லை.

நமது அரசுக்கு குறிப்பாக 'MoD Ministry - Ministry of Defence' என்ற பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளருக்கும் தகவல் சொல்லாமல் இராணுவத்தின் எந்தப் பிரிவும், தங்களது பாசறையிலிருந்து நகரக்கூட கூடாது என்பது விதி. இந்த விதி இதுவரை 64 ஆண்டுகளாகப் முறையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.



சசிகாந்த்

1984-இல் சீக்கியப் படைகள், ஒரு சிப்பாய் கலகத்தை நடத்தியதால் இந்த விதிகள் இன்னும் இறுக்கமாய் பின்பற்றப் பட்டு வந்தன. ஆனால் அதையும் மீறி 16.1.2012 இல் இராணுவம் நகர்ந்திருக்கின்றது.

உளவுத் துறைதான் அதை அமைச்சகத்திற்கு சொல்லி இருக்கின்றது. (ஆதாரம் இந்தியன் எக்ஸ்பிரஸ் (டெல்லி) ஏப்ரல் 4, 2012 - முதல் பக்க கட்டுரை). இராணுவம் டெல்லியை நோக்கி நகர்ந்த போது நமது பாதுகாப்பு செயலாளர் சசிகாந்த் ஷர்மா நம் நாட்டில் இல்லை. அவர் மலேசியா சென்றிருந்தார்.

உடனேயே நமது பாதுகாப்பு செயலாளர் நம் நாட்டுக்கு வரவழைக்கப் பட்டார். அவர் மலேசியா சென்றிருந்த பணிகளை அப்படியே விட்டுவிட்டு ஓடோடி வந்தார்.

## அபார உத்தி

அவர் மலேசியாவிலிருந்து டெல்லி வருவதற்குள் இந்த இராணுவப் பிரிவுகள் டெல்லிக்குள் புகுந்துவிடாமல் தடுப்பதற்கு ஒருபுதிய உத்தியைக் கையாண்டார்கள் நமது உள்துறை அதிகாரிகள். அந்த உத்தி, டெல்லிக் காவல்துறையினருக்கு Terror Alert - என்ற தீவிரவாத தாக்குதல் அதிரடி செய்தி ஒன்றை அனுப்பினர். டெல்லிக்குள் புகுந்திடும் எல்லா வாகனங்களையும் முழுமையான கூர்மையான சோதனைகளுக்குள்ளாக்கும்படி அந்தச் செய்தியில் குறிப்பிட்டார்கள்.

இப்படி ஆணை இட்டதன் நோக்கம், டெல்லிக்குள் வரும் இலட்சக்கணக்கான, வாகனங்கள் முற்றாக சோதனை செய்வதால் போக்குவரத்து ஸம்பிக்கும். வாகனங்கள் ஊர்வதில் தாமதம் ஏற்படும். இதனால் பாய்ந்துவரும் இராணுவம் டெல்லிக்குள் புகுந்திட பல மணி நேரங்கள் வெளியே காத்து நின்றிட வேண்டியது வரும்.

இந்தக் கணக்கு சரியாக வேலை செய்தது. மலேசியாவிலிருந்து இராணுவ செயலாளர் சசிகாந்த் ஷர்மா வந்தார். தலைமை செயல் இராணுவ தளபதி ஏ.கே. சவ்திரியிடம் உடனே அந்தப் படைப் பிரிவுகள் தங்களுடைய பாசறைகளுக்குத் திரும்பிட வேண்டும் என உத்தரவிட்டார். படைப்பிரிவுகள் பாசறைக்குத் திரும்பின. இந்த ஏ.கே. சவ்திரி (Lt. Gen.) தான் Director General Military Operations (DGMO) இராணுவ இயக்கத்திற்கான முதன்மை இயக்குனர்.

## இராணுவத்தின் பதில்

இராணுவத் தளபதியிடம் இதற்கான விளக்கம் அதாவது படைப்பிரிவுகள் பாசறையிலிருந்து வெளிப்போந்து தலை நகரை நோக்கி நகர்ந்ததற்கான காரணம் (விளக்கம்) வேண்டும் எனக் கேட்டார். ஒரு சாக்குப் போக்கை விளக்கமாக எழுதித் தந்தார்கள். அதாவது வழமையான பயிற்சி களுள் ஒன்று தான் அது என்பதே. அதை பாதுகாப்புத்துறை செயலாளர் சசிகாந்த் ஷர்மா வாங்கி வைத்துக் கொண்டார். அவர் அன்று இரவு நெடுநேரம் வரை தன் அலுவலகத்திலேயே இருந்தார். விவகாரம் 2013 ஜனவரி 16/17 ஆம் நாளோடு முடிந்தது. முழு செய்தியும் அமுங்கியும் விட்டது.

ஆனால் இந்த மொத்த விவகாரமும் சுமர் நான்கு மாதங்களுக்குப் பின்னர் (ஜனவரி 6 முதல் ஏப்ரல் 4 வரை) தான் வெளியானது. இந்தியன் எக்பிரஸ் தனது டெல்லி பதிப்பின்

முழு பக்கத்தில் வெளியிட்டது. இதன் பின்னரே நாடு பரபரப்பானது.

## இராணுவ முற்றுகை செய்தி ஏன் தாமதமாக வந்தது?

இப்போது ஒரு வினா: ஏன் ஜனவரி 16 ஆம் நாள் நடந்த நிகழ்வு நான்கு மாதங்கள் கழிந்து மக்கள் மன்றத்திற்கு வருகின்றது.

இதில்தான் இந்தியன் எக்ஸ்பிரஸ் காட்டிய பொறுமையைப் பாராட்டிட வேண்டியுள்ளது.

இராணுவத்தின் அசைவை திடுதிடுப் பென்று செய்தியாக வெளியிடுவதும், நமது கற்பனைகளைக் கொட்டி கட்டுரைகளை வெளியிடுவதும் பொறுப்பற்ற செயல். அப்படிச் செய்தால் இராணுவத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்து விடுவார்கள். மக்கள் நாம் இராணுவ ஆட்சிக்கு உட்படுத்தப் பட்டு விடுவோமோ என்று பீதிக்கும் உள்ளாக்கப்படுவார்கள். அரசுக்கும் அது ஒரு பெரிய ‘இடியாக’ அமையும்.

அதே நேரத்தில் இராணுவம் ஒரு முற்றுகைக்கும் ஓர் ஆட்சி கவிழ்ப்பிற்கும், முயற்சிகளை மேற்கொண்டிருக்குமேயானால் அதனை நாட்டை ஆள்வோருக்கும் குடி மக்களுக்கும் தெரிவித்து விடுவதே சிறந்தது என்ற எண்ணங்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் மனதை பல நாட்களாக அலைக்கழித்திருக்கின்றன.

இந்த எண்ணங்களை அந்தப் பத்திரிக்கையில் கட்டுரையை எழுதிய, ஷேகர் குப்தா (SHEKAR GUPTA), ரிட்டு சாரின் (RITU SARIN), பிரனாப் சாமன்தா (PRANAB SAMANTA), அமிர் சிங் (AMIR SINGH) ஆகியோர் கட்டுரையின் முதல் வரியிலேயே குறிப்பிடு கின்றார்கள், “இன்னும் தெளிவாக - டெல்லியை இராணுவம் கைப்பற்றிட முனைந்ததா? என்ற வினாவை நாங்கள் ஒரு குழுவாக ஆய்வு செய்தோம். இராணுவ அதிகாரிகளிடமும் பேசினோம். அதன் பின்னரே இந்தக் கட்டுரையை இடம் பெறச் செய்தோம். இந்த ஆய்வுக்காக நாங்கள் ஏறத்தாழ நான்கு மாதங்கள் குறிப்பாக 11 வாரங்கள் எடுத்துக் கொண்டோம். எங்களுக்கு நன்றாகத் தெரியும் இது ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தும். இது எல்லா நிலைகளிலும் விவாதங்களுக்கு உள்ளாகும். இன்றைக்கும் நாளைக்குமல்ல, இனிவரும் பல வருடங்களுக்கு இஃது விவாதிக்கப்படும். அதனால் மிகவும் கவனமாகவே இதனை எழுதுகின்றோம்” என்றெல்லாம் பொட்டில் அறைந்தாற் போல் கூறியுள்ளார்கள் கட்டுரையாளர்கள்.

ஆதாரம் முதுல் பத்தி - இந்தியன் எக்ஸ்பிரஸ் (டெல்லி) கட்டுரை

“The January Night Raisina Hill was spooked - Two key army units moved towards Delhi without notifying Government.”

ஆதலால், வைகறை ஆசிரியர் குழுமம், இதனை இந்தியன் எக்ஸ்பிரஸின் பொறுப்பற்ற செயலாகப் பார்க்கவில்லை. மாறாக, நாட்டின் இராணுவம் இனிவரும் நாளில் டெல்லியைக் கைப்பற்றி ஆட்சியை அமைத்திட வழிவிடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் எழுதப்பட்டதாகவே எடுத்துக் கொள்கின்றது.

## இந்தியன் எக்ஸ்பிரஸுக்கு ஏற்பட்ட சந்தேகம்

ஜனவரி 16ஆம் நாள், இராணுவத்தின் இரண்டு படைப்பிரிவுகள் டெல்லி நோக்கி வேகமாக நகருவதற்கு எந்த காரணமுமில்லை என்பது இந்தியன் எக்ஸ்பிரஸின் முதல் முடிவு. ஏனெனில் ஜனவரி 15ஆம் நாள் தான் Army Day Celebrations இராணுவ நாள் விழாக்கள் நடந்து முடிந்திருந்தன. இதற்காகப் பல நாள்கள் பயிற்சிகள், தயாரிப்புகள் என ஈடுபட்டதால், இராணுவத்தினரும், அதிகாரி களும் சற்று ஓய்வெடுக்க விரும்பும் நாள். அன்று, ஏன் இராணுவத்தின் இரண்டு பிரிவுகள் டெல்லியை நோக்கி வேகமாக நகர்ந்திட வேண்டும்? குறிப்பாக பாதுகாப்பு செயலாளர் வெளிநாடு சென்றிருக்கும் போது.

இந்த வினாவை, இன்னும் வலுப் படுத்துவது, இவர்கள் அடுத்து ஒரு அணியாக பல தயாரிப்புகளை மேற்கொள்ள வேண்டிய

www.indianexpress.com

# The Indian EXPRESS

JOURNALISM OF COURAGE

LATE CITY | NEW DELHI | WEDNESDAY | APRIL 4 | 2012 | 20+6 (NEWSLINE) PAGES | Rs. 4.00




**Go after Saeed: India to Pakistan**

Govt determined not to allow US move on JuD chief cloud Zardari visit P3

EDITS & OP-ED PAGES 10-11

**Letter to Sonia Gandhi** by Pratap Bhanu Mehta

Decision on Saeed welcome, India must watch Pak dynamic

**SPORT**

**IPL begins, CSK vs MI today**

PAGE 19



# The January night Raisina Hill was spooked: Two key Army units moved towards Delhi without notifying Govt

## Army called it routine fog-time exercise but so deep is distrust, so many questions around the movement, that alarm bells rang at highest levels in Govt

SHEKHAR GUPTA with RITU SARIN & PRANAB DHAL SAMANTA

NEW DELHI, APRIL 3

THIS is a story you would tell with extreme care and caution. But it so starkly characterises the current state of top-level politico-military relations that it is a folly to keep it under wraps, as the entire establishment has tried to do for a full 11 weeks now.

It has also taken this team of *The Indian Express* reporters that long to establish the story and the dramatic developments during, say, about 18 very difficult hours on January 16-17 earlier this year.

While many, including the spokesmen for the defence establishment, say it was much ado about nothing (*see box*), it is a story of a most unusual night when Raisina Hill was spooked as never before in peace time.

Essentially, late on the night of January 16 (the day Army Chief General V K Singh approached the Supreme Court on his date of birth issue), central intelligence agencies reported an unexpected (and non-notified) movement by a key military unit, from the mechanised infantry based in Hisar (Haryana) as a part of the 33rd Armoured Division (which is a part of 1 Corps, a strike formation based in Mathura and commanded by Lt Gen. A K Singh) in the direction of the capital, 150 km away.

Any suspicion was still considered much too implausible, but lookouts were alerted as a routine step. This was part of a protocol put in place in June 1984 when some mutineers from Sikh units had moved towards the capital in the wake of Operation Bluestar.

The lookouts confirmed the movement of what looked like a sizeable unit. It was soon identified as an entire unit of Mechanised Infantry, with its Russian-made Armoured Fighting Vehicles (AFVs), carried on 48 tank transporters. The movement was towards the capital, which was odd.

No such thing had been notified. The Army Day celebrations had ended just the previous day (January 15).

It was still a cause for curiosity and some confusion — more than much concern — because, over the decades, New Delhi has come to be totally relaxed and trustful of the apolitical and professionally correct nature of its military leadership.

The situation changed rapidly, though. Reports came in of yet another military movement "towards" Delhi. This unit was identified as a large element of the airborne 50 Para Brigade based at Agra.

The lookouts were activated south of Delhi as well and the column was identified.

By this time, both columns were being tracked and "watched". A bemused establishment raised an alert of sorts. The Defence Minister was informed. Immediately, the Centre put in motion an old contingency plan to delay just such a move.

It issued a terror alert with instructions to police to carefully check all vehicles on the highways leading to Delhi. The objective was to slow down traffic. The Prime Minister was informed at the crack of dawn on January 17. Quiet checks carried out on the location and status of key formations and their commanders, particularly in the northwestern region, revealed nothing abnormal at all. Defence Secretary Shashi Kant Sharma was asked to cut short his visit to Malaysia. He returned.

After the briefing, he opened his office late at night and asked Lt Gen. A K Choudhary, Director General Military Operations, to see him and explain what was going on. Gen. Choudhary, it seems, knew about the move of the Paras (the Para Brigade is controlled directly by the DGMO) and said it was a routine exercise.

He was asked to return with full facts about the mechanised unit. This he did soon enough. The explanation was still the same: the Army was carrying out exercises to check its ability to make quick deployments of key units during fog. He was told to send the units back immediately. Both formations were halted, and sent back within hours.

The mechanised unit, sources said, had parked itself at an industrial park near Bahadurgarh abutting West Delhi's Najafgarh. The Paras were staying put in the barracks of an artillery regiment — 79 Medium — not far from Palam.

The Army's explanation that it was all a simple fog-time exercise was then viewed with scepticism at the highest level. The question: Why was the well-set protocol, that any military movement, at any time, in the NCR (National Capital Region) has to be pre-notified to MoD (Ministry of Defence) not followed?

The Army's justification for the specific movements did sound plausible though. The mechanised units, they said, were checking out their ability to move and deploy rapidly in fog, should a contingency arise. It could not have driven westwards (towards Ferozepur or Fazilka) as that would have alarmed Pakistan since the move had not been notified to them.

There was a more elaborate explanation for the paratroopers' movement. The mandated time for the Agra-based Paras to get airborne in an emergency is just two hours. It was simpler when they were transported by aircraft based "in situ", at the same military complex in Agra.

The new designated transport for them is the faster, bigger and brand new C-130J Hercules. The IAF has based the C-130s at Hindon, across the Yamuna, east of Delhi. Since fog lifts in Agra much later (11.30 am) than at Hindon (8.30 am) in January, the Army was checking out the possibility of transporting the paratroopers to Hindon by road to "marry" them with the C-130s, rather than wait for the planes to land at Agra, and thereby save time.

In the process, the Army said, they discovered many glitches. These are now being ironed out. For example, it was found that the shoulder-fired missiles, standard equipment with Para units, were stored not in Agra, as decided several years earlier, but at Bharatpur as was the case originally.

So the columns were delayed by that detour and the stop at Bharatpur to pick up their missiles, and thereby also forced to take a longer route to Delhi. The good lesson learnt: all of the Paras' equipment must now be based where their home is, at Agra.

But this was questioned too. Did the mechanised units have to come as far as the outskirts of Delhi to check out their readiness? And Hindon is a long distance from Palam/Gurgaon. Even on a reasonable day, an Army convoy might take longer moving from here to Hindon given the snarls on Outer Ring Road and NH-24, than if only it had crossed the Yamuna at Agra itself and driven through Uttar Pradesh, parallel to GT Road. Why was the IAF not informed of this exercise? Again, the Army's explanation is they did not want to hold an elaborate exercise involving the IAF etc. or cause alarm.

The government also noted the fact that the C-130s were not even in Hindon then. They were in Jaisalmer, rehearsing at their staging base for the Republic Day flypast. Yet another reason some in the government were curious was that between Army Day (January 15), and Republic Day (January 26), when so many Army units are involved in parades, such exercises are rare, particularly around the capital.

*The Indian Express* has had detailed conversations with key people and sources at the very top of the political, civil and military leadership. There is unanimity over General V K Singh's impeccable reputation as a sound, professional soldier, earned over nearly 42 years of distinguished service to the Army. Nobody is using the "C" word to imply anything other than "curious". All else is considered an impossibility.

But so strained has the political-military relationship been these weeks, that nothing is easily dismissed as a routine misdemeanour. The timing — the Chief's petition on his date of birth was filed on the morning of January 16 — did not help.

Sources speak of confusion and unease in the government. To be fair, the MoD's considered view now seems to be that it was a false alarm, caused by some non-adherence to Standard Operating Procedures (SoPs) by the Army and an alarmist civil/political reaction on a particularly distrustful day.

We learn, however, as a consequence, that certain "important correctives" have been put in place. Incidentally, the Home Ministry has turned down the Army Headquarters' recommendation (subsequent to the events of January 16/17) to appoint Lt Gen. Choudhary as D-G Assam Rifles, the paramilitary force it controls.


These are the bare facts of an unusual set of events. It is too early to answer all the 'hows, whys and the what-nexts' of this. Or to say whether it was an avoidable case of neurosis the Indian establishment is — mercifully — not familiar with.

These facts may indeed be officially denied for now. But these will be debated for a long time, forcing the UPA to introspect on its mismanagement of the delicate civil-military relationship, bruised as it is now by charges of corruption, bribes and bribe offers and indiscipline. These will also have a bearing on the future course of higher defence organisation and control in India.

(AJMER SINGH contributed to this report)



Defence Minister A K Antony and Army Chief Gen. V K Singh at the new gravestone of Field Marshal Sam Manekshaw in Ooty on Tuesday.




**WHAT HAPPENED**

- On Jan 16, an entire unit of mechanised infantry based in Hisar with its fighting vehicles began moving towards Delhi. It parked near Najafgarh
- Sizeable section of the Agra-based 50 Para Brigade also moved to near Palam
- Both were stopped and ordered to be moved back

**WHAT ARMY SAYS**

- These were exercises to check effectiveness in fog
- Troops moved towards Delhi, not outward, westward since Pakistan hadn't been notified
- The Paras were being moved to check out possibility of their "marrying" with the C-130s in Hindon

**UNANSWERED QUESTIONS**

- Why wasn't Ministry of Defence notified?
- Did the units have to come so far towards Delhi?
- Why was the IAF not informed?

**BASELESS REPORTS, SAYS MINISTRY OF DEFENCE**

**Defence Ministry spokesperson Sitanshu Kar:**

"Such reports are completely baseless and we categorically deny the same."

**ARMY DOES NOT DENY MOVEMENT: ROUTINE TRAINING**

**Maj Gen S L Narasimhan, Additional Director General, Public Information,** did not deny the movements, but said these were routine.

"These were routine training at the formation-level to check the effectiveness of mobilisation as per Standard Operating Procedure of local formations. Almost all units of the Army carry out a number of such training at different times of the year."

- Asked if mobilisation from the two cantonments were authorised, Narasimhan said: "Such routine training does not need authorisation."
- Why were the troops suddenly called back? "Once the effectiveness of the mobilisation was checked, the troops were called back as per Standard Operating Procedure."
- When was the last time that troops were moved on this scale? "Even formation-level (higher than this scale) mobilisation practices are carried out routinely."
- Asked if the Ministry of Defence sought written reports from the commanders, Narasimhan said: "No such explanation has been asked by the MoD."

> **PM was informed at the crack of dawn on January 17. Quiet checks carried out on the location and status of key formations and their commanders, particularly in the northwestern region, revealed nothing abnormal.**

> **There is unanimity over Gen. Singh's impeccable reputation as a professional soldier, earned over nearly 42 years of distinguished service. Nobody is using the 'C' word to imply anything other than 'curious'.**

*திருக்கும். குடியரசு தினத்திற்காக! (அது ஜனவரி 26ல்).*

*இப்படி முன்னும் பின்னும், விழாக்கள் இருக்கும்போது இராணுவத்தின் இரண்டு பிரிவினர் ஏன் டெல்லியை நோக்கி அதிக வேகத்தில் நகர்ந்திட வேண்டும்?*

*இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுவின்இந்த வினாக்களைத் தொடர்ந்து இன்னொரு நிகழ்வு.*

*ஹரியானாவிலிருந்து டெல்லி நோக்கி வந்த இராணுவ பிரிவு, அதி நுட்பம் வாய்ந்த பிரிவு. போரில் பயன்படுத்தப்படக் கூடிய கனரக வாகனங்களைக் கொண்டது. இவை ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை. இராணுவப் பிரிவின் ஒரு பகுதிக்கு மட்டும் தான் இந்த வாகனங்கள் சொந்தம். இந்தப் போர் வாகனங்களை* 'AFVs' - ARMOURED FIGHTING VEHICLES *ஆயுதங்கள் பொருத்தப்பெற்ற வாகனங்கள் என்றழைக்கின்றார்கள்.*

*ஒவ்வொரு இராணுவ வண்டியும் 49 பீரங்கிகளைச் சுமப்பன.*

*இராணுவத்தின் இந்தப் பிரிவை* UNIT OF MECHANISED INFANTRY *"இயந்திர மயமாக்கப் பட்ட காலாட்படை" என அழைக் கின்றார்கள்.*

*போர்களம் நோக்கி மட்டுமே நகர்ந்திட வேண்டிய இந்த இயந்திர மயமாக்கப்பட்ட காலாட்படை ஏன் டெல்லியை நோக்கி நகர்ந்திட வேண்டும்?*

*இதன் நோக்கம் சந்தேகமானதே!*

*இதனை மெத்த ஆதங்கத்தோடு ஆங்கிலத்தில் இப்படிக் குறிப்பிடுகின்றார் (*The movement towards capital was odd*). (*Source Indian Express 4.4.2012, front page para 6.*)*

*இது போன்ற வினாக்களுக்கு முறையான விடை இராணுவ அதிகாரிகளிடமிருந்து கிடைக்கவில்லை. இதனால் தான் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஓர் ஆய்வை நடத்திற்கு. அதனால் தான் நாட்டு மக்களின் பார்வைக்கும் நாட்டை பரிபாலனம் செய்பவர்களின் பார்வைக்கும் இதனை கொண்டுவந்தது.*

## இராணுவத்தின் விளக்கம்

*இராணுவ தளபதிகள், மூச்சுவிடாமல் ஒரே பதிலைத்தான் சொல்லி வருகின்றார்கள். அது, பனி மூட்டத்தில் நமது படைகள் போதிய வேகத்தில் நகர்ந்திட முடியுமா? என்பதை சோதிக்கவே அன்று அந்த நடவடிக்கை. இதை ஒரு வழக்கமான பயிற்சி என்றும் சொல்லி வருகின்றார்கள்.*

*அன்று இராணுவ செயலாளர்* "DEFENCE SECRETARY" *இடமும் அதையே சொன்னார்கள். பின்னர் தங்களிடம் பேசிட வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரை யாளரிடமும் அதையே சொன்னார்கள்.*


*இராணுவத்தின் இந்த விளக்கத்தை அன்றே நமது மேல்மட்ட அதிகாரிகளே ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களே அதை சந்தேகங்கள் கொண்டே பார்த்தார்கள்.* Viewed with skepticism *என்றே இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறுகின்றது.*

*ஆனாலும் ஒரு பெரிய கேள்வி தொக்கி நிற்கின்றது.*

*அதாவது ஓர் அழுத்தமான - இறுக்கமான விதி ஒன்று இராணுவ ஒழுங்குடன் நம் நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. அது, தலைநகர் டெல்லியை நோக்கி எந்தப் படையாவது நகர்ந்திட வேண்டும் என்றால் அது முறையான அரசின் அனுமதியின் கீழ் தான் நகர்ந்திட வேண்டும் என்பதே! அந்த விதி ஜனவரி 16 ஆம் நாள் நகர்ந்த படைகளால் ஏன் கடைப்பிடிக்கப் படவில்லை. இதற்கு இராணுவம் இன்றளவும் எந்த திருப்தியான பதிலையும் சொல்லவில்லை.*

*இனி இந்தப்படைகள் 150 கிலோ மீட்டர் தூரம் வரை வந்துதான் தங்கள் திறமையை சோதிக்க வேண்டுமா? அதுவும் டெல்லி நோக்கித்தான் வந்திட வேண்டுமா?*

*இது வழக்கமான ஒரு பயிற்சிதான் என்றால் முக்கிய பயணமாக மலேசியா*




சென்றிருந்த இராணுவ தளபதி ஏன் வரவழைக்கப்படவேண்டும். அவர் ஏன் நடு இரவுக்கு பின்னும் தனது அலுவலகத்தில் இயங்கிட வேண்டும்.

இராணுவத்தின் தலைமைக்கும் - அரசியல் தலைமைக்குமிடையே நிலவும் உறவு

இது அண்மையில் மிகவும் நெருடல் நிறைந்ததாக ஆகிவிட்டது. குறிப்பாக தளபதி ஏ.கே. சிங் இன் பிறந்த தேதி எது என்ற பிரச்சனை. இதில் ஜனவரி 16 ஆம் தேதி தான் தளபதி ஏ.கே. சிங் நமது உச்ச நீதிமன்றத்தை அணுகுகின்றார். அன்று இந்த இராணுவ முற்றுகை நடக்கவுமிருந்திருக்கின்றது.

ஆனால், இந்த இரண்டு நிகழ்வு களுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை என் கின்றது இந்தியன் எக்ஸ்பிரஸ். வேறு நோக்கம் இருந்திருக்கலாம் என்கிறது கட்டுரை. உச்சநீதிமன்றத்தில் தீர்வு தேடிடும் ஒருவர் வேறு தீர்வுகளை தேடமாட்டார் என்பதே பொது அறிவு.

உண்மையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரை ஒரு முன்னெச்சரிக்கை என்பதை அரசு உணர்ந்திட வேண்டும். நிச்சயமாக நமது அரசு அதை உணர்ந்திருக்கும் என்றே நாம் நம்புகின்றோம்.

அதே நேரத்தில் அரசுக்கிருக்கும் நெருக்கடியையும் நம்மால் உணர முடிகின்றது. உண்மையிலேயே அங்கே ஓர் ஆட்சி கவிழ்ப்பிற்கு ஏற்பாடுகள் நடந்திருந்தால் அதை அரசு வெளியே சொல்ல முடியாது. காரணம் மக்கள் நெஞ்சுடைந்து போவார்கள். ஆனால் அரசு நிச்சயமாக உள்ளுக்குள் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கும் என்றே நாம் நம்புகின்றோம். அது நடக்கவில்லை என்றால் உண்மை யிலேயே நாம் ஓர் ஆபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம் என்றே பொருள்.

## பாரதத்தைப் பாழாக்கத் துடிக்கும் மர்ம கும்பல்

நம் நாட்டில் ஓர் உண்மை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. அது சங்கப்பரிவாரத்தின் அவதாரங்களுள் ஒன்றான அபிநவ் பாரத்தின் நடவடிக்கைகள்.

இந்த அபிநவ் பாரத், என்ற அமைப்பு தேச தந்தை காந்தியைக் கொலை செய்த கோட்சேயின் குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வருகின்றது.

இவர்கள் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்கிடும் சதி திட்டம் ஒன்றை தீட்டி முழுவேகத்தில் அதனை செயல்படுத்தி வருகின்றார்கள். அபிநவ் பாரத், நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தை எடுத்துவீசி விட்டு அந்த இடத்தில் இந்துத்துவ சட்டம் ஒன்றை யாத்து தயாராக வைத்திருக்கின்றது.

அது "இந்துராஷ்டிராவின் அரசியல் சாசனம்". அதில் ஜனநாயகம் மக்கள் பிரதிநிதித்துவம் என்பவையெல்லாம் இல்லை. மக்களால் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கும் ஆட்சியையும் அரசையும் கவிழ்த்துவிட்டு ஒரு சர்வாதிகார ஆட்சியை நிலை நாட்டிட திட்டம் தீட்டி நீண்ட நெடுநாள்களாக இதற்கான முயற்சிகள் தயாரிப்புகள் இவற்றை செய்து வருகின்றார் கள். செயல்பட்டு வருகின்றார்கள்.

இந்து ராஷ்டிராவுக்கான தலைமைச் செயலகம் ஒன்றை யூதர்களின் ஆட்சி நடக்கும் இஸ்ரேலின் நகர் டெல் அவீவில் அமைத்துள் ளார்கள்.

இந்து இராஷ்டிராவுக்கான தேசிய சின்னம் ஒன்றும் புனையப்பட்டு பயன் படுத்தப்பட்டு வருகின்றது.

அவர்கள் அந்த அரசை "The Hindu Rashtra - In Exile" வெளியிலிருந்து செயல்படும் இந்துராஷ்டிரம் என்று அழைத்து வருகின்றார்கள்.

இந்தியாவில் இந்து ராஷ்டிராவை அவர்கள் ஓர் இராணுவப் புரட்சியின் வழி கொண்டு வந்திட திட்டம் தீட்டியுள்ளார்கள்.

அபிநவ் பாரத் -ஐ சார்ந்தவர்கள் இராணுவப் புரட்சி எனப் பேசிக் கொண்டு வாளாவிருக்கவில்லை. மாறாக அதற்கான ஆக்கப்பூர்வமான பயிற்சி கூடங்களை நடத்தி வருகின்றார்கள். அவற்றுள் தலையாயது மராட்டிய மாநிலத்தில் நாக்பூர் மற்றும் நாசிக் ஆகிய இடங்களில் நடந்து வரும் போன்சாலா.

## (பௌசர) போன்சாலா இந்து இராணுவப் பள்ளி - BHONSALA MILITARY SCHOOL - தீவிரவாதம்

இந்த போன்சாலா இந்து மிலிட்டரி பள்ளியில் இந்து இளைஞர்களைச் சேர்க்கின்றார்கள். அவர்களுக்கு மூளைச் சலவைச் செய்யப்பட்டு இந்துத்துவா தலையில் ஏற்றப்படுகின்றது. பின்னர் இராணுவப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சிகளில் தேறி வருபவர்கள் இராணுவத்தில் சேர்க்கப் படுகின்றார்கள். நமது இராணுவத்தில் பணியாற்றுபவர்களே பயிற்றுவிக்கின்றார்கள். இராணுவத்தில் ஓய்வு பெறுபவர்கள், இதில் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

இந்த இந்து இராணுவ பள்ளியை தொடங்கியவர், அப்போதை இந்து மகா சபையின் தலைவர் டாக்டர் மூஞ்சே என்பவர் தான். ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பைத் தொடங்கியவர்களில் இவரும் ஒருவர். இராணுவப் பள்ளிக்காக நிறுவப்பட்ட அமைப்பே CENTRAL HINDU MILITARY EDUCATION SOCIETY *(1937)* "மத்திய ஹிந்து இராணுவப் பயிற்சி சங்கம்".

இந்த வருடம் இந்த கல்வி நிலையம் தனது 75வது ஆண்டை எட்டுகின்றது. இதற்கு சிறப்பான விழாக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நமது இராணுவத்தில் Lt. Colonel லெப்டின்னட் கலோனலாக இருந்த, பிரசாந்த் புரோகித் இந்த பள்ளிக் கூட வளாகத்தில் தான் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு குண்டுகளைச் செய்யவும், முஸ்லிம்கள் குழுமுமிடத்தில் வைத்திடவும் பயிற்சிகளைத் தந்தான்.

இதே புரோகித் தான் இந்து ராஷ்டிராவை அமைத்திட நமது இராணுவ செலவிலேயே இஸ்ரேல் சென்று வந்தான்.

இந்த போன்சாலா இந்து இராணுவப் பள்ளியை போலவே மகாராஷ்டிரா மிலிட்டரி ஃபவுண்டேஷன் என்ற இராணுவப் பள்ளியும், இந்து இளைஞர்கள் வழி இராணுவத்தை இந்து மயமாக்கி வருகின்றது.

இந்த உண்மைகளையெல்லாம் முன்னாள் மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப்படையின் தலைவர் தியாகி ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்தார். இந்து ராஷ்டிரா ஒன்று இராணுவப் புரட்சி நமது நாட்டில் ஏற்படும் ஆபத்து இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்து விட்டதாலேயே அவர் கொலை செய்யப்பட்டார்.

தான் கொலை செய்யப்படுவதற்கு முன், இந்த உண்மைகளையெல்லாம் உள்துறை அமைச்சரிடம் ஹேமந்த் கர்கரே கூறி இருக்கின்றார். இதற்கு உள்துறை அமைச்சர் சொன்ன பதில் "இதை யாரிடமும் சொல்ல வேண்டாம்" என்பதே.

ஆனால் பிற்றை நாள்களில் இந்துத்துவ வாதிகள் கைது செய்யப்படுவதற்குப் பதிலாக,




ஹேமந்த் கர்கரே கொலை செய்யப் படுகின்றார்.

இந்த உண்மைகளையெல்லாம் "கர்கரேயை கொலை செய்தது யார்? - இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்" என்ற நூலில் விளக்கமாக முன்னாள் மராட்டிய காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

இவற்றையெல்லாம் நீதிமன்றங்கள் வரை கொண்டு சென்றுள்ளார்கள் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களும், பீகார் மாநில முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராதா காந்த் யாதவ் அவர்களும். இப்போது மும்பை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கும், உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் நடைபெற்று வருகின்றன.

ஆனால் இந்த எச்சரிக்கைகளை யெல்லாம் நமது மத்திய அரசு முற்றாகப் புறக்கணித்து வருகின்றது.

## இராணுவப் புரட்சியைத் தடுக்க அரசு செய்ய வேண்டியது

இராணுவத்தில், இந்துத்துவ தீவிரவாத இராணுவ பயிற்சி பெற்றவர்கள், எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்ற கணக்கொன்று எடுக்கப்பட வேண்டும். அவர்களை வெளியேற்றிட வேண்டும்.

திட்டமிட்டு சிறுபான்மையினரை குறிப்பாக முஸ்லிம்களை இராணுவத்திலிருந்து வெளியே வைத்திட மேற்கொள்ளப் பட்டுவரும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும்.

இராணுவத்தில் எத்தனை முஸ்லிம்கள் இருக்கின்றார்கள் என்ற கணக்கெடுப்பை முறியடித்த ராணுவ அதிகாரிக்கும், இந்துத்துவ வாதிகளுக்கும் தொடர்பிருந்தது என்ற உண்மை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே ஒரு பெரும் ஆபத்து. இதனால் இராணுவம் ஒரு தலைபட்சமாக ஆகிவிடாமல் காப்பாற்றிட வேண்டும.

இந்துத்துவ அமைப்புகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக தடை செய்ய வேண்டும். இனிமேலும் இதில் புதைந்து கிடக்கும் ஆபத்தை புறக்கணிக்கக் கூடாது.

## அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரைக்கு எதிராக வந்தக் கருத்துக்கள்

நமது இராணுவ அமைச்சர், இது வழக்கமாக மேற்கொள்ளப்படும் பயிற்சி எனக் கூறினார். அத்தோடு இராணுவத்தின் தேசப்பக்தியைக் குறைத்துக் காண்பது தவறு என்றார்.

ஒரு பொறுப்பான இராணுவ அமைச்சர் இப்படித்தான் பேசிட வேண்டும். ஆனால் நமது இராணுவ அமைச்சர் இதற்கு முன்னால் எப்போதெல்லாம் இராணுவம் பயிற்சியின் ஒரு பகுதியாக ஏக காலத்தில் டெல்லியை நோக்கி நகர்ந்தது என்பதைக் குறிப்பிடவில்லை.

எல்லோரும் ஓர் உண்மையை ஒத்துக் கொள்கின்றார்கள். அஃது, இராணுவம் பாதுகாப்புத்துறை செயலாளருக்கும், இராணுவ அமைச்சருக்கும் தகவல் தராமல்தான் டெல்லியை நோக்கி நகர்ந்தது என்பது தான் அந்த உண்மை.

ஒரு கட்டுப்பாடான இராணுவம் இப்படி நடந்திடலாமா? அதற்கு தரும் விளக்கம் என்ன?

அதே போல் "National Capital Region" என்ற தலைநகர் பகுதியை நோக்கி முன் அனுமதி இல்லாமல் இராணுவம் நகரக் கூடாது என்ற விதி, ஒரு இராணுவ கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இதையும் இராணுவம் மீறி இருக்கின்றது. இதற்கும் தெளிவான விளக்கங்கள் இல்லை.

இராணுவம் சொல்லும் விளக்கங்களுக்கு சப்பைக்கட்டு கட்டிட வந்த பத்திரிக்கைகளும் இந்த விஷயத்தை தொடவில்லை.

இதனால் இராணுவம் விதிகளுக்கெதிராகவே பாசறைகளிலிருந்து வெளிப்போனது தலைநகரை நோக்கிப் பாய்ந்திருக்கின்றது.

**பத்திரிக்கைகள்**

இந்து பத்திரிக்கை இப்படியொரு கட்டுரையை எழுதும் உரிமை, இந்தியன் எக்ஸ்பிரஸுக்கு உண்டு என எழுதும் உரிமையை அங்கீகரிக்கின்றது.

ஆனால் தொடர்ந்து கட்டுரையை எழுதியவர்கள் எல்லாவற்றையும் மிகைப்படுத்தி எழுதிவிட்டார்கள். இது அடாத செயல் எனச் சாடுகின்றது.

இஃது முன்னுக்குப் பின் முரணான கருத்து. இது இந்து பத்திரிக்கையின் தலையங்கம் 5.4.2014 இல் வந்திருக்கின்றது. தலையங்கத்தில் இந்து பத்திரிக்கை இப்படி தடுமாறியதே இல்லை இதுவரை.

'தி இந்து' பத்திரிக்கை தனது தலையங்கத்தில் இராணுவ தளபதி வந்துதான் படைகளை மீண்டும் பாசறைக்குள் அனுப்பிட வேண்டும் என்றில்லை. இஃது மிகைப்படுத்திய எழுத்து எனக் கூறிற்று.

இதில், 'தி இந்து' பத்திரிக்கை எந்து ஆதாரத்தையும் காட்டிடவில்லை. அன்றைய தினம் பாதுகாப்புச் செயலாளர் மலேசியா சென்றிருந்தார் என்பதையோ, அவர் திடுதிடுப்பென இந்தியா வரைவழைக்கப் பட்டார் என்பதையோ அவர் வந்துதான் இராணுவத்தை மீண்டும் பாசறைக்கு அனுப்பினார் என்பதையோ இந்து பத்திரிக்கை மறுக்கவில்லை.

சாதாரணமாக 'இந்து' பத்திரிக்கை இது போன்ற விவகாரங்களில் இராணுவ தளபதி பாதுகாப்பு செயலர், அமைச்சர் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்து அவற்றையும் தான் எழுதிய கட்டுரையில் வெளியிடும். அப்படி எதையும் இந்த விவகாரத்தில் சொன்னதாகத் தெரியவில்லை.

**டெக்கான் கிரானிக்கிள் தலையங்கம்**

இந்த தலையங்கமும் இராணுவத்தின் கூற்றுக்கு வக்காலத்து வாங்கி வாதாடி இருந்தது. ஓர் இராணுவ புரட்சி ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயற்சி என்பவையெல்லாம் மிகைப்படுத்துதல், ஓர் இராணுவப் புரட்சிக்கு ஒரு கொள்கையின் கீழ் ஒன்றுபட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

ஆனால் டெக்கான் கிரானிக்கிள் பத்திரிக்கைக்கு இந்து இராஷ்டிராவைப் பற்றியோ ஓர் இந்து ராஷ்டிராவுக்காக இரகசியத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருந்தது என்பதோ ஏனோ தெரிந்திடவில்லை.

தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. காரணம், எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூல் பரவலாக அனைவரும் அறிந்த ஒன்று. தேசிய நாளிதழான டெக்கான் கிரானிக்கிள் இதை அறியாமலிருக்க வாய்ப்பில்லை.

இந்த நூலில் இராணுவ தளபதியாக இருந்த புரோகித் இன் லேப்டாப்பில் என்ன இருந்தது என்பதை முன்னாள் காவல் துறை IG உயர் அதிகாரி மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். அதில் இந்து ராஷ்டிராவுக்கான திட்டமும் தெளிவாக்கப் பட்டிருந்தது.

ஆனால் இப்போது மனிஸ் திவாரி அனைத்தையும் தெளிவாக்கிவிட்டார்.

# மறுப்புக்கு விளக்கம்

**6**.9.2015 அன்று திருப்பூரில் நடந்த "மௌனத்தின் சாட்சியங்கள்" நூல் அறிமுக நிகழ்வை அக்டோபர் 2015 மாத வைகறை வெளிச்சம் இதழில் வெளியிட்டிருந்தோம். அதற்கான மறுப்பு ஒன்றை நாவலாசிரியர் சம்சுதின் ஹீரா அவர்கள் வைகறை வெளிச்சத்திற்கு அனுப்பி இருந்தார்கள். அதனை "வைகறை வெளிச்சம்" நவம்பர் 2015 இதழில் வெளியிட்டிருந்தோம்.

அந்த மறுப்புக்கு மறுப்பு ஒன்றை டிசம்பர் இதழில் வெளியிட அந்த நாவல் வெளியீட்டு விழவில் கலந்து கொண்ட தாருல் இஸ்லாம் திருப்பூர் பொறுப்பாளர் காதர் மைதீன் அவர்கள், அனுப்பி இருந்தார்கள். தவிர்க்க இயலாத சில காரணங்களால் அதனை டிசம்பர் ஜனவரி இதழ்களில் வெளியிட இயலவில்லை.

அதனை பெப்ருவரி இதழில் வெளியிடுகின்றோம். நாவலாசிரியர் பல கேள்விகளை எழுப்பி இருந்தார். இதே வினாக்கள் கம்யூனிச சிந்தனையுள்ள அனைவருக்கும் இருக்கும் என்பதால் எல்லா வினாக்களுக்கும் விளக்கம் தந்திட முயற்சி செய்திருக்கின்றோம். நிகழ்ச்சியில் 2006 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் நாள் நடந்த நிகழ்வு ஒன்றை நான் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த நிகழ்வு கோவையில் காவல்துறையைச் சார்ந்தவர்களே 1998-ஐ போல் ஒரு குண்டுவெடிப்பு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தது. அன்று காவல்துறையினர் 8 இடங்களில் குண்டு வைக்க ஏற்பாடு செய்திருந்தனர். இதில் இஸ்லாத்திற்கு வந்த சில முஸ்லிம்களை ஏவிவிட்டனர். காவல் துறையில் ஏவிவிடப்பட்ட இவர்கள் அப்போது மக்கள் மன்றத்தில் மிகவும் பிரபல்யமாகப் பேசப்பட்டு வந்த மனித நீதி பாசறையின் பெயரில் குண்டு வைத்திட வேண்டும். இந்த முயற்சியில் அவர்கள் முதல் அடியை வைத்தபோதே ஊடகங்கள் செய்தியை அதிரடியாக 'Flash News' ஆக வெளியிட்டன. மனித நீதி பாசறையின் தலைவர் மு. குலாம் முஹம்மது அவர்கள் ஊடகங்களை அழைத்து ஒரு 'Press Meet'-ஐ நடத்தி உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். இதனால் காவல் துறையின் / உளவுத்துறையின் சதி அம்பலமானது. தொடர்ந்து மனித நீதிப்பாசறையின் தலைவர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் குண்டு களை வைத்திட முயற்சியை மேற்கொண்ட காவல்துறை அதிகாரி இரத்தின சபாபதி இடமாற்றத்திற்கும், பணிமாற்றத்திற்கும் உள்ளாக்கப்பட்டார்.

மனித நீதி பாசறையின் தலைவர் மேற்கொண்ட முயற்சியால் காவல்துறையின் சதி அம்பலமானது முஸ்லிம்கள் தப்பித்தார் கள். காவல்துறையினர் தண்டனையாக இடமாற்றத்தைப் பெற்றார்கள். கோவை குண்டு வெடிப்புப் பற்றியும் இன்னும் பல குண்டு வெடிப்பு பற்றியும் அஜித் ஷாகி ஒரு குற்றப்பத்திரிகையை தயாரித்து வருகின்றார். அந்தக் குற்றப்பத்திரிகை உளவுத்துறைக்கு எதிரானது. அந்த தகவல்களை அவர் 'Charge Sheet' என்றே தலைப்பிட்டுக் கூறுகின்றார். இதனை வைகறை வெளிச்சம் இதழில் வெளியிட்டிருக்கின்றோம். போதிய ஆவனங் கள் கிடைத்தவுடன் அதை நீதிமன்றத்தில் வழக்காகத் தொடர இருக்கின்றார்.

இது போல் அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு, ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, சம்ஜோத்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு இவற்றையெல்லாம் செய்தது இந்துத்துவ தீவிரவாத அமைப்புகள். பழி சுமந்தது முஸ்லிம்கள். இதையும் அசீமானந்தா போன்றவர்கள் ஒத்துக் கொண்டபின் தான் உலகம் அறிந்தது. அல்லாமல் நமது புலனாய்வுத் துறைகள் கண்டு பிடித்ததில்லை.

இந்துத்துவ தீவிரவாதிகள் நாட்டின் செல்லப் பிள்ளைகளாகவே நடத்தப்படுகின்றனர்.

அதனால் கோவை குண்டு வெடிப்புகள் முறையான ஒரு ஆய்வுக்கு உட்படுத்தி இருந்தால் நண்பர் சம்சுதீன் வேறுபல உண்மைகளைக் கண்டு பிடித்திருப்பார். அந்த ஆய்வை எந்த வகையில் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே 2006 ஆம் ஆண்டு ஜூலை நிகழ்வை குறிப்பிட்டேன். கோவை குண்டு வெடிப்புகள் நடந்து 18 ஆண்டுகளாகி விட்டன. இப்போதுதான் ஓர் மாற்றுப் பார்வையை அஜித் ஷாஹி உரக்க முழங்கிட தொடங்கியுள்ளார். உடனேயே வேறுபக்கம் பார்க்க வேண்டாம். மாற்றுப் பார்வைத் தேவை இல்லை. முஸ்லிம்களின் குற்றத்தை உறுதி செய்கின்றேன் என்றொரு நாவலை எழுதுவது ஏன்? எனக் கேட்கத் தோன்றுகின்றது.

**யாசரின் மனநிலை**

அடுத்து நாவலில் இடம் பெறும் யாசரின் மனநிலை. பொவாக இதுபோன்ற புதினங்களில் நாவலாசிரியர்கள், உண்மைக் கதாபாத்திரத்தை வாசகர்கள் மனதில் பதிய வைக்கவே சில கற்பனைகளைச் சேர்ப்பார்கள். ஆனால் இந்த நாவலில் குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பெற்ற யாசிர் மனநிலை பாதிக்கப்பட்டவராகக் காட்டப்படுகின்றார். கோவை குண்டு வெடிப்புகளில் அப்பாவிகள் பலரும் கைது செய்யப்பட்டார்கள். இந்த அப்பாவிகள் இன்றும் சிறையிலிருக் கின்றார்கள். ஆனால் யாரும் மனநிலை பாதிக்கபடவில்லை. ஆக கதாபாத்திரமே கற்பனை அல்லது பொய்யானது. நான் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒரு கள ஆய்வை நடத்தி விட்டே மேடைக்கு வந்தேன். மேடையிலும் அதையே குறிப்பிட்டேன். ஆனால் அன்பு நண்பர் நாவலில் உண்மைகள் இருக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. வைகறை வெளிச்சத்திற்கு எழுதிய மறுப்பில் குறிப்பிட்டிருப்பது இலக்கிய உலகின் நீதி நெறிகளுக்கு எதிரானது.

**கம்யூனிசமே தீர்வு**

மௌனத்தின் சாட்சியம் நூல் கம்யூனிசமே தீர்வு எனக் குறிப்பிடுகின்றது என நான் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் நாவலாசிரியர் கம்யூனிசமே தீர்வு எனத்தான் குறிப்பிடவில்லை என்கின்றார். நாவலாசிரியர் மதவாதத்தால் மோதல் நடந்ததாகப் பதிவு செய்து விட்டு கம்யூனிசமே தீர்வு என்பதை நேரடியாகவும், மறைமுகமாகவும் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

அதே போல் வைகறை வெளிச்சத்திற்கு அனுப்பிய பதிலில், கோவைக் குண்டு வெடிப்பு நிகழ்வுகளை மார்க்சிய கண் ணோட்டத்தில் ஆய்வு செய்ததாகக் குறிப்பிடு கின்றார்.

சம்பவங்களை யதார்த்தங்களின் அடிப் படையில் ஆய்வு செய்யாமல் நாவலாசிரியர் தூக்கிப் பிடிக்கும், கருத்தியலின் அடிப் படையில், ஆய்வு செய்தால் உண்மைகள் எப்படி வெளிவரும். அதனால் தான் இந்த நாவல் நடுநிலையான நாவல் அல்ல என்கின்றோம். நடுவு நிலையான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுமேயானால் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கும்.

**இஸ்லாம் எங்கே ஆட்சிச் செய்தது?**

இப்படியொரு கேள்வியை வைகறை வெளிச்சத்திற்கு அனுப்பி மறுப்பில் எழுப்பியுள்ளார். நாவலாசிரியர் வரலாற்றை அறிந்திருக்கவில்லை. அதிலும் இஸ்லாமிய வரலாற்றின் அறிச்சுவடியையே அறிந்திருக்க வில்லை என்பதையே தன் மறுப்பில் பறை சாற்றி இருக்கின்றார். இஸ்லாமிய வரலாற்றை யும் அது ஆட்சி செய்த வரலாற்றையும் விளக்கிச் சொல்லும் இலக்கியங்கள் ஏராள மாகக் கிடைக்கின்றன. அவற்றை இனி மேலாவது படிக்க வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களால் மதீனாவில் நிறுவப்பட்ட ஆட்சியைத் தொடர்ந்து இஸ்லாமிய ஆட்சி அரேபிய பெருநிலத்திலும், ரோம, பாரசீக

பேரரசுகளின் பூமியிலும், அகண்டு கொண்டே வந்தது. இந்த ஆட்சியின் தாக்கம் பின்னர் ஐரோப்பாவிற்கும் பரவியது. ஐரோப்பா மட்டும்தான் இன்னும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்திடவில்லை. ஆனால் இஸ்லாத்தின் நிருவாகமுறை, நீதிபரிபாலனம் இவற்றால் ஐரோப்பா பெரிய அளவில் பலனடைந்தது. ஆட்சிக் கலையில் தகசில், தாலுக், வக்கீல், வக்காலத்து போன்ற அரபி மொழி சொற்கள் ஏராளம் புழக்கத்தில் உள்ளன. இன்று இஸ்லாமிய ஆட்சி நடைபெறாத இடங்களிலும் இடம் பெறுகின்றன. இன்றைய நிருவாக முறை இவற்றைத் தத்தெடுத்துக் கொண்டன.

இது போன்ற நீண்ட வரலாறு நூல்கள் இஸ்லாமிய வரலாறு என்ற தலைப்பிலேயே புழக்கத்தில் இருக்கின்றன. படித்தால், இதுபோன்ற பிழையான கருத்துக்களை இனிமேலாவது மாற்றிட வாய்ப்பேற்படும். மனமிருந்தால்.

## வறுமை முற்றாக எங்கே ஒழிக்கப்பட்டது?

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுள்ளார் மௌனத்தின் சாட்சியத்தின் ஆசிரியர். இஸ்லாமிய வரலாற்றில் இறைவனின் தூதர் அவர்களின் ஆட்சியின் இறுதி நாள்களிலிருந்து இது தொடக்கம் கி.பி. 628-632.

பின்னர் உமர் பின் அல் கத்தாப் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்திலும் கி.பி. 634-642. அதே போல் இஸ்லாமிய வரலாற்றில் இரண்டாவது உமர் என அழைக்கப்படும் உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்களின் காலத்திலும் கி.பி. 716-720. இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்டது. மேலும் குறிப்பிட்ட காலகட்டத்தில் ஏழை வரி என்ற ஜகாத் - ஐ தருவோர் நிரம்பவே இருந்தார்கள். வாங்குவோர் யாருமில்லை. அதனால் வசூலிக்கப்பட்ட பணம் பைத்துல் மாலில். அதாவது பொது நிதி கருவூலத்தில் சேர்க்கப்பட்டது.

இந்த வரலாற்றையும், இது போன்ற வரலாற்றையும் நண்பர் படித்தால், உலக வரலாற்றின் மறுபக்கம் அவருக்குத் தெரிந்திட வரும்.

## கம்யூனிசப் பார்வை

நாவலின் நடுவுநிலையோடு ஆய்வை மேற்கொள்ளவில்லை என்பதற்கு ஆசிரியர் அவர்கள் வைகறை வெளிச்சத்திற்குத் தந்த மறுப்பில் தெள்ளிதின் சுட்டிக் காட்டுகின்றார்.

வைகறைக்கு தந்த மறுப்பில், "நான், இந்த நாவலில் சமூகத்தில் மதவாதம் வளர்ந்து, செல்வாக்கு செலுத்திய நிகழ்வுப் போக்கை, மார்க்சீய கண்ணோட்டத்தில் ஆய்வு செய்திருக்கின்றேன் என அப்பட்டமாக ஒத்துக் கொள்கின்றார்." வைகறை வெளிச்சம் பக்கம் -24.

அதே நேரத்தில் பிரிதோர் இடத்தில், "நான் எடுத்துக் கொண்ட கதைக்குள், பக்கச் சார்பின்றி நேர்மையாக நிகழ்வுகளைப் பதிவு செய்ய நினைத்தேன். அதை ஓரளவுக்குச் சரியாகச் செய்துவிட்டதாகவே நினைக்கின்றேன்" என்று கூறுகிறார்.

இல்லை நண்பரே! உங்களுடைய பதிவுகள் மார்க்சீய கண்ணோட்டத்தில் நடந்த ஆய்வு என்பதற்கு மேலே உள்ள உங்கள் கூற்றே சாட்சி!

மார்க்சீயம் இஸ்லாத்தின் மேல் காட்டும் காழ்பும், கசப்பும் உங்களிடம் இல்லாமல் போகுமா. காரணம், நீங்களே சொல்வதைப்போல் . . . ஆனாலும், தனிப்பட்ட முறையில் கம்யூனிசமே அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வானது என்பதை ஆணித்தரமாக நம்புவன் நான்" வைகறை வெளிச்சத்திற்கு மறுப்பு பக்கம் -24. வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டபடி.

## வழக்கறிஞர் பா.ப. மோகன்

வழக்கறிஞர் பாப. மோகன் ஒரு போராளி! அநியாயங்களுக்கெதிராகப் போராடுபவர். அந்த வகையில் பல வெற்றிகளைக் குவித்தவர். அவரால், அவருடைய மேடைப் பேச்சுகளால் அதிகமாகப்

பயனடைந்தவர்கள் முஸ்லிம்கள். ஏன் கோவை வாழ் முஸ்லிம்கள். அரசு இயந்திரம் முற்றாக முஸ்லிம் சமுதாயத்திற்கெதிராக எழுந்து நின்ற போது எதிர்த்து நின்றவர். அதனால் பல சிரமங்களையும் சந்தித்தவர்.

ஆகவே அவரால் நாங்களும் மனித நீதிப் பாசறையும் பயனடைந்திருக்கின்றோம்.

ஆப்பாட்டத்தை நாங்கள் அப்படியே ஏற்றுக் கொள்வதில் ஒரு சிறுதடை. அது உங்களுடைய நாவலைப்பற்றி நீங்களே சொன்னதுதான். அது உங்கள் வார்த்தைகளை அப்படியே பதிவு செய்கின்றேன்.

மௌனத்தின் சாட்சியங்கள் நூல் உண்மைச் சம்பவங்களை தழுவி எழுதப்பட்ட புனைவிலக்கியம். அதில் யாசர் வைஷ்ணவி போன்ற ஒரு சில கற்பனை பாத்திரங்களும் உண்டு. "வைகறை வெளிச்சம், பக்கம்-23- வைகறை வெளிச்சத்திற்கு மறுப்பு".

இப்போது ஒரு கேள்வி பிறக்கின்றது உங்களுடைய கற்பனை படி வழக்கறிஞர் பா.ப. மோகன் அவர்கள் உண்மை என்றார்கள்.

நீங்கள் வைகறை வெளிச்சத்திற்கு எழுதிய மறுப்பில் யாசர், வைஷ்ணவி இவையெல்லாம் கற்பனை பாத்திரங்கள் எனச் சுட்டிக்காட்டவில்லை என்றால் எல்லோரும் அவை உண்மை பாத்திரம் என்றேதான் எடுத்துக் கொள்வார்கள். இப்போதும் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு மட்டுந்தான் இவையெல்லாம் கற்பனைப் பாத்திரம் எனத் தெரியும். உங்கள் நாவல் சுழலும் வட்டாரங்களுக்கெல்லாம் வைகறை வெளிச்சம் பத்திரிகைச் செல்லவில்லை. ஆனால் உங்கள் கற்பனைகள் உண்மை உடை உடுத்தி சில காலம் உலா வந்துவிடும்.

## வழக்கும், வழக்கறிஞர்களும்

1998 பெப்ருவரி 14ஆம் நாள் இடம் பெற்ற கோவை குண்டு வெடிப்புகளில் குற்றம் சுமத்தப்பட்டவர்களில் 1997 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடந்த கலவரங்களில் சிறைபிடிக்கப்பட்ட இளைஞர்கள் குறையாமல் 60 பேர் இருந்தார்கள். இவர்கள் குண்டு வெடிப்புகளில் நடப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னரே சிறைபிடிக்கப்பட்டு விட்டார்கள். அரசாங்க சாப்பாட்டில் சாப்பாட்டில் அரசாங்கத்தின் கட்டுப் பாட்டின் கீழ் இருந்தவர்கள். அவர்களுக்கும் குண்டு வெடிப்புகளுக்கும் எந்தச் சம்பந்த முமில்லை.

அதே போல் அவர்கள் மீது எந்தெந்த வழக்குகளில் பிரிவுகளின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டனவோ அந்தந்த பிரிவுகளின் கீழ் அவர்களுக்கு எதிரான குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் நீதிபதிகள் அவர்களின் மீது வேறு பிரிவுகளைச் சொல்லி தண்டித்தார்கள்.

இவர்கள் மீது எந்ததெந்த பிரிவுகளின் கீழ் தண்டனை வழங்கப்பட்டுள்ளதோ அந்த பிரிவுகளின் கீழ் விசாரணை நடக்கவில்லை. ஆகவே அவர்கள் மீது புதிதாகப் புனையப் பட்டுள்ளப் பிரிவுகளின் கீழ் மீண்டும் விசாரணை நடந்திட வேண்டும். அதன் மூலம் எங்கள் மீது சுமத்தப்பட்ட புதிய குற்றச் சாட்டுகளும் பொய்கள் என்பதை நிரூபிக்கும் வாய்ப்பு எங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நீதிபதி நிராகரித்து விட்டார். அவ்வாறு பல குற்றவாளிகள் மீது தீர்ப்பிலேயே குற்றம் சுமத்தினார்கள் தண்டித்தார்கள்.

1997 நவம்பர் கலவரத்தில் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் இருந்தவர்கள் மீது Rioting கலவரம் செய்தல் என்ற வழக்கு மட்டுமே இருந்தது. இந்தக் குற்றத்திற்கு அவர்களுக்கு எப்படித் தண்டனை வழங்கப் பட்டாலும் அது மூன்று ஆண்டுகளுக்கு மேல் இல்லை. ஆனால் அவர்கள் சிறையிலிருந்தது ஏறத்தாழ 9 ஆண்டுகள்.

இந்த ஒன்பது ஆண்டுகளில் அவர்கள் அனைத்தையும் இழந்தார்கள். பின்னர் தீர்ப்பில் செய்யாத குற்றங்களுக்காக மட்டுமல்ல, சுமத்தப்படாத குற்றங்களுக் காகவும் தண்டிக்கப்பட்டார்கள். அந்த தண்டனை காலத்தை 9 ஆண்டுகளாகத் தந்து

அந்த தண்டனை காலத்தை அவர்கள் சிறையிலிருந்த நாட்களில் ஈடு செய்தார்கள்.

இப்படி செய்யாத குற்றத்திற்காகத் தண்டனையை அனுபவித்து தங்கள் வாழ்க்கையின் பொன்னான இளமைக் காலத்தைப் பறிகொடுத்துவிட்டு சிதைந்தும் நைந்தும், நொந்தும் போன தங்கள் குடும்பத்தவர்களை வந்து பார்த்தார்கள்.

இந்த சோகத்தை சொல்வாரில்லை.

வழக்கில் அம்புகளைத்தான் தண்டித்தார்களே அல்லாமல் எய்தவர்கள் பக்கம் எட்டிக் கூட பார்த்திடவில்லை.

அதை அஜித் ஷாஜி போன்றவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். வழக்கு களில் மறைக்கப்பட்ட ஏன் புதைக்கப்பட்ட உண்மைகள் நிரம்பவே இருக்கின்றன. வழக்கறிஞர்கள் குற்றப்பத்திரிக்கையில் என்ன இருக்கின்றதோ அதற்கு எதிராக வாதங்களை வைப்பவர்கள்தாம் தங்கள் முன் குற்றப் பத்திரிகையில் இல்லாத உண்மைகளை தேடி அலைபவர்களல்ல. அந்த உண்மைகளை தெரிந்தவர்கள் நிறைய சமுதாயத்தில் உண்டு அவர்கள் மௌனமாகவே இருந்து விடுகின்றார்கள்.

## ஜகாத் ஏன்?

ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன் கம்யூனிஸ்ட்டுகள் எழுப்பிய கேள்வி ஒன்றை மௌனத்தின் சாட்சியம் ஆசிரியர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள்.

அன்றைக்கு அவர்களுக்கு அதாவது நமது கம்யூனிஸ்ட் நண்பர்களுக்குச் சொன்ன பதிலே போதும் என்பதால், அன்று அறிஞர் செய்யீத் குதுப் அவர்கள் பதிலைத் தருகின்றோம்.

## அஸ்-ஸகாத் ஏன்?

கம்யூனிஸ்டுகளும், ஐரோப்பிய காலனிக் கொள்கைக்குத் தங்களை அடகு வைத்து விட்டவர்களும் இஸ்லாத்தின் மீது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி வருகின்றார்கள்.

'பணம் படைத்தவர்கள் தருகின்ற (ஸகாத்) தான தர்மங்களைச் சார்ந்து தங்களது வாழ்வை அமைத்துக் கொள்கின்ற விதத்தில் சாதாரண மக்களை இஸ்லாம் அனுமதித்து விட்டது' என்பதே அந்தக் குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டு 'ஸகாத்' என்பது செல்வந்தர்கள் தங்களது தயவால் தருகின்ற யாசகம் என்ற தவறான கருத்தின் அடிப் படையில் அமைந்ததாகும். தவறான இந்தக் கருத்தின் அடிப்படையில் எழுந்த அந்தக் குற்றச்சாட்டும் தவறானதே!

இந்தக் குற்றச்சாட்டை மறுப்பதற்கு நாம் ஸகாத் என்பதையும் ஈகை அல்லது தான தர்மம் என்பதையும் வேறுபடுத்திக் காட்டியாக வேண்டும்.

ஈகை அல்லது தர்மம் என்பது ஒருவர் தாமாகவே முன் வந்து தருவதாகும். இதனை சட்டத்தைக் கொண்டோ, ஆட்சியாளரின் அதிகாரத்தைக் கொண்டோ கட்டாயப் படுத்தி வசூலித்திட முடியாது.

மாறாக ஸகாத் என்பது சட்டத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு கட்டளை. ஸகாத்தைத் தர மறுப்பவர்களை எதிர்த்து அரசு போர் தொடுத்திட வேண்டும். மறுப்பவர்கள் தங்கள் முடிவிலேயே நிலைத்திருப்பார்களேயானால் அரசு அவர்களை ஒரு வேளை கொலை கூட செய்துவிடலாம். ஏனெனில் ஸகாத்தைத் தர மறுப்பவர்கள் அந்நிலையில் இஸ்லாத்தைத் துறந்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

ஆனால் தான தர்மங்களைத் தர மறுப்பவர்கள் மீது இது போன்ற நடவடிக்கை களை எடுக்க முடியாது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் அது முழுக்க முழுக்க தருபவர்களின் சொந்த விருப்பங் களைப் பொறுத்ததாகும்.

பொருளாதாரக் கண்ணோட்டத்தில் கண்டால் உலகிலேயே முதன் முதலாக முறையாக விதிக்கப்பட்ட வரியே 'ஸகாத்' தான். ஸகாத் முறை வழக்கில் வருவதற்கு முன்னால் வரிகள் ஆட்சியாளர்களின்

விருப்பம் போல் விதிக்கப்பட்டு வந்தன. அவ்வாறு தரப்பட்ட வரிகள் ஆட்சியாளர் களின் சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்கே பயன்படுத்தப்பட்டன. ஆட்சியாளர்கள் தங்கள் சொந்த விருப்பங்களை நிறைவேற்றிட பணம் தேவைப்படும்போதெல்லாம் வரியை விதித்தார்கள்.

பெரும்பாலும் வரிச்சுமை ஏழை எளிய மக்கள் மீதே விழுந்தது. இதனால் செல்வந்தர் களை விட ஏழைகளே அதிகமாகப் பாதிக்கப் பட்டனர். பல நேரங்களில் வரி சாதாரண மக்களிடமிருந்து மட்டுமே வசூலிக்கப் பட்டது. இஸ்லாம் தான் முதன் முதலில் வரி வசூலிப்பதில் ஓர் உச்சவரம்பைக் கொண்டு வந்தது. சாதாரண சூழ்நிலைகளில் அரசு அந்த உச்சவரம்பிற்கு மேல் வரியைச் சுமத்திட முடியாது.

இஸ்லாமிய அரசின் அமைப்பில் பொது நிதிக் கருவூலம் தற்கால நிதி அமைச்சகத்தை ஒத்ததாக இருக்கும். எப்படி அரசுக்கு வரவேண்டிய வருவாய்களை வசூல் செய்து அதனைப் பொதுமக்களுக்கு பயன்தரத் தக்க விதத்தில் செலவிடுவதில் இன்றைய நிதி அமைச்சங்கள் செயல்படு கின்றனவோ அதுபோலவே பொது நிதிக் கருவூலம் செயல்படும். வாய்ப்புகள் கிடைக் காததால் தங்களது அன்றாட தேவைகளைச் சம்பாதிக்க முடியாமல் ஆகின்றவர்களையும் அரசாங்கம் கவனித்துக் கொண்டு கண்காணித்துக் கொண்டும் இருக்கும். அரசு இவர்களின் நல்வாழ்வுக்கு ஆவன செய்யும். அதே நேரத்தில் அரசு இவைகளையெல்லாம் தர்மமாகச் செய்கின்றது என்றோ, அல்லது உதவிகளைப் பெறுபவர்கள் ஏளனத்திற் குள்ளாக்கப் படுகின்றார்கள் என்றோ சொல்லிட முடியாது.

ஓய்வு பெற்றவர்களுக்குத் தரப்படுகின்ற ஓய்வு ஊதியத்தையோ, தொழிலாளர் களுக்காக இன்றைய நாட்களில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளையோ யாராவது யாசகம் எனச் சொல்வார்களா? இது அநாதையாகிவிட்ட குழந்தைகள் விஷயத்திலும், வயோதிகர்களின் விஷயத் திலும் பொருந்தும்.

இவர்களுக்கெல்லாம் அரசு உதவி செய்து அவர்களது வாழ்வு வளம் பெற வழிகாணும் போதும் யாராவது இவர்களின் கௌரவம் பாதிக்கப்பட்டு விட்டது என்று கூறுவார்களா? எவரும் கூறமாட்டார்.

ஒரு பொறுப்புள்ள அரசு இதை நிச்சயமாக செய்தே ஆக வேண்டும்.

கசப்பான அனுபவங்கள் பல தந்த பாடங்களின் விளைவாகவும், நீண்ட நெடும் நாள்களாக மானிட இனம் அனுபவித்த சமூக அநீதிகளின் விளைவாகவும் சமுதாயப் பாதுகாப்புப் பணிகளை இன்றைய அரசுகள் மேற்கொண்டுள்ளன. சமுதாயத் துறையில் ஐரோப்பா இருட்டுக்குள் முடங்கிக் கிடந்த காலத்திலேயே இஸ்லாம் இதுபோன்ற சமுதாயப் பாதுகாப்பு, பராமரிப்பு முறை களைக் கொண்டிருந்தது. இது இஸ்லாத்தின் பெருமைகளுள் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று சமுதாயப் பாதுகாப்புப் திட்டங்களை வேற்று நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டுள்ள சில சிறிய நாடுகள், அதே சமுதாயப் பாதுகாப்புப் பணிகளை இஸ்லாம் மேற்கொள்ளும் போது ஏகடியம் பேசுகின்றன.

இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் ஸகாத்தை ஏழைகளுக்கு நேராக வழங்கிடும் வழக்கமே இருந்தது.

இதை வைத்துக் கொண்டு சிலர் ஸகாத்தை ஒரு சமுதாயப் பாதுகாப்புத் திட்டம் என எப்படி கொள்வது என வினவலாம்.

இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் ஏழைகள் ஸகாத்தை அதை வழங்கியவர் களிடமிருந்து நேரடியாகப் பெற்றனர். இதை அன்றைக்கிருந்த வாழ்க்கைச் சூழ்நிலைகள் அனுமதித்திருக்கலாம். அல்லது சகித்துக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் ஸகாத்தைப் பெறுவதற்கு இதுதான் உரிய வழி

என்று சொல்கின்ற விதத்தில் அல்லது ஸகாத்தை மேலே சொன்ன முறையில்தான் தர வேண்டும் என்று சொல்கின்ற விதத்தில் எந்தச் சட்டமும் இஸ்லாத்தில் இல்லை.

ஆகவே ஜகாத் மூலம் வசூலிக்கப் நிதியைக் கொண்டு மருத்துவமனைகளை நிறுவுவதை அல்லது கல்விக் கேந்திரங்களை அமைப்பதை அல்லது மக்களின் நல்வாழ்வுக்கு வகை செய்கின்ற செய்கின்ற கூட்டுறவுச் நிறுவனங்களை அமைப்பதைத் தடை செய்கின்ற எந்த விதியும் இஸ்லாத்தில் இல்லை. அது போலவே ஸகாத் நிதியைக் கொண்டு பலருக்கு வேலை தருகின்ற ஆலைகளை நிறுவுவதிலும் இஸ்லாம் எந்த தடையையும் விதித்ததில்லை. இதையே வேறு வார்த்தையில் சொல்வதானால் ஸகாத்தைச் சமுதாய சேவைகளுக்காகவும் தரலாம். நோயால் பீடிக்கப்பட்டு வாழ்க்கைத் தேவைகளைப் பெற முடியாதவர்கள் வயது முதிர்ச்சியால் உழைக்க முடியாதவர்கள், குழந்தைகள் ஆகியோரே ஸகாத்தைப் பணமாகப் பெறும் தகுதி படைத்தவர்கள். ஏனையோர் வேலைவாய்ப்பு என்ற வகையிலோ சமுதாயப் பாதுகாப்பு என்ற வகையிலோ அதனைப் பெறலாம்.

இஸ்லாமிய சமுதாயம், ஸகாத்தை நம்பி வாழும் சிலரைக் கொண்டதாக எப்போதும் இருக்கும் என்று சொல்ல முடியாது.

### இஸ்லாமிய சமுதாய அமைப்பு

கலீஃபா உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஓர் உன்னத நிலையை இஸ்லாமிய சமுதாய அமைப்பு எட்டியிருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஸகாத் வசூலிக்கப்பட்டது. ஆனால் அதைப் பெறும் அளவுக்கு வறுமையற்ற எவரையும் வசூலிப்பவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஸகாத்தை வசூலித்து ஏழைகளுக்குப் பகிர்ந்து தரும் பொறுப்பை ஏற்றிருந்த யஹ்யா பின் செய்யத் அவர்கள் இது குறித்துப் பின் வருமாறு கூறுகின்றார்கள். உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்கள் என்னை ஸகாத் வசூலித்து வர ஆப்ரிக்காவிற்கு அனுப்பினார்கள். நான் ஸகாத்தை வசூலித்தேன். பின்னர் அதை பகிர்ந்து தர ஏழைகளைத் தேடினேன். ஆனால் அங்கு ஸகாத்தை ஏற்றுக் கொள்பவர்களாவது தென்படுவார்களா எனப் பார்த்தேன். யாரும் ஏற்றுக் கொள்ள முன் வரவில்லை. அந்த அளவுக்கு உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்கள் மக்களை செழிப்பில் வைத்திருந்தார்கள். வறியவர்களே இல்லை.

ஒவ்வொரு சமுதாயமும் ஏழைகளையும் வறியவர்களையும் தன்னுள் கொண்டிருக்கும் என்பது உண்மை. அவர்களின் பிரச்சனை களைச் சந்திப்பதற்கும் தகுந்த அளவில் முன்னேற்பாடுகளைச் சட்டத்தில் அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இந்த வகையில் வறியவர்கள் நல்வாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்டதே ஸகாத். இன்னொன்றை யும் நாம் மனதிற் கொள்ள வேண்டும். இஸ்லாம் எப்போதும் ஒரு பெரும் மக்கட் கூட்டத்தைத் தன்னோடு சேர்த்துக் கொண்டே இருந்தது. புதிதாக வந்த இந்த மக்கட் கூட்டத்தில் வசதி படைத்தவர்களும் வறியவர்களும் இருந்தார்கள். ஆகவே, உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்கள் காலத்தில் இருந்த வறுமையற்ற உன்னத நிலையை அடைகின்ற விதத்தில் நிலையான சட்டங் களை யாத்திட வேண்டியது மிகவும் முக்கிய மானதாகும். இது ஏற்புடையதாகும். இத்தகையதொரு நிலையான ஏற்பாடுதான் அஸ் ஸகாத்.

### தர்மங்கள் (ஸதகா)

செல்வந்தர்கள் தாங்களாகவே மன முவந்து முன்வந்து தருவதே ‘ஸதகா’ எனப்படும். ஸதகா என்ற தர்மங்களைத் தருவதை இஸ்லாம் ஏற்றுக் கொண்டது. அங்கீகரித்தது. இத்தர்மங்களைப் பல வழிகளில் தரலாம். பெற்றோர்களையும், உறவினர்களையும் பேணுதல் மூலமும், தேவையுள்ளவர்களுக்கு உதவுவதன் மூலமும் தர்மங்கள் என்ற ஸதகாவைத் தரலாம். சில நேரங்களில் ஸதகா என்பது நற்செயலாகவும் இரக்கம் கனிந்த வார்த்தையாகவும் இருக்கும்.

நம்முடைய உற்றார் உறவினர் களிடத்திலே நாம் தாராளமாக நடந்து கொள்வதை எவரேனும், நாம் அதன் மூலம் அவர்களை ஏளனப்படுத்துகிறோம் எனக் கூறுவார்களா? கூறமாட்டார்கள். நம்முடைய உற்றார் உறவினர்களிடத்திலே தாராளமாக நடந்து கொள்வது நாம் கொண்டிருக்கின்ற அன்பு, பாசம், அனுதாபம் ஆகியவற்றின் விளைவோ நாம் நமது சகோதரனுக்கு ஒரு பொருளை அன்பளிப்பாகத் தருவது அல்லது நமது உறவினர்களுக்கு விருந்தளிப்பது நிச்சயமாக அவர்களை ஏளனப்படுத்திய தாகாது இது அவர்களை வெட்கத்தில் ஆழ்த்தாது, வெறுப்பை ஏற்படுத்தாது.

இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் ஸகாத் என்ன அடிப்படையில் வழங்கப் பட்டதோ அதே அடிப்படையில் வறியவர் களுக்கு அன்பளிப்புகளைப் பொருட்களாக வழங்குவதற்குப் பொருந்தும். ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் பொருட்களை அன்பளிப் பாகத் தருவதை இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலிருந்த வாழ்க்கைச் சூழ்நிலைகள் சகித்து கொள்பவையாக இருந்தன. இப்படி அன்பளிப்புகளைத் தருவதை ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும் உதவி செய்திடுவதற்கு இருக்கின்ற நேர்மையான வழி என இஸ்லாம் கருதியது. ஸதகா என்ற தான தர்மங்களை ஒரே ஒரு வகையாகத்தான் தந்திட வேண்டும் என்று பணிக்கின்ற விதத்தில் எந்த விதியும் இஸ்லாத்தில் இல்லை. தர்மங்களை (ஸதக்கா வை) சமுதாயச் சேவைகளில் ஈடுபட்டிருக்கும் அமைப்புகளுக்கு நன்கொடைகளாகவும் தரலாம். அதே போலவே தன்னுடைய திட்டங்களையும், முயற்சிகளையும் செயல் படுத்த நிதி வேண்டி நிற்கும் இஸ்லாமிய அரசுகளுக்கு உதவித் தொகையாக ஸகாத்தை தரலாம்.

இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் மக்களில் ஏழைகள் இருந்திடும் வரை, அரசு தன்னால் இயன்ற எல்லா வழிகளிலேயும் முயன்று அந்த ஏழை மக்களின் வாழ்வை வளமாக்கிட வேண்டும் என்று இஸ்லாம் பணிக்கின்றது. இன்னும் இஸ்லாமிய சமுதாயத்தில் ஏழைகள் மட்டும்தான் இருப்பார்கள் என்றில்லை. உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்களின் காலத்தில் இஸ்லாமிய சமுதாயம் அடைந்திருந்த உன்னத நிலையை இஸ்லாம் அடைந்திடும் போது ஏழைகள் எவரும் இஸ்லாமிய சமுதாய அமைப்பில் இருக்கமாட்டார்கள். அந்நிலையில் தர்மங்கள் தேவைப்படுபவர்களோ, ஸகாத்தை ஏற்றுக் கொள்பவர்களோ இருக்க மாட்டார்கள். அப்போது ஸதக்காவாக வசூல் செய்யப்படும் நிதி சமுதாயத்திற்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் சேவைகளுக் காகப் பயன்படுத்தப்படும். அதாவது ஏதாவது காரணத்தால் வேலை செய்ய முடியாம லிருக்கும் மனிதர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு வழங்கப்படும்.

மக்களிடம், தர்மங்களை நம்பி வாழுங்கள் என்று ஒரு போதும் இஸ்லாம் கூறியதில்லை. தங்களது வாழ்க்கைத் தேவை களைத் தங்களது உழைப்பால் சம்பாதித்திட முடியாதவர்களுக்குக் கண்ணியமானதொரு வாழ்வை அமைத்துத் தருவது இஸ்லாமிய அரசின் கடமையாகும். தர்மங்களை நம்பியே வாழுங்கள் என்று மக்களை இஸ்லாம் விதித்திருக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அது போலவே உழைக்க முடிந்த ஒவ்வொருவருக்கும் வேலை வாய்ப்பினை வழங்கிட வேண்டியதும் இஸ்லாமிய அரசின் கடமையாகும். இஸ்லாமிய அரசின் இந்தக் கடமையைப் பின்வரும் நபிமொழி வலியுறுத்துகின்றது.

இறைவனின் தூதர் அவர்களிடம் வந்து ஒரு மனிதர் தான் வாழ ஏதாவது வேண்டும் என யாசித்தார். இறைவனின் தூதரவர்கள் ஒரு கயிற்றையும் கோடாரியையும் அவரிடம் தந்து விறகு வெட்டி விற்று வாழும் படி கூறினார்கள். அத்துடன் திரும்ப வந்து என்ன நடந்தது என்பதை என்னிடம் கூற வேண்டும் என்று கூறினார்கள்.

மேலே தந்துள்ள இந்த எடுத்துக் காட்டு ஒரு தனிப்பட்ட உதாரணமாகும். இதற்கும்

இருபதாம் நூற்றாண்டிற்கும் எந்த தொடர்பும் இல்லை எனச் சிலர் கூறலாம். இந்த உதாரணத்தில் ஒரு மனிதன் ஒரு கோடாரி, ஒரு கயிறு இவைதான் சம்பந்தப்பட்டுள்ளன. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இன்றைய நிலையில் கோடிக்கணக்கான வேலையற்ற வர்கள், மிகப் பெரிய ஆலைகள், வலுவான அரசாங்க அமைப்புகள், அவற்றின் கீழ் இயங்கும் பல்வேறு துறைகள் இவற்றை யெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே மேலே சொன்ன எடுத்துக் காட்டு இன்றைய சூழ்நிலைகளுக்கு ஒத்துவராது என்றும் சில வாதிக்கலாம்.

இது ஒரு பொருந்தாதவாதமாகும். ஏனெனில் தொழிற்கூடங்கள் தோன்றுவதற்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவற்றைக் குறித்துச் சில விதிமுறைகளைத் தந்திட வேண்டிய அவசியம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கிருக்கவில்லை. அப்படியே சில விதிகளைத் தந்திருந்தாலும் அது யாருக்கும் புரிந்திருக்காது.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தில் தேவையான அடிப்படை விதிகளைத் தந்திருக்கின்றார்கள் என்பதே போதுமானதாகும். இந்த அடிப்படையைக் கொண்டு சூழ்நிலைகளுக்கேற்ப விதிகளை அமைத்துக் கொள்ள ஒவ்வொரு தலைமுறை யையும் அனுமதித்துள்ளார்கள். இது மிகவும் பயனுள்ள அறிவார்ந்த ஏற்பாடாகும்.

இந்த வகையில் மேலே உள்ள நபி மொழி பின் அடிப்படை விதிகளைத் தருவதாகும்.

1. அந்த மனிதனுக்கு ஒரு வேலை வாய்ப்பைத் தர வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்களின் பொறுப் புணர்ச்சி அதாவது ஆட்சித் தலைவரின் பொறுப்பு இதில் அறிவுறுத்தப்படுகின்றது.

2. அப்போது இருந்த சூழ்நிலை களுக்கேற்ப அந்த மனிதருக்கு ஒரு வேலையை ஊர்ஜிதம் செய்தார்கள்.

3. அந்த மனிதரிடத்தில் ‘திரும்பி வந்து என்ன நடந்தது’ என்பதைத் தன்னிடம் கூறவேண்டும் என்று கூறியதன் மூலம் அரசுக்கு இருக்கும் பொறுப்பை அறிவுறுத்தியுள்ளார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள்.

இஸ்லாம் பதிமூன்று நூற்றாண்டு களுக்கு முன்னர் வலியுறுத்திய பொறுப் புணர்ச்சியை இன்று வழக்கிலிருக்கும் அரசியல், பொருளாதாரம் கொள்கைகள் ஊர்ஜிதம் செய்வனவாக இருக்கின்றன. இஸ்லாமியச் சமுதாய அமைப்பில் ஒரு வேளை அரசாங்கத்தால் வேலையற்றோருக்கு வேலை தர முடியாவிட்டால் பொதுநிதிக் கருவூலம் (Public Treasury) அவர்களின் நிலைமை சீரடையும் வரை அவர்களது தேவைகளைக் கவனித்துக் கொள்ளும். இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்வதில் தவறேதுமில்லை. ஏனெனில் முஸ்லிம்கள் அரசின் விவகாரங்களிலும் சரி, அடுத்தவர்களின் துன்பங்களின் போதும் சரி மிகவும் தாராள மனப்பான்மையுடனேயே நடந்து கொள்வார்கள்.

இன்னும் நாவலாசிரியர் சில அடிப்படை கேள்விகளை எழுப்பி உள்ளார். அவற்றிற்கான பதிலை அடுத்த இதழில் தருக்கின்றோம்.

இன்ஷா அல்லாஹ்

முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்
8148129887

# வாழ்வின் வழிகாட்டி!

மேலைநாடுகளில் ஓர் வேகமான வளர்ச்சி. அது திருமணச் சிதைவு. குடும்ப வாழ்க்கையில் குளறுபடி. ஆக கணவனும், மனைவியும் விஞ்சிக் கொண்டு தனித்தனியாக வாழும் கொடுமை.

விவாகரத்துக்கள் பல்கிப் பெருகி விட்டன. காலையில் திருமணம் மாலையில் ரத்து என வேகமாக மேலைநாடுகள் இதில் முன்னேறின.

அந்தக் கல்வியையே ஆண்டாண்டு காலமாகக் கற்றதாலும் ஊடகங்களின் படையெடுப்பு, சினிமாக்கள், சுவரொட்டிகள் இவற்றில் பொங்கி வழியும் ஆபாசம் இவையெல்லாம் ஆட்டைக் கடித்த மாட்டைக் கடித்து இறுதியில் முஸ்லிம்கள் குடும்ப அமைப்பையும் குலைத்து கொண்டே வருகின்றது உண்மை.

இது அந்தந்த வீட்டின் பிரச்னை என இருக்க விரும்பவில்லை நம் இமாம்கள். இஸ்லாமிய குடும்ப அமைப்பில் இவை நடக்கக் கூடாது என விடாமல் தடுத்திட என்ன செய்திட வேண்டும் என்ற ஆலோசித்திருக்கின்றார்கள். முடிவில் ஓர் முறையான பாடத்திட்டத்தின் கீழ் மண உறவில் ஈடுபட இருப்பவர்களைப் பயிற்றுவிக்க ஓர் பாடத்திட்டத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். அதனை புத்தக வடிவாகவும் தந்திருக்கின்றார்கள்.

இது குறித்த அறிமுகக் கூட்டம் ஒன்று சென்னை பிரிஸ்டடன் கல்லூரியில் நடைபெற்றது.

ஆலோசனையில் சமுதாய ஆர்வலர்கள் கலந்து கொண்டார்கள். இவர்களுள் லிருந்து வருகை தந்திருந்த இமாம் அவர்கள் மொத்த அக்கறையோடும் உணர்வு பொங்கவும் நறுக்கென்று ஓர் கருத்தைச் சொன்றார்கள். அது,

நன்றாக அலைந்து தேடிப் மாப் பிள்ளைப் பார்க்கின்றார்கள் தேர்ந்தெடுக் கின்றார்கள். சின்ன விஷயத்திற்காக மாப்பிள்ளைவிடமிருந்து மணவிலக்கு கோரி மூச்சைப் உடைக்கின்றார்கள். மணவிலக்கு முறிந்த பின் ஏதாவது ஒரு மாப்பிள்ளை என்ன வடிவில் கிடைத்தாலும் போதும் என அலைகின்றார்கள். இதற்கு அந்த மாப்பிள்ளையோடு வாழ்ந்திட முயற்சிக்கலாம். விட்டுக் கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக் கொடுத்து வாழ முயற்சி செய்திருக்கலாம். இதனால் எண்ணற்ற பிரச்னையிலிருந்து மணமக்களையும், பெற்றோர்களையும் காப்பாற்றிடலாம்.

இது எல்லோருக்கும் நறுக்கெனப்பட்டது. குழுமி இருந்த ஊடகக்காரர்களிடம் இந்த முயற்சியை முஹல்லா தோறும் கொண்டு சென்றிடவேண்டும் என பாடத்திட்ட குழுவினர் கேட்டுக் கொண்டார்கள். நாமும் இதைப் படிக்கும் வாசகர்கள் அதைச் செய்யுங்கள் மணவிலக்குகளைக் குறைப்போம்.

பாடத்திட்டத்தில் கொண்டு இணைத்திட வேண்டியவை பற்றிய ஆலோசனைகளை அன்புடன் ஏற்றுக் கொண்டோர்.

இவர்களுக்கு எல்லாவிதமான ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது. செய்வோம் முயற்சி வெற்றி பெற துஆ செய்வோம். உங்கள் முஹல்லாவிற்கு இதனை கொண்டு வந்திட தொடர்பு கொள்ளுங்கள் தொலை பேசி எண் :

**இப்னுதவூத்**
**முஜிபுர் ரஹ்மான்**
**ந.நீ.**

# தென்காசியை சீரழிக்கும் உளவுத்துறை மதநல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் தென்காசி உளவுத்துறை

**அமைதிப்பூங்கா:**

மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக் காட்டாய் விளங்குவது தமிழ்நாடு. இந்தியா முழுவதும் சாதித்தீ பற்றி எரிந்த போதும் தமிழ்நாடு மட்டும் அதற்கு இணங்காமல் அமைதிப் பூங்காவாக இருப்பது நம்மால் மறக்க இயலாதது. இயற்கைப் பேரிடர் போதும் சாதீய அரசியலை கூட அனுமதிக்காத பகுதி நம் பகுதிதான். அதனால் தானோ என்னவோ இதுவரை பி.ஜே.பி. கட்சியை சார்ந்தவர்களில் (ஒரேயொருமுறை தவிர) ஒரேயொரு வேலாயுதம் தவிர மற்ற எந்த சூலாயுதமும் எந்த சட்டமன்ற தொகுதியிலும் நுழைய அனுமதிக்காத பாக்கியம் பெற்ற தொகுதியும் நம் தமிழ்நாடுதான்.

2006ம் ஆண்டு நமது உளவுத்துறை மிகப்பெரிய சதியொன்றை அரங்கேற்ற தென்காசியை தேர்ந்தெடுத்த போது இறைவன் அதனை தவிடுபொடியாக்கி உளவுத்துறை அவமானப்பட்டு நின்றது மறக்கமுடியாது. ஆனால் மீண்டும் மீண்டும் உளவுத்துறை அதே தவறை செய்ய முயற்சிப்பது மதநல்லிணக்கத் திற்கு ஊறு விளைவிக்கும் செயலாகும்.

தென்காசி மற்றும் சிவகிரிக்கும் இடையே உள்ள பல கிராமங்களில் முஸ்லிம்கள் தங்களோடு சேர்ந்து வாழும் சகோதர சமுதாயத்தவர்களாகிய இந்துக் களோடு காலம் காலமாக அண்ணன் தம்பிகளாய் மாமன் மச்சான்களாய் சித்தப்பா பெரியப்பாக்களாய் இன்றுவரை தங்கள் உறவுகளை வளர்த்துக் கொண்டிருக் கின்றார்கள்.

ஆனால் அரசியல்வாதிகளின் அடி வருடிகளாகிய காவல்துறையும் வரப்போகும் தேர்தலில் அரசியல் ஆதாயம் அடைய விரும்பும் பி.ஜே.பி. போன்ற கட்சிகளுக்கும் இந்த ஒற்றுமை வயிற்றில் புளியை கரைத்துள்ளது. அதனால் தான் அமைதியாய் இருந்த சொக்கம்பட்டியில் அடிக்கடி பிரச்சினை.

**வேற்றுமையை ஊன்றும் இந்து முன்னணியினர்**

சொக்கம்பட்டி என்கின்ற அழகிய கிராமம் கடையநல்லூர் அருகே உள்ளது. இங்கு பெரும்பான்மையாக தேவர் சமூகம் மற்றும் முஸ்லிம் சமூகம் உள்ளது. கடந்த 26.12.2015 அன்று மாலை 4.30 மணியளவில் முஹம்மது சுலைமான் என்ற இளைஞன் கருப்பாணித் தெருவில் பைக்கை நிறுத்தி செல்போன் பேசிக் கொண்டிருந்தபோது எதிரே பைக்கில் வந்த தேவர் சமூகத்து இளைஞர்கள் மூன்று பேர் சுலைமான் பைக் சாவியை எடுத்து குளத்தில் வீச எதற்காக இப்படி செய்கிறீர்கள் என்று கேட்பதற்குள் மூன்று பேரும் சுலைமானை மயக்கமுறும் அளவிற்கு நெஞ்சு வயிறு என்று மாறி மாறி தாக்கி படுகாயமடையச் செய்து விட்டு ஓடி விட்டார்கள். அவ்வாறு தாக்குகின்ற சமயம் தரக்குறைவான வார்த்தைகளையும் பேசியுள்ளார்கள்.

முஹம்மது சுலைமானை அங்கிருந்த வர்கள் தூக்கி சென்று கீழச்சொக்கம்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் முதலுதவி செய்து விட்டு கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள் ளார்கள். ஆனால் அட்மிஷன் போடாமல் தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அட்மிஷன் போட்டுள்ளார்கள். இவரிடம் ஒரு புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்து விட்டனர் போலீசார்.

## ஒரு சார்பு அனுகுமுறை

வைகறை வெளிச்சம் நிருபர் குழு சொக்கம்பட்டி சென்றபோது இன்னோர் ஆச்சர்யம் நமக்கு காத்திருந்தது. அது என்னவென்றால் அடிவாங்கிய முஹம்மது சுலைமானை முதல் ஆளல்ல. இவர் எட்டாவது நபர். ஏற்கனவே ஏழு முஸ்லிம் இளைஞர்களை இதே போன்று ஒன்று மில்லாத காரணத்திற்காக தாக்கியுள்ளனர். ஆனால் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு கூட பதிவு செய்யப்படவில்லை என்பது அதை விட ஆச்சர்யம்.

## ஏமாற்றப்பட்ட முஸ்லிம்கள்

ஒரு தடவை கூட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் சமரசம் என்ற பேரில் இனிமேல் இவ்வாறு நடக்காது என்று சொல்லியே முஸ்லிம்களை ஏமாற்றி வந்துள்ளனர் போலீசார் மற்றும் கீழச் சொக்கம்பட்டியைச் சேர்ந்த இந்து முன்னணியினர். ஆனால் இந்த முறை மாற்றலில் வந்த புதிய போலீசார் சம்பவம் நடந்த உடன் முஹம்மது சுலைமானிடம் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டனர். அதற்காக உளவுத் துறையின் கண்டனத்திற்கும் ஆளாகியுள் ளனர்.

## உளவுத்துறையின் சாமர்த்தியம்

முஹம்மது சுலைமான் 26.12.2015 முதல் 28.12.2015 வரை மட்டுமே தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்துள்ளார். இதற் கிடையில் உளவுத்துறையினர் இரகசியமாக களத்தில் இறங்கி தாக்கப்பட்டவரை (முஹம்மது சுலைமானை) விட்டு விட்டு அந்த ஊர் பள்ளிவாசல் பெரியவர் அஜீஸ் என்பவரோடு பாமர மக்கள் நான்கு பேரை சேர்த்து அமைதி பேச்சுவார்த்தை தாசில்தார் தலைமையில் நடைபெறும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று மிரட்டி பெரிய கலவர சூழ்நிலையை போன்று உருவாக்கினர் உளவுத்துறையினர். நாம் பெரியவர் அஜீஸை சந்திக்க அவரது செல்போனை அனுகிய போது நாசூக்காக நழுவி விட்டார். உளவுத்துறையினர் யாருக்கும் தகவல் கூறக் கூடாது என்று மிரட்டியிருக்கும் போலும்.

## கூட்டுச் சதி

தாசில்தார் அலுவலகத்தில் முஸ்லிம்கள் சார்பாக வெறுமனே ஐந்து பேரை மட்டும் வரச் சொல்லிவிட்டு எதிர்தரப்பினரை எவ்வளவு பேர் முடியுமோ அவ்வளவு பேரையும் திரட்டி வாருங்கள் என்று கூறியது உளவுத்துறை. இதன் பேரில் இந்து முன்னணியினர் இரண்டு சுமோ நிறைய ஆட்கள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களில் என பலர் திரண்டு வந்து தாசில்தார் முன்னிலையில் முஸ்லிம்களை மிரட்டினர் எதிர்தரப்பினர்.

## முடங்கிப்போன முதல் தகவல் அறிக்கை

சரி, எஃப்.ஐ.ஆர். மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்று கீழச் சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் அணுகிய போது அங்கு ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் இரண்டு பேருமே இல்லை. காவலர் ராமசாமி மற்றும் ஒரு பெண் காவலர் மட்டுமே இருந்தனர். அவர்களிடம் இந்த வழக்கு குறித்து விசாரித்தோம். புகார் கொடுத்த முஹம்மது சுலைமான் இந்துக்களுக்கு சொந்தமான சுடுகாட்டில் சென்று கால் கழுவியதாகவும், அதனால் தான் பிரச்சினை ஏற்பட்டது என்றும் கூறினார். அப்படியானால் இதற்கு முன்னால் ஏற்பட்ட ஏழு சம்பவங்களும் இதே அடிப்படையில் தானா? என்று கேட்டதற்கு நான் இங்கு சேர்ந்து ஏழு மாதங்கள் தான் ஆகின்றன. அதனால் எனக்கு தெரியாது என்று நழுவி விட்டார்.

## சந்தேகங்கள்

1. முஹம்மது சுலைமான் சவுதியிலிருந்து சொக்கம்பட்டிக்கு வந்து 35 நாட்களே ஆகின்றன. திருமணமாகி 10 நாட்களே ஆன நிலையில் ஒரு புது மாப்பிள்ளை (அவர் எந்த சமுதாயத்தவராயிருந்தாலும்) பிற மத

*சகோதரர்களிடத்தில் வேண்டுமென்றே தகராறு செய்தார் என கூறுவது நம்பும்படியாகவா உள்ளது?*

*2. முஹம்மது சுலைமானை தாக்கியதை ஊரே பாத்திருக்க ஒரு சாட்சி கூடவா கிடைக்கவில்லை போலீசாருக்கு?*

*3. தாசில்தார் முன்னிலையில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையில் சற்றும் சம்பந்தமேயில்லாமல் எஸ்.டி.பி.ஐ. கட்சியை ஊருக்குள் அனுமதிக்கக்கூடாது என்ற எதிர்தரப்பினரின் மிரட்டல் உளவுத்துறையினரோடு சேர்ந்து மிக சாமர்த்தியமாக வழக்கை திசை திருப்பும் முயற்சியாக அல்லவா தெரிகிறது?*


**வைகறை ஆய்வின் முடிவு**

*நாம் இதுவரை மேற்கொண்ட ஆய்வின் வழியாக தெரிந்து கொண்டது என்னவென்றால் தென்காசி, கடையநல்லூர் மற்றும் சொக்கம்பட்டி முஸ்லிம்கள் காவல்துறை, உளவுத்துறை, வருவாய்த்துறை, போன்ற அரசுத்துறைகளின் மீது நம்பிக்கை இழந்து வருகின்றனர். காரணம், அவர்களின் மதத்துவேஷம் மற்றும் ஒரு சார்பு நடவடிக்கைகள். இங்கு கொஞ்சம் கொஞ்சமாக உளவுத்துறையின் உதவியோடு காலூன்றும் இந்து முன்னணியினரால் தான் சமீபத்திய நிகழ்வுகள்.*

**உளவுத்துறையின் கீழறுப்பு வேலைகள்**

*உளவுத்துறையின் கீழறுப்பு நடவடிக்கைகள் இப்படியே தொடர்ந்தால் 2006ம் ஆண்டு நடந்த சம்பவத்தை போன்று மீண்டும் ஏற்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம் மத நல்லிணக்கத்தை விரும்பும் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.*

**கடைநல்லூரிலிருந்து வைகறை நிருபர் குழு - அப்துல் பாசித், சிக்கந்தர் மற்றும் முஸ்தபா**


விலை ரூ. 60 மட்டுமே

**தீவிரவாதிகள் என்று சித்தரிக்கப்படும் தாலிபான்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ள இந்த நூல்களை படியுங்கள்!**




விலை ரூ. 90 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**

**சென்னை - 600 001.**

**தொடர்ப்புக்கு : 8148129887**

# கட்டாயமதமாற்றத் தடைச் சட்டம்!

தீண்டாமையை ஒழிக்க முடியாதவர்கள், விதவைக்கு மறுவாழ்வு அளிக்க முடியாதவர்கள், வாழ்வுரிமை அளிக்க முடியாதவர்கள், சிறுபான்மையினர், பெரும்பான்மையினராக மாறிவிடுவார்கள் என்ற அச்ச நிலையின் காரணமாக கொண்டு வரப்பட்ட சட்டம்தான் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் 2002 (செப்டம்பர்).

இந்த மதமாற்றத் தடைச் சட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் நாம் சில விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். இந்த சட்டம் இந்தியாவில் 09,2002ல் தான் முதன் முதலாக பிரகடனப்படுத்தப்பட்டது என்பது இல்லை. ஒரிசா மாநிலத்தில் ஒரிசா மத சுதந்திரச் சட்டம் 1967 இதனைத் தொடர்ந்து 1968, மத்திய பிரதேசத்தில் மத்திய பிரதேச சுகாதாத்திர ஆதினியம் 27ல் 1968 கொண்டு வரப்பட்டது.

இந்தச் சட்டம் கொண்டு வர மிக முக்கிய காரணம் என்று சொல்லப்படுவது,

2002 ஜெயலலிதா ஆட்சி காலத்தில் புகார் அதிகம்.

1. சட்டமன்றத்தில் விவாதித்த போது ஒரு புகார் கூட ஆதாரமாக எடுத்து வைக்க முடியவில்லை.

2. அவர் சொன்னது, மதுரையில் மதமாற்றுவதற்காக ரூ. 2000 கொடுத்து தாழ்த்தப்பட்டவர்கள், கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றினார்கள் என்று குற்றம் சாட்டினார்கள்.

3. ஆனால், ஆதாரப்பூர்வமாக எதையும் தர முடியவில்லை. ஆனால், எதற்கு மாறினார்கள் என்பது பிறகு பார்ப்போம். அதற்கு முன்பாக இந்தச் சட்டம் எதை குறை கூறுகிறது என்று பார்ப்போம்.

4. கீழ்கண்ட மூன்று விஷயங்களை அரசாங்கத்தில் நிரூபிக்கவில்லை என்றால் மூன்று ஆண்டுகள் காவல் மற்றும் ரூபாய் 50,000 முதல் 1 லட்சம் வரை அபராதம்.

### அந்த மூன்று விஷயங்கள்

1. ஆசை காட்டுதல்,

2. மதமாற்ற முயற்சி செய்தல்,

3. தகவல் கொடுக்க வேண்டும்.

### ஆசை காட்டுதல்:

உனக்கு சம உரிமை கொடுக்கப்படும். இறைவனை வணங்கும் பள்ளிவாசல்களிலும், திருமணத்திலும், எல்லாச் சுக - துக்க காரியத்திலம் உனக்கு சம உரிமை அளிக்கப்படும் என்று கூறுவதும் ஆசை காட்டுதலில் அடங்கும். உனக்கு சொர்க்கம் உண்டு என்று கூறினாலும் அதுவும் ஆசை காட்டுதலில் அடங்கும்.

### மதமாற்ற முயற்சி செய்தல்:

உண்மையான மார்க்கத்தை எடுத்துச் சொல்வதற்காக தாஃவா Programme வைத்தாலும் ‘மதமாற்ற முயற்சி செய்தல்’ என்று கூறி பிரச்சனை செய்ய இயலும்.

தனி ஒரு மனிதனிடம் தாஃவா செய்தாலோ, அல்லது அவர் இஸ்லாத்தை பற்றி தெரிந்து கொள்வதற்கு கேட்டாலோ மதமாற்ற முயற்சி செய்தல் என பிரச்சனை செய்யலாம். உண்மை இறைவனை எடுத்துச் சொன்னாலும் மதமாற்ற முயற்சி என பிரச்சனை செய்யலாம்.

## தகவல் கொடுக்க வேண்டும் ( தாசில்தார் அல்லது நீதிபதிக்கு)

*1. தகவல் கொடுத்தாலும் சரியான முறையில் தகவல் வரவில்லை என்று கூறி மதம் மாறியவர்களை பிரச்சனைக்கு உள்ளாக்கலாம்.*

*2. எத்தனை பேர் எந்தெந்த ஊர், யார், யார் தாஃவா செய்கிறார்கள் என்று இதன் மூலம் அறிந்து, இதைப்போல் பல சட்டங்களைக் கொண்டு வந்தும் அவர்களை பிரச்சனைக்கு உள்ளாக்கியும் தாஃவாக்களை நடக்க முடியாமல் செய்யலாம்.*

## இது போன்ற பிரச்சனைகள் முஸ்லிம்களுக்கு பெரிது இல்லை

*இந்தியாவை இந்து ராஷ்டிராவாக மாற்றுவதற்காக இதுபோன்ற பல சட்டங்களை (தடா போன்ற) இயற்றியும், அகற்றியும் இருக்கிறார்கள்.*

*முஸ்லிம்களுக்கு (International Law) அல்லாஹ் கொடுத்த குர்ஆனிய சட்டத்தை (ஷரியத் சட்டம்) பின்தொடர்ந்துட செல்லும் வரைக்கும் இது போன்ற (State Level Law) எத்தனை வந்தாலும் பிரச்சனை இல்லை.*

*இதற்காக தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் அப்போது நிறுவி, நடத்தி வந்த விடியல் வெள்ளி பத்திரிக்கையில் இதைப் போன்ற பிரச்சனைகள் வரும் போது எங்களை தொடர்பு கொள்ளுங்கள், மனித நீதி பாசறையில் சட்ட உதவிக்குழு தயாராக இருக்கிறது என்று கூறியிருந்தோம். மேலும் விவரங்களுக்கு விடியல் வெள்ளி (நவம்பர் 2002). அதே உதவி இப்போதும் தரப்படும். மற்றும் மாற்றுமத சகோதரர்களிடம் எப்படி தாஃவா செய்வது என்றும், தேவைப்படும் நபர்களுக்கு சொல்லி தரப்படும். தேவைக்கு அந்தந்த ஊர்களில் இருக்கும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் உறுப்பினர்களை அணுகவும்.*

## ஏன் மதம் மாறுகிறார்கள்?

*தீண்டாமையின் கொடுமை காரணங்களினாலும், தீண்டாமை, பார்க்காமை, பழகாமை கொடுமைகளின் காரணமாகவே தவிர பணத்திற்காகவோ கட்டாயப் படுத்தியோ, ஆசைக் காட்டுதலின் காரணமாக மாறுதல் இல்லை.*

*உதாரணத்திற்கு காஞ்சிபுரம் அருகில் உள்ள கூத்தரம்பாக்கம் கிராமத்தில் 50 தலித் குடும்பத்தினர்கள் இஸ்லாத்திற்கு மாறினார்கள். காரணம், தங்கள் ஊரில் இருக்கும் மாரியம்மன் கோவில் தேர் தங்களின் தெருவிற்கு வருவதற்காக 1979 முதல் பல வருடங்கள் போராடி வந்தும், தேர் தெருவுக்குள் வரவில்லை. இந்த பிரச்சனையை சமாளிப்பதற்காக அப்போது அமைச்சராக இருந்த எஸ்.டி. சோமசுந்தரம் உங்கள் தெருவிற்கு ஒரு கோயில் கட்டித் தருவதாக கூறினார். அந்த கிராமத்தின் மக்கள் எங்களிடம் காசு இல்லாமல் இல்லை, கோவில் தேவை என்றால் நாங்களே கட்டிக் கொள்வோம் என்று கூறினார்கள். அவர்கள் எதிர்பார்த்தது சம உரிமையே.*

**(ஆதாரம் : மதமாற்றம் தடைச் சட்டம் தமிழ்நாட்டை பார்ப்பன நாடாக்கும் சதியே. (வெளியிடுவார் : மக்கள் கலை இலக்கியக் கழகம்)**

*திருவிதாங்கூர் - அதாவது இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் 1800களில் நாடார் சமூகத்தை சேர்ந்தவர்கள் சாணார்கள் என அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு சமூகக் கட்டுப்பாடுகள் இருந்தன. ஆண்கள் மீசை வளர்க்கக் கூடாது. தலைப்பாகை கட்டக் கூடாது. பெண்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணியக் கூடாது. பெண்களுக்கு மார்பகங்களுக்கு கூட வரி கட்டாவிட்டால் பெண்களுடைய மார்பகங்கள் அறுக்கப்பட்டன. பெண்கள் இடுப்பில் தண்ணீர் எடுக்கக் கூடாது. தலையில் தான் எடுக்கணும். பசு வளர்க்கக் கூடாது. ஓடு வேய்ந்த வீடுகள் கட்டக்கூடாது. தொழிற்சாலைகள், பாலங்கள், கிணறுகள் உபயோகிக்கக் கூடாது. உயர் சாதிகள் இருக்கும் சாலை வழிகளில் போகக் கூடாது. இதுபோன்ற தீண்டாமையின் காரணமாகத் தான் மதம் மாறினார்கள். பொருளாதாரத்திற்காக மாறவில்லை. சமூக ரீதியில் தாழ்த்தப்பட்ட காரணத்திற்காக மாறினார்கள்.*

**நாடார்கள்**

*ஏனென்றால், அன்றைய சூழலில் அங்கு பொருளாதாரத்தில் மேம்பட்டு இருந்த நாஞ்சி நாட்டு வெள்ளாளர் போன்ற உயர் சாதி இந்துக்களைப் போன்று தங்களுக்கும் பொருளாதார ரீதியாக மேம்பட்டு இருந்தனர். இன்னும் அவர்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் இடஒதுக்கீடு போன்ற சலுகைகளை பயன்படுத்தி அவர்கள் பொருளாதாரத்தில் மேம்படலாம். ஆனால் அதையும் உதறி தள்ளிவிட்டு உண்மை மார்க்கத்திற்கு வருகிறார்கள். டி.எம். உமர் பாஃரூக் (முன்னாள் டி.எம். மணி) போன்ற பெரிய சமுதாய தலைவர்கள் சொன்ன வார்த்தைகளே இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகிறது. ஊனமுற்றோர்களுக்காக இருக்கை கிடைக்கும் என்று என்னை நானே ஊனப்படுத்திக் கொள்ளலாமா? அதாவது அதன் அர்த்தம் இன்றும் டி.எஸ்.பி. விஷ்ணுபிரியா போன்றவர்கள் உயர்ந்த பதவியில் இருந்தாலும் அவர்களை சாதிய கொடுமைகளுக்கு ஆளாக்கி அவர்களை தற்கொலை செய்ய வைக்கிறார்கள். இதை போன்ற கொடுமைகளை கண்ட பெரியார், அம்பேத்கார் போன்ற தலைவர்கள் சொன்ன அறிவுரைகளை சிந்தித்து, உண்மையான மதத்தை ஆராய்ந்து மதம் மாறுகிறார்களே தவிர, வேறு எந்த காரணமும் இல்லை.*

*மதமாற்றம் என்பது பொருளாதாரத் தின் அடிப்படையாக நடைபெறுவது என்பது இதன் மூலம் அடிபட்டு போகிறது.*

**திப்பு சுல்தான் நடவடிக்கை எடுத்தார்**

*அவர் திருவதாங்கூர் அரசருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். நான் ஊர் வழியாகச் சென்றபோது அங்குள்ள பெண்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணியாமல் இருந்ததைப் பார்த்தேன். அவர்கள் என்ன காரணத்தால் ஆடை அணியவில்லை.*

*ஒருவேளை வறுமை காரணமாக ஆடை அணியவில்லை என்றால் அவர் களுடைய வருமானத்தை மேம்படுத்தி வழி செய்யுங்கள்.*

*அல்லது சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாக அணியவில்லை என்றால், இத்தனை நாட்களுக்குள் ஒரு தேதியைக் குறிப்பிட்டு அதைச் சரிசெய்து ஆடை அணியச் செய்ய வேண்டும். இல்லை யென்றால் நான் உங்கள் மீது போர் தொடுத்து அந்த மக்களை மாற்றுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.*

*1899 சிவகாசியில் நாடார்கள் கோவிலுக்குள் நுழைய முயன்ற போது உயர்சாதி இந்துக்களால் அடித்து கடுமையாக தாக்கப்பட்டு கடுமையாக பாதிக்கப்பட்டனர். இது சம்பந்தமாக இங்கிலாந்தில் உள்ள பிரைவி கவுன்சில் என்ற மன்னர் மாமன்றத்தில் வழக்கு நடந்தது. இவர்கள் கோவிலுக்குள் நுழையக் கூடாது என்றே அதிலும் தீர்ப்பு வந்தது. இதன் பாதிப்பால் திருநெல்வேலியில் 3000 நாடார்கள் இஸ்லாத்தை தழுவினர்.*

*திண்டுக்கல்லில் சிறுநீர் குடிக்க வைத்தது, மலம் திண்ண வைத்தது போன்ற கொடுமையாலும் உண்மையான இறைவனை தேடியும்தான் மதம் மாறினார்கள்.*

*பொருளாதாரத்திற்காகவோ, பணத்திற் காகவோ ஆசை காட்டியோ அச்சுறுத்தியோ மதம் மாறவில்லை. (விடியல் வெள்ளி)*

**முஸ்லிம்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும்?**

*எல்லாவிதமான பிரச்சனைக்கும் குர்ஆனிலும், ஹதீஸிலும் தீர்வு இருக்கிறது.*

*இப்போதுதான் இதுபோன்ற பிரச்சனைகளுக்கு சட்டத்தின் பெயரில் (மதமாற்ற தடைச் சட்டம்) என்று வந்திருக்கிறது. இதற்கு முன்பு பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்த அரசாங்கத்தாலும் , அதிகார வர்க்கத்தினாலும் பல பிரச்சனை களை எதிர்கொண்டு இருக்கின்றது. நம்முடைய முஸ்லிம் சமுதாயம்.*

*(உதாரணம்)*

*சூரத்துல் புருஜ் (நெருப்பு குண்டவாசிகள்)*

*சூரத்துல் கஹ்ப் (குகைவாசிகள்)*

*மூஸா (அலை) காலத்தில் ஃபிர்அவ்னுடைய தொந்தரவு*


*ஆனால், நாம் இப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டியதில்லை. நாம் வாழும் இந்த நாட்டில் தாஃவா செய்வது மிகவும் எளிது. ஆன்மீகத் தேடல் அதிகம் உள்ள நாடு இது.*

### கிருஸ்தவம்

*மதம் மாறினாலும் அங்கும் சாதிகள், பிரிவினைகள் இருக்கத்தான் செய்கிறது. இதற்கு தீர்வு, நம் அனைவரையும் படைத்த 'அல்லாஹ்' வை ஏற்பது மட்டும்தான். ஏனென்றால், இங்கே தான் சாதிகள் இல்லை. அடிமைத்தனம் இல்லை அநீதிகள் இல்லை. இந்த மதம் மட்டும் தான் அடிமைத்தனத்தை அழித்து, அராஜக ஆட்சியை அடக்கி, கலாச்சார சீரழிவை சரி செய்து, நீதி என்ற பெயரில் நடக்கும் அநீதிகளை அழித்து, உண்மை நீதியை வழங்கி, மனிதர்களை எந்த மனிதனுக்கும் எந்த சித்தாந்தங்களுக்கும் அடிமைப்படுத்தாமல் மனிதனை மனிதனாக வாழ வைக்கும் ஒரே மார்க்கம் இஸ்லாம் மட்டும் தான்.*

*ஆகையால், நாம் தாய் மார்க்கம், தந்தை மார்க்கம், முன்னோர் மார்க்கம், உண்மை மார்க்கமான இஸ்லாமிய மார்க்கத்திற்கு திரும்பினால் மட்டும் தான் உலக வெற்றி மட்டுமல்லாமல் அனைவருக்கும் மறுமை வெற்றியும் கிடைக்கும். உங்களையும், என்னையும் படைத்த இறைவன் தன்னுடைய திருக்குர்ஆனில் இப்படி சொல்கிறான் : (4:1) மனிதர்களே! உங்கள் இறைவனுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அதிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிடமிருந்து அநேக ஆண்களையும், பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்களை கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.*

**- ரஃபீன்**


விலை ரூ. 200 மட்டுமே

**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்புக்கு : 8148129887**

# பாரிஸ் தாக்குதலுக்கு பின். . .

பாரிஸ் தாக்குதலுக்குப் பின் உலக அரங்கில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை உற்றுப் பாருங்கள் ஒன்று துலங்கும். அது,

முஸ்லிம் உலகை தரை மட்டமாக்கும் வேலையைச் செய்திட உலக நாடுகளை ஒருமுகப்படுத்திடும் வேலை வெகு லாவகமாக நடந்து கொண்டிருக்கின்றன.

பிரிட்டன் என்ற ஆங்கில நாடு அமெரிக்காவுடன் அணி சேர்ந்ததை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

The Hindu **4.12.2015**

ஜெர்மனி, நாங்களும் உங்கள் அணியில் உறுதியாக இருப்போம், என மீண்டும் உறுதி பூண்டுள்ளது.

The Hindu **5.12.2015**

இந்தியா IS ஐ.எஸ். என்ற பூச்சாண்டியைக் காட்டி, முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாகவும், முஸ்லிம்கள் நடத்தும் கல்விக் கூடங்களைக் குறிப்பாகவும் கலவரப்படுத்தி வருகின்றார்கள். ஒரு படி மேலே போய் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கி வருகின்றார்கள்.

இந்தப் பாரிஸ் தாக்குதல்கள் முஸ்லிம்களைக் கலவரப்படுத்தியுள்ளன. அமெரிக்காவின் அணியை வலுப்படுத்தி யுள்ளது.

அமெரிக்கா நடத்தும் இஸ்லாத்திற் கெதிரான போரில் எல்லா நாடுகளும் ஓர் அடங்காத வெறியுடன் அணி சேர்ந்து வருகின்றன. இந்த நாடுகளின் வெறிக்கு இப்போது சிரியா இலக்கு. அங்குள்ள இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன.

சிரியாதான் (சாம் பகுதியில்) ரோமபேரரசின் பிடியிலிருந்து முதன் முதலில் இஸ்லாத்தின் பிடியில் வந்தது.

அதை மீட்க வேண்டும். அல்லது அழிக்க வேண்டும் என்ற வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இதைத்தான் சிலுவைப்போர் 2.0 என அழைக்கின்றனர். இந்த Crusade 2.0 க்கு அதவாது சிலுவைப் போர் 2.0 க்கு Refer John Feffer 2.0, The West's Resurgent war on Islam.



# தீன் சுடர் டி.எம். உமர் பாரூக்

-மு. குலாம் முஹம்மத்

அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் மேடைகளில் பேசம் பேச்சுகளில், தெளிவும் தெளிவான சிந்தனைகளும் தென்பட்டன.

அதனால், அண்ணன் எழுத்துக்களைப் பதிவு செய்திடவும், பரப்பிடவும் விரும்பினேன்.

அண்ணனிடம் நான் நடத்தி வந்த விடியல் வெள்ளி மாத இதழில் பதிவு செய்திட விரும்பினேன். அண்ணனிடம் எனது பத்திரிகையில் ஏதாவது எழுதுங்கள் என்றேன்.

அவ்வப்போது இரண்டு பக்கங்களை எழுதுவார்கள். நானும் ஆவலோடு வெளியிட்டேன்.

ஆனால் ஒரு தொடரை எழுதிட வேண்டும் என்ற எண்ணம் அண்ணனுக்கு ஏனோ வரவில்லை. ஆனால் நாங்கள் இருவரும் பல தாஃவா மேடைகளில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் மேடைகளில் தொடர்ந்து பேசினோம்.

அந்த மேடைகள் தலீத்களை அதிகமாக கேட்க வைக்கும் மேடைகளாகவே இருந்தன.

அந்த மேடைகளில் தனது அனுபவத்தையும் தனது முயற்சிகளையும், அண்ணன் கேட்பவர்களைப் பிணித்திடும் அளவில் சொல்லுவார்கள்.

அப்போதும் நான் அண்ணனிடம் உங்கள் வாழ்க்கையை அப்படியே பதிவு செய்யுங்கள் என்றேன். பார்க்கலாம் எனச் சொன்னார்கள். ஆனால் அந்தப் பக்கமே திரும்பிடவில்லை.

சரி அண்ணனுடைய அனுபவங்களை அதாவது வாழ்க்கையை பதிவு செய்திட வேறு வழிகளைக் காண வேண்டியதுதான் என முடிவு செய்தேன்.



அவரிடம் பேட்டிகளை எடுத்து வைகறையில் வெளியிடலாம் என முடிவு செய்தேன். ஆகவே பேட்டி எடுக்கத் தலைப்பட்டேன்.

பேட்டியில், பிறந்த இடம் பற்றி கேட்டேன் நெஞ்சைத் தொடும் சில நிகழ்வுகளைத் தான் சொல்லுவார்கள். ஆகவே நான் பேட்டி எடுப்பதை நிறுத்தினேன். தயை கூர்ந்து எழுதுங்கள் உங்கள் வாழ்க்கை என்றேன்.

கொஞ்ச நாட்களாக எந்த எழுத்தும் வரவில்லை.

ஒரு நாள் அண்ணன் தொலை பேசியில் ஒரு கட்டுரை அனுப்பி உள்ளேன் பாருங்கள் என்றார்.

தொடர்ச்சி -41ம் பக்கம்

# தாருல் இஸ்லாம் -
# தொடரும் வெள்ள நிவாரணம்!



கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட மழை பெரு வெள்ளத்தின் போது தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் பத்து இலட்சம் ரூபாய்க்கும் மேலான உதவிகளை செய்ததை சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

இதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூரில் வெள்ளம் வடிந்து விட்டதா என்பதை அறிய தாருல் இஸ்லாம் சகோதரர்கள் ஜனவரி 15, 2016 அன்று நேரிடையாக சென்று ஆய்வு செய்தனர்.

ஆனால் அன்றைய நிலையிலும் தண்ணீர் வடியாமல் 5 அடிக்கும் மேலாக தண்ணீர் வீடுகளை மூழ்கடித்து கொண்டிருந்தது. இவ்விடத்தை பற்றி ஏற்கனவே நாம் முகநூலில் தெரிவித்திருந்த தகவல்களின் அடிப்படையில் பல ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன. இதனை அடிப்படையாகக் கொண்டு பொதுப்பணித்துறை அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. 75 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படும். இதனால் ஓரிரு நாட்களில் வெள்ளம் வடிந்து விடும் என டிசம்பர் மாத இறுதியில் கூறியிருந்தார்.

இதற்கு காரணமான செயல் அலுவலர்

**தொடர்ச்சி -60ம் பக்கம்**

# தலித் மக்கட்கு சாதியை ஒழிக்க ஒரே வழி இந்து மத மாற்றமே!

## புரட்சியாளர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் முழக்கம்!

*புரட்சியாளர் பி.ஆர். அம்பேத்கர் 1930ல் தலித் மக்களை இஸ்லாத்திற்கு போய்விடுமாறு கூறி தானும் போய் விடுவேன் என்று முழங்கினார்.*

*"1930ல் என்று நினைக்கின்றேன், "தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்திலே இருப்பது தவறு. இந்து மதந்தான் அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக்கியது என்பதாகச் சொல்லி அனைவரும் முஸ்லிம் ஆக வேண்டும். நானும் முஸ்லிம் ஆகப் போகிறேன்" என்று சொன்னார். எவ்வளவோ பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் அதைக் கண்டித்தார்கள். மாளவியா, விஜய ராகவாச்சாரியார் போன்றவர்கள் எல்லாம் அம்பேத்கர் அவர்களே உங்களுடைய முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள் என்பதாகத் தந்திக் கொடுத்தார்கள்"*

**(விடுதலை தேதி 16.05.1952)**



### புரட்சியாளர் பி.ஆர். அம்பேத்கர் மதம் மாறும் போது இஸ்லாம் மார்க்கத்தை ஏற்க வேண்டுமென்று தலித் மக்கட்கு அறிவுரை கீழ் காணுமாறு கூறினார்

*தலித் மக்கள் தங்கட்கென்று ஒருபுதிய மார்க்கத்தை துவங்குவது சாத்தியமில்லை. அவர்கள் இன்று நடைமுறையிலுள்ள ஒரு மார்க்கத்தை தழுவுவதே சாத்தியமானதாகும். இதை இந்துக்களும் புரிந்து கொள்வார்கள்.*

*முதல் கேள்வி என்னவென்றால் தலித் பெருங்குடி எந்த மார்க்கத்தை பின்பற்ற வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் அவர்கட்கு எந்த மார்க்கம் பாதுகாப்பாக உள்ளதோ அதை பின்பற்ற வேண்டும்.*

*இந்தியாவிலுள்ள முக்கியமான மூன்று மார்க்கங்களுள் ஏதாவது ஒன்றை இம்மக்கள் பின்பற்ற தேர்வு செய்யலாம். அதாவது முதலாவது இஸ்லாம், இரண்டாவது கிறிஸ்தவம், மூன்றாவது சீக்கியமும் ஆகும். இம்மூன்று மார்க்கங்களில் இஸ்லாம் ஒன்று தான் தலித் மக்கட்கு தேவைப்படும் அனைத்தையும் அளிக்கும். பொருளாதார ரீதியில் இஸ்லாத்தில் தலித் மக்கள் இணைந்தால் இவர்கட்கு கிடைப்பது*

அளவிடமுடியாத ஒன்றாகும். சமூக ரீதியில் இந்திய நாடு முழுவதும் இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர். அவர்கள் புதிதாக தலித் இனத்திலிருந்து இஸ்லாமைத் தழுவுபவர்களை கவனித்துக் கொள்வார்கள். அவர்கட்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் இஸ்லாமியர்கள் செய்வார்கள். தலித் மக்கள் பெற வேண்டிய அனைத்து அரசியல் உரிமைகளையும் இஸ்லாமைத் தழுவிய பிறகும் அவர்களோடு சேர்ந்து பெறுவார்கள். மற்றும் சட்டமன்றத் திற்குச் சென்று பணியாற்றும் பிரத்யேக சலுகைகளையும் இஸ்லாம் மார்க்கத்திற்குச் செல்லும் தலித் மக்கட்கும் கிடைக்கும். (Page 296&297 The Book Thus Spoke Dr. B.R. Ambedkar Volume IV by Bhahavan Doss)

3. மனிதனுக்காகத்தான் மதமே ஒழிய - மதத்திற்காக மனிதன் என்பதல்ல; உங்களை மனிதப் பிறவிகளாகக் கூட நடத்திடாத ஒரு மதத்தில் நீங்கள் ஏன் முடங்கிக் கிடக்க வேண்டும்? நீங்கள் ஒரு கோயிலில் நுழைவதைக் கூட தடுத்திடும் ஒரு மதத்தில் ஏன் நீங்கள் நிலைத்திருக்க வேண்டும்? பொதுக் கிணற்றில் குடிநீர் எடுக்கக் கூட உங்களைத் தடை செய்யும் ஒரு மதத்தில் - ஏன் நீங்கள் நீடித்திருக்க வேண்டும்? வாழ்வின் ஒவ்வொரு படித்தளத்திலும் - உங்களை அவமானப்படுத்தும் ஒரு மதத்தில் நீங்கள் ஏன் இருக்க வேண்டும்?

எந்த ஒரு மதத்தில் மனிதப் பொதுப் பண்புகள், ஒரு தனிமனிதனுக்குத் தடை செய்யப்பட்டுள்ளதோ அது மதமாகாது; அதிகாரத்தின் மூலம் அத்துமீறிய செயலே யாகும்! எந்த ஒரு மதத்தில் விலங்குகளைத் தொட அனுமதிப்பதும், மனிதனைத் தீண்டு வதற்குத் தடையும் விதிக்கப்பட்டிருக்கிறதோ அது மதமாகாது!

மேலும், எந்த ஒரு மதம் சில இனத்தால் கல்வி கற்பதை மறுத்தும், அவர்கள் பொருள் சேர்க்கத் தடை விதித்தும் ஆயுதம் ஏந்த அனுமதிக்காமலும் செய்கிறதோ- அது மதமாகாது! படிப்பறிவில்லாத மக்களை, ஏழ்மையிலேயே உழன்று கிடக்கச் செய்வதும் மதமாகாது! மதத்தின் பேரால் சுமத்தப்பட்ட பெருந்தண்டனையேயாகும்!

எந்த ஒரு மனிதன், விருப்பு வெறுப் பின்றி மக்களுக்கு தீயவை எது? நல்லவை எது என்று துணிவுடன் சொல்கிறானோ அவனை யே நான் தலைவனாகக் கருதுகிறேன். நீங்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், உங்களுக்கு நல்லது எது? என்பதைச் சொல்வது என்னுடைய தலையாய கடமை யாகும். நான் என் கடமையைச் செய்துள் ளேன். பொறுப்புணர்ந்து செயலாற்றுவதும் சரியான முடிவெடுப்பதும் உங்கள் கடமை யாகும்.

நீங்கள் மதமாற்றத்திற்கு ஆதரவாக முடிவெடுத்து, நீங்கள் விரும்பும் மதத்தை தழுவிட முன் வந்தால் -உங்கள் மதமாற்றப் பாதையில் நான் குறுக்கிட மாட்டேன். நீங்கள் இன்று எடுக்கும் முடிவு, உங்கள் எதிர்கால சந்ததியினர் வாழ்வைச் செப்பனிடும்! நீங்கள் அடிமைகளாகவே நிலைத்திருக்க முடிவு செய்தால், உங்கள் சந்ததியினரும் அடிமை களாவர். உங்களுக்கு நீங்களே வெளிச்சமாயிருங்கள்!

முழு மனித வாழ்வு பெற அமைப்பு ரீதியில் ஒன்றுபட, சுயபலம் பெற்றிட, சமத்துவத்தை அடைந்திட, விடுதலையை வென்றிட, குடும்ப வாழ்க்கையில் மகிழ் வடைய வேண்டுமெனில் மதம் மாறுங்கள்.

**(ஆதாரம் : டாக்டர் அம்பேத்கர் எழுதிய - இந்து மதமாற்றம் ஏன்? பக்கம் -48)**

சாதிப்பாகுபாடும் - தீண்டாமையும் தீண்டத்தகாதோரிடமிருந்து உருவானவை அல்ல. மாறாக, உயர்சாதி இந்துக் களிடமிருந்து உருவானவையாகும். இவை உண்மையெனில், மிகவும் பழமையான இந்தப் பழக்க வழக்கத்திற்குப் பொறுப்பு, சாதி இந்துக்களேயன்றி தீண்டத்தகாதவர்கள் அல்ல.

**(டாக்டர் அம்பேத்கர் எழுதிய இந்து மதமாற்றம் ஏன்? பக்கம்- 48)**

4. சாதிப்பாகுபாடும் - தீண்டாமையும் நமக்குள் வேரோடு நின்று நிலைப்பதற்கு நாம் காரணமோ - பொறுப்போ அல்ல என்ற போதும் அவற்றை எதிர்த்துப் போராடாமல் அவை தொடர்ந்து நமக்குள் இருப்பதற்கு அனுமதிப்பது - சுத்த பைத்தியக்காரத் தனமாகும். நமக்குள் சாதிப்பாகுபாடும் - தீண்டாமையும் இருப்பதற்கு நாம் காரணமாக இல்லை என்ற போதும், அவற்றை அடியோடு ஒழிப்பதற்கு நாமே காரணமாக இருந்திடல் வேண்டும்.

சாதிகளை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை நீங்கள் அனைவரும் உணர்ந் துள்ளது கண்டு, நான் மிகுந்த மனநிறைவடை வதுடன், என் உளமார்ந்த வாழ்த்துக்களையும், உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த சாதி ஒழிப்பு முயற்சியை முழுமையாக வெற்றிபெறச் செய்வது எப்படி என்பது குறித்து நீங்கள் எவரேனும் சிந்தித்ததுண்டா?

சமபந்தி உண்பதன் மூலமோ, ஒரு சில கலப்புத் திருமணங்கள் மூலமோ சாதிகளை ஒழித்திட முடியாது. சாதி என்பது மனித இனத்தில் படிந்து விட்ட ஒரு கறை. அது, மனிதனின் உள்ளத்தில் இருக்கும் ஒரு நோய். இந்து மதத்தின் கட்டளைகளே இந்த நோய்க்கான மூலக்காரணம்.

நாம் இந்து மதத்தின் கட்டளையின்படி தான், சாதிகளைக் கடைப்பிடிக்கின்றோம். தீண்டாமையைக் கடைப்பிடிக்கின்றோம். ஒரு கசப்பான பொருளை இனிப்பானதாக மாற்ற முடியும். எந்தப் பொருளின் சுவையையும் மாற்ற முடியும். ஆனால், விஷத்தை அமிர்தமாக மாற்ற முடியாது. சாதிகளை அடியோடு ஒழிப்பது குறித்துப் பேசுவது என்பது, விஷயத்தை அமிர்தமாக மாற்ற முடியும் என்று பேசுவதைப் போன்றதே.

சுருக்கமாகச் சொன்னால், ஒரு மனிதன் மற்றொரு மனிதனை- தொழுநோயாளியைப் போன்று நடத்தவும், நம் உள்ளத்தின் அடித்தளம் வரை வேரோடிக் கிடக்கும் சாதி வேறுபாடுகளினால் உருவாகும் பாகுபாடு களைக் கடைப்பிடிக்கவும், நமக்குக் கட்டளையிடுகின்ற இம்மதத்தில் இருக்கின்ற வரை, கண்டிப்பாக இவை எதுவும் நம்மை விட்டு மறைந்து போகாது. தீண்டத் தகாதோருக்கு சாதிகளை ஒழிக்கவும், தீண்டாமையை அகற்றவும் மதமாற்றம் மட்டுமே மாமருந்தாகும்.

**(30.5.1936, அன்று இயோலா மும்பையில் நடைபெற்ற மகர் இன மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய உரை)**

## முஹம்மது நபியின் முழக்கம்

ஓர் அரபி, அரபி அல்லாதவரை விட உயர்ந்தவன் அல்ல. ஓர் அரபி அல்லாதவன் ஓர் அரபியை விட உயர்ந்தவன் அல்ல. ஒரு வெள்ளையன் கருப்பனை விட, ஒரு கறுப்பன் வெள்ளையனை விட உயர்ந்தவன் அல்ல. மனிதனுக்குள் உயர்வெல்லாம் அவன் இறைபக்தியை பொறுத்தே அமைந்துள்ளது.

**(தன் இறுதி ஹஜ்ஜில் ஆற்றிய உரை)**

இறைவன் கூறுகிறான்,

மனிதர்களே! உங்களை ஓர் ஆணிலிருந்தும், பெண்ணிலிருந்தும் படைத் தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகி கொள்வதற்காக உங்களை பல சமூகங்களாகவும், கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சமுடையவர்தாம். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கிறான்.

**(அல்குர் ஆன் 49:13)**

தீண்டாமை கொடுமைக்கும் சாதீய வேற்றுமைக்கும் பலர் பல தீர்வுகளை முன் வைத்தாலும் இஸ்லாம் எனும் தீர்வே நடைமுறை சாத்தியம் என்பதை உணர்ந்து இஸ்லாத்தை ஆரத்தழுவிட தயாராவோம்.

**மேலும் தொடர்புக்கு**

**என். அப்துல்லாஹ்,** பி.எஸ்.சி.

# இஸ்லாமிய தகவல் மையம்

129/7, நெ.2, ரோடு, இசாக் பில்டிங்,
முதல் மாடி, மயிலாடுதுறை - 609001.

**குறிப்பு : 'மகர்' என்பது அம்பேத்கர் பிறந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் ஒரு பிரிவை குறிப்பிடுவதாகும்.**

புதிய தொடர்

# கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய்

மூலம் : ஹாருன் யஹ்யா

தமிழில் : அபூஹாசின்

**முன்னுரை:**

700,000 வருடங்களுக்கு முன்னரே மனிதன் மிகவும் சரியான முறையில் கட்டமைக்கப்பட்ட கப்பலைக் கொண்டு கடலில் பயணம் செய்துள்ளான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

அல்லது ஆதிகால குகைவாசிகள் என்று அறியப்படும் மக்கள் கலைத்திறனிலும் அவற்றை பற்றிய சரியான புரிதல்களிலும் இன்று உள்ள நவீன கலைஞர்களை போன்ற இருந்தனர் என்பதை நீங்கள் யாரேனும் கேள்விப்பட்டதுண்டா?

குரங்கு மனிதன் என்று பரிணாம வாதிகளால் சித்தரிக்கப்பட்ட, 80,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நியாண்டர் தல் மனிதன் இசைக் கருவிகளை உண்டாக் கினான். ஆடைகளை உடுத்தி மகிழ்ந்தான். சுடுமணலில் உருக்கி வார்க்கப்பட்ட காலணி களை கொண்டு நடந்தான் என்று உங்களுக்குத் தெரியுமா?

மேலே சொன்ன உண்மைகளை நீங்கள் கேள்விப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஆனால் இதற்கு நேர்மாறாக இம்மக்கள் என்பவர்கள் பாதி குரங்கு பாதி மனிதன் என்றும் நேரே நிமிர்ந்து நிற்க முடியாதவர்கள். வார்த்தை களை உச்சரித்து பேச முடியாமல் உறுமல் சப்தத்தைத் வெளிப்படுத்தியவர்கள் என்றும் நமக்கு ஒரு தவறான அபிப்பிராயம் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஏனெனில் இந்த பொய்கள் அனைத்தும் 150 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த நம்மை போன்ற மக்களிடம் திணிக்கப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் என்னவெனில் ஏக இறைவனை மறுக்கும் பொருள் முதல்வாத தத்துவத்தை உயிருடன் வைத்திருக்க வேண்டும். இக்கொள்கையின் படி பிரபஞ்சமும், ஜடப்பொருளும் என்றும் நிலையானது. மறு வார்த்தையில் சொல்வதானால் இதற்கு ஆரம்பம் அல்லது தோற்றம் என்பது இல்லை. எனவே படைப்பாளனும் இல்லை. இந்த பிறழ் நம்பிக்கையே பரிணாம கொள்கை எனப்படுகிறது.

பொருள் முதல் வாதிகள் இறைவன் இல்லை என்று கூறுவதினால் அவர்களுக்கு இப்பூமியில் வாழும் எண்ணற்ற உயிரிகளின் வாழ்க்கை எவ்வாறு தோன்றியது என்பதற் கான சுய விளக்கத்தை கொடுத்தாக வேண்டும். இதற்காக அவர்கள் புகுத்தியதே பரிணாம கொள்கை. மேலும் இக்கொள்கையின் படி இப்பிரபஞ்சத்தில் உள்ள விதிமுறைகளும் உயிர்களின் தோற்றமும் திடீரென ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் உருவாகியதே.

ஊழி காலத்தில் இருந்த சில குறிப்பிட்ட உயிரற்ற பொருள்கள் தற் செயலாக இணைந்து முதல் செல் உயிரி தோன்ற காரணமாகியது. இதைப் போன்ற நிகழ்வுகள் மில்லியன் வருடங்களாக நடைபெற்றதன் விளைவாகவே உயிரினங்கள் தோன்றியது. இந்த பரிணாம தொடர்ச்சியின் விளைவாக இறுதி கட்டத்தில் உருவானவனே மனிதன்.

மில்லியன் கணக்கில் நடைபெற்ற தற்செயல் மரபணு மாற்றத்தின் (ஒவ்வொரு மாற்றங்களும் முந்தைய ஒவ்வொரு மாற்றத்தை விடவும் அதிக சாத்தியமற்றவை) விளைவே மனிதன் என்று மனித இனத்தின் ஆரம்ப கால வரலாறு திரிக்கப்படுகிறது. மேலும் இவ்வழியே ஆரம்ப கால உயிரினங்கள் (பாக்டீரியா, பூஞ்சை போன்றவை) தோன்றி பின்னர் மனிதன்

தோன்றினான். எனவே மனித இனத்தின் வரலாறும் நாகரீக முதிர்ச்சியற்ற சமூகத்தில் இருந்து வளர்ச்சி பெற்று நாகரீக சமூகமாக மாறியது என பரிணாமவியலாளர்கள் கூறுகிறார்கள். பொருள் முதல் வாதிகள் தத்துவமும் அதுவே. (ஆனால் இந்த கணிப்பிற்கு துணையாக எவ்வித ஆதாரமும் இல்லை).

முதல் செல் உயிரியிலிருந்து பல செல் உயிரி, குரங்கிலிருந்து மனிதன் என மனித இனத்தின் வரலாற்றை தங்கள் கூற்றுக்கு ஆதரவாக அவர்கள் எழுதியுள்ளனர். இந்த முயற்சியின் இறுதி வடிவமாக கற்பனையான யுகங்களை உருவாக்கினர். அவையே ‘குகை மனிதனின் காலம்’ மற்றும் ‘கற்காலம்’. இவை நாகரீக முதிர்ச்சியற்ற மனிதனின் வாழ்க்கை நடைமுறையை விளக்கிட கூறப்பட்டது. மனிதனுக்கு குரங்கிற்கும் ஒரே மூதாதையரே என இவர்களின் வாதத்தை நிரூபணம் செய்ய ஒரு புதிய தேடல் உருவாகியது. தொல் இயல் துறையில் கண்டுபிடிக்கப்பட்ட கற்கள், அம்பு போன்ற கூரிய முனையுள்ள பொருள்கள் மற்றும் குவளைகள் இவற்றை மேற்கூறிய வாதத்திற்கு வலுசேர்க்க அதன் பாணியில் விளக்கினர்.

எனினும் ‘பாதி குரங்கு பாதி மனிதனின்’ குகை வீடு, ரோமத்தினால் ஆன ஆடை போன்ற வரைபடங்களும் ஓவியங்களும் கற்பனையானது அவன் சரியாக பேசத் தெரியாதவன் என்பதும் கற்பனையானது கற்கால மனிதனும் கிடையாது. கற்காலமும் கிடையாது. இவை ஊடகத்தின் வழியே சொல்லப்படும் ஏமாற்று தந்திரங்களில் ஒன்று.

இக்கொள்கை பொய்யானது. ஏனெனில் உயிரியல், புதைமடிமவியல், நுண்ணுயிரியல், மரபியல் போன்ற குறிப்பிட்ட துறைகளில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பரிணாமவியல் கூற்றை தவிடு பொடியாக்குகிறது.

மனிதன் குரங்கிலிருந்து தோன்றவில்லை. மனிதன் இப்புவியியல் தோன்றியிலிருந்து இன்று வரை மனிதனாகத்தான் வாழ்ந்து வந்துள்ளான். அன்றிலிருந்து இன்று வரை அவன் மிகச் சிறந்த கலாச்சாரங்களையும் பெற்றிருக் கின்றான்.

எனவே பரிணாமம் என்ற ஒன்று வரலாற்றில் நடைபெறவேயில்லை.

இக்கொள்கை தவறு என்பதற்கான அறிவியல் ஆதாரங்களையும் மேலும் படைப்பின் உண்மையை தற்கால அறிவியல் கண்டுபிடிப்புகளின் துணையோடும் மற்றும் ஆற்றல் மிக்கவனும் அனைத்தையும் அறிந்தவனுமாகிய இறைவனின் உன்னதமான படைப்பே மனிதன் என இப்புத்தகமும் எடுத்துக் கூறுகின்றது.

**அறிமுகம்:**

கற்காலம், வெண்கல காலம் மற்றும் இரும்பு காலம் போன்ற கற்பனை கோட்பாடுகளே பரிணாமவியலாளர்களின் காலவரைபடத்தில் முக்கிய பகுதிகள் ஆகின்றன. இந்த புனைவுகளும் அது குறித்த வரைபடங்களுமே நமக்கு பள்ளி கூடங் களிலும் தொலைகாட்சிகளிலும் பத்திரிக்கை கதைகளிலும் சொல்லித் தரப்படுவதால். அநேக மக்கள் இந்த புனைவுகளை எந்த கேள்வியும் இல்லாமல் ஏற்றுக் கொள் கின்றனர். மேலும் மனிதன் ஒரு காலத்தில் கற்களை மட்டுமே தனது கருவியாக பயன்படுத்தி வந்தான். தொழில் நுட்பங்களை பற்றி அவன் அறிந்திருக்கவில்லை என்று எண்ணிக் கொள்கின்றனர்.

எனினும் தொல் இயல் கண்டுபிடிப்பு களையும் அறிவியல் உண்மைகளையும் நாம் ஆராய்வோமேயானால் நமக்கு வேறு விதமான உண்மைகள் புலப்படுகின்றன. அக்கால மக்கள் பயன்படுத்தியவற்றில் இருந்து நமக்கு கிடைக்கப் பெற்ற ஊசிகள், ஊதுகுழல் பகுதிகள், தனி நபர் அலங்காரப் பொருள்கள் போன்றவற்றை பார்க்கும் பொழுது மனிதன் வரலாற்றின் எல்லா பகுதிகளிலும் கலாச்சாரம் மற்றும் சமூக நிலையில் நாகரீகம் மிக்கவனாக வாழ்ந்துள்ளான் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

ஏறத்தாழ ஒரு லட்சம் வருடங்களுக்கு முன்னரே மனிதன் வீடுகளில் வசித்துள்ளான். வேளாண்மையில் ஈடுபட்டுள்ளான். பொருள் களை பரிமாற்றம் செய்துள்ளான். ஆடை களை உற்பத்தி செய்துள்ளான். உறவினர் வீடுகளுக்கு வருகை புரிந்துள்ளான். இசையில் ஆர்வம் காட்டியுள்ளான். ஓவியங்களை வரைந்துள்ளான். நோய்களை குணப்படுத்தி யுள்ளான். இறை வழிபாடுகளில் ஈடுபட்டுள் ளான். சுருக்கமாக சொன்னால் இன்று நாம் வாழ்வது போல் வாழ்ந்துள்ளான். இறை வனால் அனுப்பப்பட்ட தூதர்களை பின் பற்றியவர்கள் ஓரிறைவனை வணங்கினர். இறைவன் மேல் நம்பிக்கை கொண்டிருந்தோர் தூதர்கள் போதித்த ஒழுக்க விழுமியங்களை பின்பற்றினர் மற்றவர்கள் மூட நம்பிக்கை களிலும், சடங்குகளிலும் ஈடுபட்டனர். வரலாற்றின் எல்லா காலகட்டங்களிலும் இன்று போல ஓரிறைவனை நம்பியவர்களும், பல தெய்வங்களை நம்பியவர்களும், இறை மறுப்பு வாதிகளும் வாழ்ந்துள்ளனர்.

சாதாரண, வளர்ச்சியடையாத சமூகங்கள் இருந்த அதே காலத்தில் நாகரீக சமூகமும் வாழ்ந்துள்ளன. ஆனால் இது எந்த வகையிலும் பரிணாம தத்துவத்திற்கு சான்றாக அமையாது. ஏனெனில் உலகத்தின் ஒரு பகுதியில் வாழும் மக்கள் விண்ணிற்கு ஊர்திகளை அனுப்புகின்றனர். மற்ற சில பகுதிகளில் வாழும் மக்கள் மின்சாரத்தை பற்றிய அறிவு கூட இல்லாமல் வாழ்கின்றனர். விண் ஊர்திகளை அனுப்பிய மக்கள் பரிணாம முறையை கடந்து முன்னேற்றம் அடைந்தவர்கள் என்றும் மற்றவர்கள் குரங்கு மனிதன் நிலையை சற்று கடந்தவர்கள் என்றும் கூறிட இயலாது. இந்த முன்னேற்றங்கள் கலாச்சார, நாகரீக வேறுபாட்டையே உணர்த்துகின்றன.

இன்ஷா அல்லாஹ்

**-தொடரும்**

**34ம் பக்கத்தின்தொடர்ச்சி . . .**

பார்த்தேன் படித்தேன் நெஞ்சைத் தொட்டது. அண்ணனிடம் அடுத்த தலைமுறைக்கு ஒப்படைத்திட வேண்டிய அனுபவம் என்றேன். அப்படியானால் நான் அதைத் தொடருகின்றேன் என்றார்கள்.

என்னை நெகிழவைத்த அந்தக் கட்டுரை தான் இப்போது ஜாதி ஒழிந்தது என்ற நூலின் முதல் அத்தியாயம்.

அப்போது அது விடியல் வெள்ளி பத்திரிகையில், ஒரு தாழ்த்தப்பட்டவனின் வாழ்வினிலே என்ற தலைப்பில் தொடராய் வந்தது. தொடர் வளர்ந்தது.

அப்போது விடியல் வெள்ளி பத்திரிக்கை உலகில் தமிழர்கள் வாழ்ந்திடும் பெரும் பகுதிக்கு சென்று கொண்டிருந்தது.

அங்கிருந்தெல்லாம் தலீத் சகோதரர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள். எங்கள் வாழ்வை டி.எம். மணி அவர்கள் அப்படியே பிரதிபலித்திருக்கின்றார்கள் எனச் சொன்னார்கள். அழுது கொண்டே பேசியவர்களும் உண்டு.

அவர்களிடம் நீங்கள் என்னிடம் பேசினால் போதாது எழுதி அனுப்புங்கள். நாங்கள் வெளியிடுகின்றோம் என்றேன். மிகச் சிலரே எழுதினார்கள். அவற்றையும் விடியல் வெள்ளியில் வெளியிட்டேன்.

தொடர் நீண்டது இருவேறு எதிரொலிகள் வந்தன. அதனை அடுத்த இதழில் பார்ப்போம்.

இன்ஷா அல்லாஹ்.

**தொடரும்**

# சி.ஐ.ஏ.வின் இரகசிய சித்ரவதைக்கூடங்கள் பற்றிய அமெரிக்காவின் செனட் ஆய்வறிக்கை

**19. சி.ஐ.ஏ-வின் கைது மற்றும் விசாரணை நிகழ்ச்சி இயல்பாகவே ஏற்றுக்கொள்ள இயலாததாக இருந்தது. ஆதாரமற்ற பத்திரிகை வெளிப்பாடுகள், மற்ற நாடுகளின் குறைவான ஒத்துழைப்பு, சட்ட மற்றும் கவனக்குறைவு பிரச்சனைகள் போன்றவற்றின் காரணமாக 2006ல் இது முடிவுற்றது.**

*தன்னுடைய கள்ளத்தனமாக சிறைச்சாலைகளை நடத்திட சி.ஐ.ஏ.விற்கு மற்ற நாடுகளின் ஒத்துழைப்பும் அவர்கள் இரகசியம் காக்க வேண்டியதும் அவசியமானது.*

*இந்த இரண்டு தேவைகளும் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் இதனைப்பற்றி பொதுமக்கள் முன்னிலையில் செப்டம்பர் 6 2006ல் வெளிப்படுத்துவதற்கு முன்னதாகவே சி.ஐ.ஏ.வின் இரகசிய சிறைச்சாலைகளை பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தி கொஞ்சம் கொஞ்சமாக அதனை அரித்து விட்டிருந்தது.*

*இந்நிகழ்ச்சியின் ஆரம்ப கட்டத்திலேயே இந்த கள்ளத்தனமாக சிறைச்சாலைகளை நடத்திட ஒத்துழைப்பு நல்கும் நாடுகளை இனம் கண்டு கொள்வதில் சி.ஐ.ஏ. பல சவால்களை சந்தித்தது.*

*சில நாடுகளை தவிர்த்து சி.ஐ.ஏ. தன் கள்ள சிறைச்சாலைகளை உருவாக்கி இருந்த பல இடங்களில் இருந்து அதனை மாற்றிட வேண்டி இருந்தது. இதற்கு காரணம் அந்த நாடுகளில் அரசாங்கத்தின் அழுத்தம் அல்லது பொதுமக்களுக்கு இதனை பற்றி தெரிய வந்ததால் பொதுமக்களின் எதிர்ப்பு போன்றவை.*

*2005ன் ஆரம்பத்தில் இருந்து சி.ஐ.ஏ தன் கள்ளச்சிறைச்சாலைகளில் இருந்து கைதிகளை அமெரிக்க இராணுவத்தின் காவலுக்கு அனுப்ப அமெரிக்க பாதுகாப்புத் துறையை சமாதானப்படுத்த பிரயர்த்தனப்பட வேண்டி இருந்தது. இதனை சி.ஐ.ஏ 2006இல் தானே ஒத்துக்கொள்ள வேண்டியதானது.*

*மற்ற நாடுகளில் செயல்பட்ட சி.ஐ.ஏ.வின் கள்ளச் சிறைச்சாலைகளில் போதுமான அளவு மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்யாமல் விட்டது அந்த சிறைச்சாலைகளை இழுத்து மூடும் நிலைக்கு கொண்டு வந்து விட்டது. ஒரு நாட்டில் மிகக்கடுமையாக நோயில் பாதிக்கப்பட்ட ஒரு கைதியை உள்ளூர் மருத்துவமனையில் அனுமதித்ததில் ஏற்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் அந்த நாட்டில் இருந்த சி.ஐ.ஏ.வின் கள்ளச்சிறைச்சாலையை மூட ஏதுவானது. சி.ஐ.ஏ.வின் கோரிக்கையை ஏற்று இந்த கள்ளச்சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க அமெரிக்க பாதுகாப்பு துறையும் முன்வரவில்லை.*

*2003ன் மத்தியில் அமெரிக்காவின் பன்னாட்டு தினத்தை முன்னிட்டு* (United Nations International Day) *அமெரிக்க அதிபர் சித்ரவதை செய்யப்பட்ட நபர்களுக்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கையிலும் வெள்ளை மாளிகையின் பொது அறிக்கையிலும் அமெரிக்காவின் வசம் உள்ள கைதிகள் மனித நேயத்துடன் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்த நிகழ்ச்சியை தொடர்வதா வேண்டாமா என்பது*

குறித்து சி.ஐ.ஏ மீண்டும் வெள்ளை மாளிகையின் அங்கீகாரத்தை பெறவேண்டிய தானது.

2004ன் மத்தியில் சி.ஐ.ஏ.வின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இந்த நிகழ்ச்சி குறித்து சட்ட குழும (Office of LegalCounsel) அலுவலகத்தின் சட்ட ஆலோசனையை பரிந்துரை செய்ததன் காரணமாக சி.ஐ.ஏ அதன் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை தற்காலிகமாக நிறுத்த வேண்டியதானது.

ரசூல் (எ) புஷ் வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் தந்த உத்தரவின் அடிப்படையில் கியூபாவில் இருந்த குவாண்டனாமோ சிறையில் இருந்து கைதிகளை வெளியேற்ற வேண்டியதானது.

2005ன் கடைசியிலும் 2006ன் ஆரம்பத்திலும் கைதிகளை நடத்தும் முறை சட்டம் (Detainee Treatment Act) மற்றும் ஹம்தன் (எ) ரம்ஸ்ஃபீல்ட் என்ற வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகியவற்றின் காரணமாக சி.ஐ.ஏ மீண்டும் தன் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை தற்காலிகமாக நிறுத்த வேண்டியதானது.

2006இல் பத்திரிகைகள் வெளிப் படுத்தியது, மற்ற நாடுகளின் விருப்பமின்மை, சட்ட ரீதியான பிரச்சனைகள் மற்றும் கவனக்குறைவு போன்றவை சி.ஐ.ஏ மற்ற நாடுகளில் கள்ளத்தனமாக சிறைச்சாலைகளை இயக்குவதை பெரிய அளவில் முடிவுக்கு கொண்டு வந்தது.


குறைந்த பட்சம் 113 நபர்களை 2004ம் ஆண்டு முழுவதும் கைது செய்த சி.ஐ.ஏ 2005ல் 5 நபர்களை மட்டுமே கைது செய்தது. 2006ல் ஒருவரையும் 2007ல் ஒருவரையும் கைது செய்தது. மார்ச் 2006ல் இந்த நிகழ்ச்சி ஒரே ஒரு நாட்டில் மட்டுமே தொடர்ந்தது. சி.ஐ.ஏ தன் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை கடைசியாக நவம்பர் 8 2007ல் உபயோகப்படுத்தியது. சி.ஐ.ஏ ஏப்ரல் 2008க்கு பிறகு எந்த கைதிகளையும் பிடித்து வரவில்லை.

**20. சி.ஐ.ஏ-வின் கைது மற்றும் விசாரணை நிகழ்ச்சி உலகத்தின் மத்தியில் அமெரிக்காவின் பெயரை பாழாக்கியது. அது பண ரீதியாகவும் பண ரீதியில்லாமலும் பல நட்டங்களை ஏற்படுத்தியது.**

சி.ஐ.ஏ.வின் இந்த நிகழ்ச்சி அமெரிக்காவிற்கும் அதன் தோழமை நாடுகளுக்கும் இடையே பதட்டத்தை ஏற்படுத்தியது. அமெரிக்காவை பல அரசியல் நடவடிக்கைகளுக்கு இது உள்ளாக்கியது. இது அமெரிக்காவிற்கும் அந்த நாடுகளுக்கும் இடையே இருந்த உளவு ரீதியான உறவுகளை சிக்கலாக்கி பாழாக்கியது.

முடிவுற்றது.


இப்போது பரபரப்பான
விற்பனையில்




விலை ரு. 30 மட்டுமே

வேர்கள் பதிப்பகம்,
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# ISIS (ஐ.எஸ்.ஐ.எஸ்.) என்ற பூச்சாண்டியைக் காட்டி முஸ்லிம் இளைஞர்களுக்கு சிறை, சித்திரவதை! எண்ணற்ற முஸ்லிம் குடும்பங்கள் சிதைவு!

9/11-ஐ காட்டி உலக முஸ்லிம்கள் மீது போர், குண்டுவீச்சு லட்சக்கணக்கில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டனர்.

முஸ்லிம் நாடுகளின் இயற்கை வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. எஞ்சியவை அழிக்கப்பட்டன. அப்போது தாலிபான், அப்போது பூச்சாண்டியாகக் காட்டப்பட்டது. அல்-காயிதா - ஓசாமா பின் லேடன், முல்லா உமர்,

பின்னர் ஜெய்சே முஹம்மத்

தொடர்ந்து லஷ்கரே தொய்பா

பின்னர் அபாபீல்

இப்போது இஸ்லாமிக் ஸ்டேட்.

இப்படி உலகில் அப்பாவி முஸ்லிம்கள் மீது தாக்குதலை நடத்தினார்கள். இந்தத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா தலைமை. உலக நாடுகள் அதன் அணியில்.

இதற்கு Global War on Terror - தீவிரவாதத் திற்கு எதிரான உலகளாவியப் போர் எனப் பெயர்.

இங்கே தீவிரவாதம் என்ற சொல்லுக்குப் பதிலாக இஸ்லாம் என்ற சொல்லை வைத்திட வேண்டும்.

அமெரிக்காவின் தலைமையிலான மேலை நாடுகளின் இந்தப் பெரும் போருக்கு இன்னொரு பெயர் Modern Crusade - நவீன கால சிலுவை யுத்தம்.

இதற்கு இன்னொரு பெயர், Clash of Civilisation - கலாச்சாரங்களின் மோதல்.

இதற்கு இன்னொரு பெயர் Default War ஆளில்லாத அதாவது மேலை நாடுகள் நேரடியாக போர்களம் புகாமல், முஸ்லிம்களையே முஸ்லிம்களுக்கெதிராக மோதவிட்டு முஸ்லிம்களை பிணங்களாகவும், அநாதைகளாகவும், அகதிகளாகவும் ஆக்கிக் காட்டுவது.

இத்தனையும் எதற்கு என்ற கேள்விக்கு Project for New American Centuary. இனிவரும் நூற்றாண்டுகளில் அமெரிக்காவின் ஆதிக்கம் நிரந்தரமாக நிலைப்பதற்கு என் கின்றார்கள்.

இஸ்லாத்திற்கெதிரான இந்த அநீதி நிறைந்த போரில் அமெரிக்காவுடனும், யூதர்களுடனும் நமது பாசிச அரசு கைக்கோர்த்து நிற்கின்றது. இங்கே, அன்று ‘சிமி’ என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைச் சொன்னார்கள். இந்த இயக்கம், உலகமகா தீவிரவாத இயக்கம் என மூச்சு விடாமல் பிரச்சாரம் செய்தார்கள். பின்னர் பல பொய் வழக்குகளைப் புனைந்து தடை செய்தார்கள்.

தடை செய்த பின், அபிநவ்பாரத், சனாதன் சாஸ்தா, ஆர்.எஸ்.எஸ்., உளவுத்துறை இவையெல்லாம் வைத்த குண்டுகள், வெடித்த குண்டுகள், இவற்றிற்கெல்லாம் பழியை இந்த அமைப்பின் மீதே போட்டார்கள்.

ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை சிறை பிடித்தார்கள். பல ஆயிரம் பேரை என்கவுண்டர் என்ற பெயரில் கொலை செய்தார்கள்.

இத்தோடு நில்லாமல் இன்னொரு தொடர் சதியையும் அரங்கேற்றினார்கள். அதில், சிமி மீதான தடையை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீடித்தாக வேண்டும். தடை நீட்டிப்பிற்கான கால கட்டம் பெப்ருவரி மாதந்தான் வரும். அதனால் நவம்பர் மாதமே குண்டுகளை

வெடிக்கச் செய்வார்கள். பழியை 'சிமி' மீதே போடுவார்கள். பின்னர் இரகசிய அறிக்கைகளை தாக்கல் செய்து, டிரிபூனல் என்ற ஆணையத்தை அச்சுறுத்தி தடையை நீடிப்பார்கள்.

இவர்களுடைய அதாவது உளவுத்துறையின் தகிடு தத்தங்களையும் தாண்டி ஒரு நீதிபதி சிமி மீதான தடையை நீக்கினார். தடையை நீடிக்க எந்த முகாந்தரமுமில்லை என்றார்.

ஆனால் உளவுத்துறை ஓடோடி சென்று உச்சநீதிமன்றத்தில் இரவோடு இரவாக, அந்த நீதிபதியின் உத்தரவுக்கு 'Stay' செயல் நீக்கத்தை வாங்கி வந்து விட்டார்கள்.

தடை நீக்கத்திற்கு Stay வழங்கிய நீதிமன்றத்தால் அடிப்படை வழக்குகளில் இன்றளவும் தீர்ப்புச் சொல்லிட இயலவில்லை. இப்படி ஓர் உச்ச (அ) நீதிமன்றம், இந்தியாவில் நடந்து கொண்டிருக்கின்றது.

இதனால் உளவுத்துறை களமிறங்கி நினைத்ததையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றது.

உளவுத்துறையின் பேயாட்டத்தில் சிக்கித் தவிப்பவர்கள் முஸ்லிம்கள் தாம்.

'சிமி' என்ற இயக்கத்தைத்தான் இவர்கள் எப்போதும் சொல்வார்கள். ஆனால் குண்டுகளை வைப்பவர்களும், வெடிப்பவர்களும், இந்துத்துவவாதிகள்தாம் என்பதை நாம் இடைவிடாமல் பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தோம்.

இந்தப் பிரச்சாரத்திற்கு உறுதுணையாக அவ்வப்போது கிடைத்த மிகவும் அரிதாகக் கிடைத்த நீதிமன்ற தீர்ப்புகள் பெருமளவில் உதவி செய்தன. நமது வாதங்களுக்கு வலு சேர்த்தன.

இந்தப் பிரச்சாரங்களால் முஸ்லிம்களும், அவர்களோடு வாழ்ந்த சகோதர சமுதாயத்தவர்களும் 'சிமி' என்பது உளவுத்துறையும் ஊடகங்களும் சொல்லும் பொய். 'சிமி' என வருகின்ற போதெல்லாம், அது அந்த குண்டு வெடிப்புகள் இந்துத்துவ தீவிரவாதிகளால் நிகழ்த்தப்பட்டவைதாம் என்ற கருத்துக்கு வந்தார்கள்.

ஆகவே உளவுத்துறையும், அதன் ஊதுகுழலாய்ச் செயல்பட்ட ஊடகங்களும் 'சிமி' என்ற கதையை விட்டுவிட்டு புதிய பெயர்களுக்குத் தாவின. அதில் தான் அல்காயிதா, லஷ்கரே தொய்ஃபா, ஜெய்சே முகம்மத் என்றார்கள். இவற்றின் மீது தான் இந்துத்துவ தீவிரவாதிகள் தங்கள் பழியைப் போட்டார்கள். இதுவும் பொய் என்பதை சந்நியாசி அசீமானந்தாவின் வாக்கு மூலங்கள் தெளிவுபடுத்தின.

ஏக காலத்தில் இந்தியன் முஜாஹித்தீன்கள் என்றொரு அமைப்பைக் அரசு முகவர்களே உருவாக்கி நாட்டுக்கு அறிவித்தார்கள்.

இந்தியன் முஜாஹித்தீன் என்றொரு அமைப்பு எங்கே இருக்கின்றது என்றொரு கேள்வியை அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களிடம் நேரில் சென்று எழுப்பினார்கள். ஆனால் பதில் கிடைக்கவில்லை.

பதில் கிடைக்கவில்லை என்றாலும் இந்தியன் முஜாஹித்தீன் என்ற பிரச்சாரம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு சுதந்திர தினத்தின் போதும், அதாவது ஒவ்வொரு ஆகஸ்ட் 15 இன் போதும் முஸ்லிம்களும், முஸ்லிம் இளைஞர்களும் சொல்லொண்ணா துயரத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் சந்தேகத்தின் பெயரில் 'Preventive Custody' என்ற தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள்.

குடும்பங்கள் சிதைந்தன. இதைத்தானே நாங்கள் எதிர்பார்த்தோம் என்பதைப் போல் அரசின் பதில்கள் அமைந்தன.

இத்தனை கெடுபிடிகளுக்கும் பின்னர் தான் கர்கரேயைக் கொலை செய்தது யார்?, கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?, 26/11 நீதித்துறையின் மயங்கியது ஏன்?, நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், பலிகடாக்கள் என்ற இலக்கியங்கள் வழி நாம் மேற்கொண்ட



முஹம்மத் அஃப்சலின்
மனைவி

பிரச்சாரங்களுக்குப் பின் மக்கள் மன்றத்தில் முஸ்லிம்கள் மீது வீண் பழிகளே சுமத்தப்படுகின்றன என்ற விழிப்புணர்வு ஏற்பட்டது.

ஆனாலும், தொடர்ந்து உலகின் எங்காவது ஓர் மூலையில் குண்டுகளை வெடிக்க வைத்து, அல்லது பாரிஸ் தாக்குதல் போன்ற தாக்குதல்களை நடத்தி, முஸ்லிம்கள் மீது பழியையும், இஸ்லாத்தின் மீது அவதூறுகளையும் பரப்பிக் கொண்டே இருக்கின்றார்கள்.

இந்த பொய்களின் பரப்புரையை மிகவும் பரபரப்பாகவே வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் மக்களின் மனதில். ஆனால் செய்திகளின் உண்மையான மறுபக்கத்தை எட்டிப்பார்க்கக் கூட நேரமில்லாமல் ஆக்கிவிடுகின்றார்கள்.

உண்மை ஒரு படியைத் தாண்டுவதற்கு முன்பு பொய் உலகை சுற்றி வந்து விடுகின்றது.

நாம் சொல்லும் உண்மைகள் மக்கள் மன்றத்தை எட்டுவதற்கு நாள்களாகின்றன. அதற்குள் நாளும் ஒரு நிகழ்வு நடந்து விடுகின்றது.

இதில் வேறொரு வேதனையும் வேடிக்கையும் என்னவென்றால் இந்துத்துவ தீவிரவாதிகள் சிக்குகின்ற போதெல்லாம் தீவிரவாதத்திற்கு மதமில்லை எனச் சொல்லுவார்கள். ஆனால் அதே நேரத்தில் முஸ்லிம்கள் மீது பழியைப் போடும் போது திருக்குர்ஆனில் அவர்களுக்கு சொர்க்கத்தை வாக்களிப்பதால் இவையெல்லாம் நடக்கின்றது என்பார்கள். இதனை நாம் டிசம்பர் 2015 வைகறை வெளிச்சத்தில் பாரிஸ் தாக்குதல் யாரால்? யாரால்? என்ற அட்டைப்பட கட்டுரையில் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

இந்தப் பின்னணியில்தான் நாம் இப்போது நாம் நாட்டில் ‘IS' - Islamic State. இஸ்லாமிய அரசு என்ற பெயரில் கைது செய்யப்பட்டு பாழாக்கப்படும் முஸ்லிகளின், அதாவது முஸ்லிம் இளைஞர்களின் வாழ்க்கையைப் பார்த்திட வேண்டும்.

## இப்போதைய கைதுகள்

பெங்களூரு அதாவது கன்னட மாநிலத்திலிருந்து 6 முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதில் ஒருவர் மென்பொருள் பொறியியல் வல்லுநர்.

இன்னொருவர் இராசயன விஞ்ஞானத்தில் இளம்நிலை பட்டப்படிப்பை படித்துக் கொண்டிருப்பவவர். அதாவது, Chemical Engineering Student.

இன்னும் நான்கு பேர் இதுபோல், கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் கன்னட மாநிலத்தின் பெங்களூரு, மங்களூரு, திமாகூரு ஆகிய இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அவர்களின் பெயர்கள்,

முஹம்மத் அஃப்சல், வயது 35, B.E.

நஜ்மல்குதா - வயது 26.

சுஃஹைல் அஹ்மத் - இவர் ஓர் ஆலிம்

செய்யித் முஜாஹித் - ஹூஸைன் - இவர் வீட்டுத் தட்டுமுட்டு சாமான்கள் விற்பனை செய்பவர்.

ஆசிஃப் அலீ - இப்படி அண்டை மாநிலம் கன்னடத்திலிருந்து முஸ்லிம்களைக் கைது செய்தவர்கள், எப்படி கன்னடாவில் முஸ்லிம் அதிகமாக வாழும் அதுவும் வசதியாக வாழும் பட்கலை விட்டு வைப்பார்கள்? ‘பட்கல்’ வாழ் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை சீரழிக்கும் வேலைகள் நீண்ட நாள்களாகவே நடந்து வருகின்றது.

உண்மையில் பட்கல் - ஐ அவர்கள் விட்டு வைக்கவில்லை. அங்கிருந்தும் ‘ஷஃபி அர்மார்’ என்பவரைக் கைது செய்திருக்கின்றார்கள். இவர் இந்தியன் முஜாஹித்தீன் என்ற அமைப்போடும் தொடர்புடையவர் எனவும் கூறியிருக்கின்றார்கள்.

**ஆதாரம் :** Times of India, January 23, 2016 P13.

இந்தியன் முஜாஹித்தீன் என்றொரு அமைப்பு நமது உளவுத்துறையின் ஏடுகளில் மட்டுந்தான் இருக்கின்றது என்பதை நாம் கடந்த 10 ஆண்டுகளாக ஆதாரப்பூர்வமாகக் எடுத்து விளக்கி வருகின்றோம்.

ஒன்று இந்த மொத்த கைதுகளும் போலியானவை. இஸ்லாத்தையும், முஸ்லிம் களையும் மீண்டும் தீவிரவாதத்தோடு இணைத்துக் காட்டிடவே இவை பயன் படுத்தப்படுகின்றன என்பதை நிருபிக்க போதுமானவை.

கன்னட மாநிலத்தில் கைது செய்யப்பட்ட இவர்களுடன் இன்னும் ஐந்து மாநிலங்களிலிருந்தும் பல முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களும் இதே போன்று அப்பாவிகள் தாம் என்பதற்கு இந்தியன் முஜாஹித்களோடு இவர்களை இணைப்பதே போதுமான சான்றாகும்.

**ஆதாரங்கள்:**

1. இந்த கைதுகளுக்கான தகவல்கள் - உளவு - அமெரிக்காவின் CIA என்ற Central Intelligence Agency - மத்திய உளவுத்துறை கொடுத்த தகவல்.

இந்த அமெரிக்கா இஸ்லாத்தின் மீது ஒரு தொடர் போரை நடத்தி வருகின்றது என்பதை நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டி இருக்கின்றோம். அவர்கள் BJP - என்ற பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வரும் போதெல்லாம் இந்தியாவின் முஸ்லிம்களை அழிக்கும் திட்டங்களை அதிவேகமாக நிறைவேற்றியே வந்திருக்கின்றார்கள். எடுத்துக் காட்டாக டிசம்பர் 13-2001 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தாக்குதல் (விரிவான விளக்கங்களுக்கு படியுங்கள் ‘நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்’ - Terror Over Democracy)

நாம் பிரபல்யமாகப் பேசிடும் 26/11 என்ற மும்பைத் தாக்குதலிலும் அமெரிக்காவின் கைகள் உண்டு. 26/11 என்ற மும்பைத் தாக்குதலில் படகிலிருந்து இறங்கி வந்தவர்களை முதலில் பார்த்தவர் மீனவப் பெண்மணி அனிதா இராஜேந்திர உடையா - என்ற பெண்மணி. இவரை அமரிக்கா அழைத்துச் சென்றுதான் பொய்ச் சொல்லச் சொன்னார்கள்.

ஆதாரம் : Who Killed Karkare? - கர்க்கரேயைத் கொலை செய்தது யார்? - S.M. முஷ்ரிஃப்.

அதே போல் தீவிரவாதிகளோடு பேசியதாகச் சொல்லப்படும் GPS - Global Positioning System - வின்கோள் தொலை பேசிகள் அமெரிக்காவிலிருந்து இயக்கப்பட்டதுதான். இவற்றையெல்லாம் கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலில் காணலாம். ஆக அமெரிக்கா இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள்

மீதும் தொடுத்துவரும் போரில் இங்குள்ள பாசிஸ்ட்டுகளும் துணை போயுள்ளனர் என்பதே உண்மை.

2. ஜிஹாதி இலக்கியங்கள் - இந்த அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்ததற்குச் சொல்லப்படும் இன்னொரு காரணம், இவர்களிடம் ஜிஹாதி இலக்கியங்கள் இருந்தன.

இன்றளவும் நமது உளவுத்துறையினர் இப்போது NIA - National Investigation Agency - தேசிய புலனாய்வு முகவாண்மை, ஜிஹாதி இலக்கியங்கள் எவை என்பதை சொல்ல வில்லை. இவை சில நேரங்களில் உருதுவில் எழுதப்பட்ட நூல்களாகவோ அல்லது அரபி மொழி இலக்கியங்களாகவோ இருக்கும்.

ஆகவே, சில நேரங்களில் தீவிரவாதிகள் எனச் சித்திக்கப்படுபவர்களின் வாகனங்களில் திருக்குர்ஆன் பிரதிகள் இருந்தன என்று கூட ஜிஹாதி இலக்கியத்திற்கு விளக்கம் தந்துள்ளனர். இதுவும் நம் நாட்டவர்களின் சொந்த சரக்கல்ல, அதுவும் அமெரிக்காவும், பிரிட்டனும் கற்றுத்தந்தவைதான்.

3. மூன்றாவதாக, முத்தான ஆதாரம் அவர்கள் இணையதளங்களோடு தொடர்பு டன் இருந்தனர் என்பதே.

அன்றைய நாட்களில் அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்ய முக்கிய ஆதாரங்களாக, அவர்களின் செல்போன்கள் காட்டப்படும். அதில் அரபி எழுத்துக்கள் இருந்தால் அந்த நபரை சர்வதேச தீவிரவாதி யாக காட்டுவார்கள்.

இன்றைய நாட்களில் செல்போனி லேயே இணையதளம் இணைக்கப்பட்டு விட்டதால் Internet Connection இணையதள இணைப்பு மிகப் பெரிய காட்சியாகக் காட்டப்பட்டு, கைது வேட்டைகள் நடை பெறுகின்றன.

இணையதளத்தில் 'IS' செய்திகளைப் பார்த்தவர்கள், என்பதை ஆதாரமாகக் காட்டி கைதுகளைச் செய்தால் குறையாமல் 10 லட்சம் பேரையாவது கைது செய்ய வேண்டி இருக்கும். இதில் எல்லா சமயத்தவர்களும் அடங்குவர்.

இது போன்ற ஆதாரமற்ற தகவல்களின் அடிப்படையின் கீழ் தான் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக் கின்றார்கள்.

கைது செய்தவர்களே சொல்லும் செய்தி

இந்த 14 முஸ்லிம் இளைஞர்களையும் கைது செய்த NIA - தேசிய புலனாய்வு முகவான்மையே ஒரு செய்தியைச் சொல்லுகின்றது அது,

அந்த இளைஞர்களிடமிருந்து வெடி பொருள்களைக் கைப்பற்றியது உண்மைதான். ஆனால், அதைக் கொண்டு அவர்கள் எந்தத் தாக்குதலையும் நடத்திட இயலாது. காரணம் அவர்களுக்கு அந்த வெடிப்பொருள்களை கொண்டு எதுவும் செய்திட தெரியாது. அவர்கள் பெரிய தாக்குதல் எதையும் நடத்திட திட்டமிடவில்லை. இந்தச் செய்தியையும் Times of India - 23.01.2016 இதழ் இப்படிக் கூறுகின்றது.

"14 members may not really planning for a big strike but could have targetted other areas"

Source - Times of India 23.1.2016

இதன் பொருள், இந்த 14 உறுப்பினர்களும் எந்தக் கூட்டுப் படுகொலை களையும் செய்திட உண்மையிலேயே திட்டமிடவில்லை. ஆனால் வேறு இடங் களை இலக்காகக் கொண்டிருக்கலாம்.

இந்த "வேறு இடங்களை இலக்காகக் கொண்டிருக்கலாம்" என்றவர்கள், அந்த அப்பாவி முஸ்லிம்களை காரணமின்றி காவலில் வைத்திட பிரயோகப்படுத்தப்படும் சொற்கள் தாம் அவை.

அதே செய்தியில் NIA - என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகவாண்மை இன்னொரு உண்மையை இப்படி ஒத்துக் கொள்கின்றது.

"The IED material recovered during the raids suggested that the alleged terrorists lacked the wherewithal to carry out a big massacre"

Source - Times of India 23.1.2016

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட IED என்ற பொருள்கள் அவர்களிடம் ஒரு பெரிய தாக்குதலை நடத்துவதற்குரிய வகை, தொகைகள் இல்லை என்பதையே காட்டு கின்றது.

வைகறை வெளிச்சம் - சார்பில், அடித்துச் சொல்வோம். நிச்சயமாக இந்த வெடி பொருள்கள் அவர்களின் கைகளிலிருந்து பெறப்பட்டவை அல்ல. அது அவர்கள் பெயரில் இந்தக் காவலர்களே வைத்திருப்பார்கள்.

இதற்கு முன்னால் பல முஸ்லிம் இளைஞர்கள் விவகாரத்தில் இதுவே நடந்தது. இப்போதும் இதுவே நடந்து கொண்டிருக் கின்றது.

கோவையில் 2006 ஆம் ஆண்டு மனித நீதி பாசறையில் இதுவே நடந்தது. கிச்சான் புகாரி வழக்கின் போதும், மேலப்பாளையத் திலும் இதுவே நடந்தது.

மனித நீதிப் பாசறை உளவுத்துறையின் ஆட்டங்களுக்கெதிராக சமருக்கு நின்று, வென்றது. ஏனையோருக்கு அந்த அவகாசமிருக்கவில்லை.

ஆகவே இந்த வெடிபொருள்கள் எடுக்கப்படுபவை அல்ல. மாறாக வைக்கப் படுபவை.

வடக்கேயும் அதாவது வட இந்தியாவில் பல வழக்குகளில் இது போன்ற பொய் வழக்குகளிலிருந்து நீதிமன்றங்கள்- முஸ்லிம் இளைஞர்களை விடுவிக்கும் போது, வெடி பொருள்கள், குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவி முஸ்லிம்களிடமிருந்து எடுக்கப்படவில்லை. அவர்கள் பெயர்களில் வைக்கப்பட்டவை தான் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

## இன்னொரு ஆதாரம்

இந்த இளைஞர்களை அதிகாலை 2மணிக்கும் 3 மணிக்குமிடையே அவர்களின் வீடுகளிலிருந்துதான் கைது செய்திருக் கின்றார்கள். எந்த முட்டாளும் அதிலும் பொறியியல் படிப்பை படித்தவர்கள் நிச்சயமாக தங்கள் வீடுகளில் வைத்துக் கொண்டு தூங்கி இருக்க மாட்டார்கள்.

ஆக, ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்களின் அடிப்படையில் பல இளைஞர் கள், அதுவும் படித்த முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இனி அவர்களின் வாழ்க்கையும், அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கையும் பாழாகிப் போகும். அல்லாஹ் காப்பாற்றுவானாக!

## நீதிமன்றம் செல்வோம் வெல்வோம்- முஸ்லிம் பெண்கள்

இப்படிப் பிரகடனப் படுத்தி இருக்கின்றார்கள் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்களின் குடும்பத்தைச் சார்ந்த தாய்மார்கள், திருமணமானவர்களின் மனைவிமார்கள், சகோதரிகள்.

இவர்களின் நெஞ்சுறுதியைப் பாராட்டு வோம்!

அவர்களோடு நிற்போம். குறைந்த பட்சம் அவர்கள் தீவிரவாதிகள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறி புறக்கணிக்கா மலிருப்போம்.

கன்னட மாநிலத்தில் கைது செய்யப்பட்ட முஹம்மத் அப்சல் -31, செய்யித் மஜாஹித் ஹூசைன் - 32 இவர்களின் மனைவிமார்கள் இந்தச் சட்ட ரீதியான சண்டைக்கு தயாராகி ஏ.ஆர். கான் என்றொரு வழக்கறிஞரையும் வைத்திருக்கின்றார்கள்.

அவர் எடுத்த எடுப்பிலேயே சிறப்பாக வாதிட்டிருக்கின்றார்.

Source - The New Indian Express - 26.1.2016

இப்போது நீதிமன்றங்கள் குஜராத் போன்ற மாநிலங்களில் மோடிப் பேரவை களாக மாறிவிட்டன. நியாயம் நீதி மோடியின் ஆட்சியில் இல்லை என்றாகிவிட்டது. என்றாலும் நல்ல நடுவுநிலையான நீதிபதிக்கும் இருக்கத்தான் செய்கின்றார்கள். போராடுவோம் வெற்றிபெறுவோம். இன்ஷா அல்லாஹ்.

இதில் முஹம்மத் அப்சல் அவர்களின் மனைவி புஷ்ரா முஹம்மத் அப்சல் நான்கு வயதான மகளுடன் நீதி தேடி புறப்பட்டுள்ளாள்.

எப்படியும் 10 ஆண்டுகளுக்கு மேல் இந்த போராட்டம் தொடரும். அதற்கான உறுதியை அந்த தாய்மார்கள் பெற வேண்டும். கூட்டமைப்புகள் கெடுத்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்ஷா அல்லாஹ்

பொறுத்திருந்து பார்ப்போம்!

**எம்.ஜி.எம்.**

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

1. சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 ரூ. 90.00
2. ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது ரூ. 100.00
3. சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 ரூ. 50.00
4. End of Casteism T.M. Mani பக்கம் -134 ரூ. 50.00
5. அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 ரூ. 10.00
6. டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 ரூ. 10.00
7. நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் ரூ. 25.00
8. மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 ரூ. 80.00
9. தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 ரூ. 20.00
10. செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 ரூ. 40.00
11. கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 ரூ. 250.00
12. சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 ரூ. 15.00
13. ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 ரூ. 40.00
14. சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 ரூ. 50.00
15. நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 ரூ. 175.00
16. தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 ரூ. 90.00
17. பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163ரூ. 110.00
18. பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 ரூ. 90.00
19. இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 ரூ. 130.00
20. கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 ரூ. 70.00
21. எது முதலில்? டாக்டர் யூசஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி ரூ. 50.00
22. சாதி ஒழிந்தது - கன்னடம், ரூ. 50.00
23. அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் ரூ. 20.00
24. கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 ரூ. 30.00
25. முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 ரூ. 15.00
26. இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 ரூ. 50.00
27. இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் ரூ. 40.00
28. இஸ்லாமும் விஞ்ஞானமும் ரூ. 70.00
29. இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? ரூ. 60.00
30. இஸ்லாமும் பெண்களும் ரூ. 70.00
31. இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? ரூ. 70.00
32. தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? ரூ. 30.00
33. 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? ரூ. 220.00
34. ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் ரூ. 20.00

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்புக்கு : 8148129887

# இருதயங்கள் இணைந்தன இடலாக்குடியில்




"அல்ஹம்துலில்லாஹ்" வெற்றிகர மாக "மாபெரும் புற்று நோய் விழிப்புணர்வு" என்ற நிகழ்வு கோட்டார் இடலாக்குடியில் மிகச் சிறப்பாக முடிவடைந்தது. 1000க்கும் மேற்பட்ட மக்கள் கருத்தரங்கில் கலந்துக் கொண்டனர். 600க்கும் மேற்பட்ட மக்களுக்கு இலவசமாக பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. 10,000 புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு மக்களுக்கு சென்றடைந்தது. பொதுமக்கள் விழிப்புணர்வு பெற்றனர். ஆரோக்கியமான நிகழ்வுகளாக இது புகழப்பட்டது - முற்றுப்பெற்றது. "எல்லாப் புகழும் இறைவனுக்கே"

**MEHA** என்ற சமுதாய அமைப்பு. ஆரம்பித்து ஓராண்டு முடிந்த தருவாயில், புற்றுநோயைப்பற்றி மக்களிடம் விழிப் புணர்வை ஏற்படுத்தியது. பல தன்னார்வ அமைப்புகளை நாடி, எடுத்துரைத்ததின் படி மாபெரும் புற்று நோய் விழிப்புணர்வு என்ற நிகழ்வு. வெற்றியும் பெற்றது."

UGASEWA - யிடம் கைகோர்த்து மற்றும் TANSEWA, ZAMSEWA, KFC, KEF-G, JISWA, KEMWA, KWA-Q, KALIMA, KEMST, சமூக ஆர்வலர்கள், மதரஸா மாணவிகள், மற்றும் SDPI, PFI ஆகியவர்கள் பொருளாதாரத்துடன் செயலிலும் செயல்பட்டு பெரும் பங்காக இணைந்து இந்த மாபெரும் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்விற்கு ஆர்வத்துடன் ஒத்துழைத்தார்கள். "அல்லாஹ்"வின் நாட்டப் படியே நிகழ்த்தப்பட்டது- நிறைபெற்றது.

இன்று சமூக சேவைகளுக்கு இருதயங்கள் இணைந்தது போல் என்றும் இணையட்டுமாக - ஆமீன். மீண்டும் இணைவோம். மகத்தான பணிகளுக்கு!!

## MEHA - ஓர் அறிமுகம்



பல நாடுகளில் இருந்த நண்பர்களை "ஸதக்காஹ்" என்னும் ஒற்றைச் சொல்லால் இணைத்து தோன்றியது தான் MEHA என்ற அமைப்பு. சமுதாயத்தின் நலிந்த குடும்பங் களுக்கு உதவும் உன்னத நோக்கத்தோடும் ஏக இறைவனின் நாட்டத்தோடும், ஒவ்வொரு வருடமும் இறைவேதம் இறங்கிய மாதமாம் ரமலானில் "ஸதக்காஹ்" வை வழங்க தீர்மானித்தது. இதன் பொருட்டு முதலாம் ஆண்டு 2015-ல் "MEHA" வின் 120 உறுப்பினர்கள் தலா ரூ.6000 வீதம் வழங்கிய "ஸதக்காஹ்" தொகையில் ரூ. 4.50 இலட்சம், இறைவன் அருளால் சுமார் 75 குடும்பங் களுக்கு தலா ரூ. 6000 வீதம் அவர்களின் இல்லத்திற்கே சென்று "MEHA" உறுப்பினர்கள் பகிர்ந்தளித்தது ஈகைத் திருநாளை இனிதாக்கியது.

மேலும் தோன்றி ஒரு வருட காலமே நிறைவடையும் இத்தருணத்தில் சமூக நலன் கருதி, பல சகோதர சமூக நல அமைப்புகளை ஒற்றுமையுடன் ஒன்றிணைத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் மாபெரும் "புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி, கருத்தரங்கம் மற்றம் இலவச மருத்துவ முகாம்" ஐ வெற்றிகரமாக நடத்தியது. MEHA வின் சமூக நலப்பயணத்தில் ஒரு மைல் கல் என்றால் அது மிகையாகாது.

மேலும் இம்முகாமில் சுமார் 600 பெண்களுக்கு இலவச பரிசோதனையும், 10000 விழிப்புணர்வு கையேடுகளும் வழங்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

Muslim Expartriates Humanitarian Association (MEHA) தன் பணியை மேலும் சிறப்பாக தொடர, வேறுபாடுகளை களைந்து, "நாம்" என்ற எண்ணத்துடன் ஒற்றுமையுடன் கைகோர்த்து செயல்பட அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்ஷா அல்லாஹ்.

### நிர்பந்தம் அல்ல நிய்யத் இருந்தால்

சமூக நலன்கருதி, சமூக சேவைகளுக்கு இணைவதாக இருந்தால், MEHA வில் சேர்ந்து நிவர்த்தி செய்யலாம். எந்த பிரதிபலனும் எதிர் பார்க்காமல் நிறுவப்பட்டது தான் இந்த MEHA. வருடத்திற்கு ஒருமுறை 6000 ரூபாய் உறுப்பினர்கள் கொடுத்ததின்படி, ரமழான் மாதத்தில் ஏழ்மையான குடும்பங்களுக்கு 6,000 ரூபாய் வீதம் கொடுக்கப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

அதுபோக பொதுவான சமூக பணி களுக்கு, தாராளமான மனம் கொண்டவர் களிலிருந்தும் தன்னார்வ அமைப்புகள் இருந்தும் தனியாக வசூலித்து இன்னபிற சமூக பணிகள் மேற்கொள்கிறோம். பல நற்காரியங்கள் நிலுவையில் உள்ளது. ஒவ்வொன்றாக நற்பணிகள் செய்வதற்கு முன் வாருங்கள். இம்மையிலும், மறுமையிலும் நற்செயல்களுக்கான நற் கூலியை அல்லாஹு தாலா நாம் அனைவருக்கும் கொடுத்திடு வானாக - ஆமீன்.

### மேலும் தொடர்புக்கு

Bava Kasim - (President) - Bahrain - Mobile No. +97339246993

Mohamed Salih - (Secretary) - Dubai - Mobile No. +971558737704

Jahabar Sathick - (Treasurer) - KSA - Mobile No. +966505387731

Basith Khan - (Vice Treasuree) - India - Mobile No. +9184228775356

Jahaber Sathick - (Sub. Comt.) - Uganda - Mobile No. +256712211900

Noorulameen Abun - (Youth Comt.) - Muscat - Mobile No. +96897294015


# அடிப்படையாய் இருந்தது இஸ்லாமே!

எத்தனையோ தலைவர்கள் அரசியலில் வந்தார்கள், வாழ்ந்தார்கள், இன்னும் இறந்தும் போனார்கள். ஆனால் இவர் போல் ஒருவர் உண்டோ? இனி இவர் போல் ஒருவரை காண்பது எப்போது? என்று ஒரு நாடே கண்ணீர் விட்டழுத தலைவர்கள் ஓரிரண்டு பேர்களே! அவர்களில் ஒருவர்தான் (ஜனாதிபதி) ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள். இவருக்கு அன்பு, அறிவு, பண்பு, பணிவு, எளிமை என்று மறு பெயர் சூட்டி விட்டார்கள் நாட்டு மக்களெல்லாம்.

இருக்கும் போதும் சரி, இறந்த பின்பும் சரி அவர் ஊழல் செய்தார் என்றோ, ஒழுக்க கேட்டில் விழுந்தார் என்றோ, ஒரு பேச்சிற்கும் கூட இடம் உண்டா? என்றால் இல்லை. இல்லவே இல்லை. மாறாக தன்னலமற்றவர், பொது நலம் விரும்பி, ஊருக்காக வாழ்ந்தவர் என்று மட்டுமே பேச்சும், மூச்சும் வந்தது.

இவ்வளவு பெரிய பதவி, கண்முன்னே எவ்வளவு காசு, பணம் கண்ட பின்பும் மனதை இதை எல்லாம் விட்டும் காப்பாற்றினார் என்றால் அது சாதாரண விஷயமா? அவரை இப்படி இருக்க வைத்தது எது? யோசித் தோமா? ஆம் யோசித்தால் கிடைக்கும் ஒரே பதில் இதுதான்.

இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் இன்னும் விளக்கி கூற வேண்டும் என்றால், "இறைவனும், இறைத் தூதரும் காட்டிய வழிமுறைகளும், குர்ஆனும், சுன்னாவும், வேத வரிகளும், தூதர் மொழிகளுமே".



ஆம் சகோதர, சகோதரிகளே!

1. அவர் தினமும் ஐவேளை ஏக இறைவனை தொழுததால் தானாகவே வந்தது அவரிடம் பொறுமை.

2. மக்கா நகரின் ஆட்சி பொறுப்பு தன் கைவசம் வந்த பின்பும் ஆரம்பத்தில் தான் ஒரு ஆட்டிடையனாகவே இருந்தேன் என்று அடிக்கடி கூறி பெருமை என்ற விஷத் தன்மையை தன்னை தீண்ட விடாமல் காத்த நபியை பின் பற்றியதால் வந்தது இவரிடம் எளிமை.

3. 'ஓதுவீராக' என்று கூறி கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து முதல் வசனமே இறக்கப்பட்டதுதான்.

4. மனிதர்கள் மீது நீங்கள் இரக்கம் காட்டினால் இறைவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான் என்ற நபிமொழியை உணர்ந்து கொண்டதால் இவரிடம் வந்தது இரக்க குணம்.

5. "உனக்கு நீ எதை விரும்புகிறாயோ அதை உன் சகோதரனுக்காக விரும்பாத வரை உங்கள் ஈமான் முழுமை பெறாது" என்ற நபி மொழிகள் செயல் வடிவம் கொடுக்க விரும்பியதால் இவரிடம் வந்தது தன்னலமற்ற பொது நலம்.

6. உலகத் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் தான் "இறக்கும் போது தன் சில பொருட்கள் கூட அடைமானத்திலே இருந்தது" அந்த நபியை பின்பற்றியதால்தான் மக்கள் பணத்தில் குளிர்காயாமல் தன் சுய தேவைக்கு தன் புத்தகங்களை அடைமானம் வைத்து தன்தேவையை நிறைவேற்றி இருக்கிறார். இஸ்லாத்தை பின்பற்றியதால் வந்தது இவரிடம் ஊழலற்ற உத்தம தன்மை.

ஆக அப்துல் கலாமை நேசித்தவர்களே! அவருக்கு அடிப்படையாய் இருந்த இஸ்லாத்தை நேசியுங்கள், போற்றுங்கள், பின் பற்றுங்கள்.

## வாசகர் கடிதம்

குருட்டுக் கொடியின் கீழ் இனவெறிக்கு அழைப்புவிடுக்கவோ இனவெறிக்காக ஒத்துழைக்கவோ செய்து அதற்காகக் கொல்லப்படுபவர் அறியாமைக் கால மரணத்தையே சந்திப்பார் என்று நபி அவர்கள் கூறினார்கள். அறியாமைக் கால மக்களிடம் இருந்த மிகப் பெரிய பாவகாரியம் இனவெறி யாகும். தான் உயர்ந்தவன் தங்கள் குலம் உயர்ந்தது, தன் குலத்தைச் சார்ந்தவர்கள் தவறு செய்திருந்தாலும் அவனுக்காக நியாய அநியாயத்தை பார்க்காமல் போராடுவது அதற்காகப் பலரைக் கொல்வது என்பது அவர்களிடம் ஊறிப்போன செயல்பாடாகும். இறையச்சத்தின் மூலமே ஒருவன் உயர்வடைய முடியும். குலத்தாலோ அல்லது நிறத்தாலோ அல்லது மொழியாலோ ஒருவன் இன்னொரு வனை விட உயர்ந்து விட முடியாது என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையாகும். யாராவது இனவெறிக்காக மட்டும் அல்லது இனத்திற்காக நியாயமின்றிப் போர் செய்து இறந்து விட்டால் அவர் இஸ்லாத்தின் கொள்கையை ஏற்றவராக மரணிக்கவில்லை என்று நபிகளார் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார்கள். எனவே யாரும் இனத்தை வைத்து, நிறத்தை வைத்து, மொழியை வைத்து கூட்டம் போடக் கூடாது. மனிதப் பண்புகளையும், மனித நேயத்தையும் 1400 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிக் காட்டியவர்தான் நபிகள் நாயகம். இன்று வரை முஸ்லிம்கள் அவர் சொல், செயல் அங்கீகாரம் அவற்றை பின் பற்றி கொண்டிருக்கிறார்கள். அது மிகையாகாது.

இறை நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வை அவனுடைய தூதரைக் கொண்டும் அவனுடைய தூதரின் மீது அவன் இறக்கி வைத்த இவ் வேதத்தைக் கொண்டும் இதற்கு முன்னர் அவன் இறக்கி வைத்த வேதங்களைச் கொண்டு நீங்களும் நம்பிக்கை கொள்ளுங்கள். எவரேனும் அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் மறுமை நாளையும், நிராகரிக்கிறாரோ அவர் தூரமான வழிகேடாக வழி கெட்டு விடுவார்.

**அன்சரிஸா உமர்**

# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!



### விடுதலைப் போரின் மறைக்க முடியாத ஆனால் மறைத்துவிட்ட அத்தியாயம்

**இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு.**

**அவர் ஏன் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு அப்படி அஞ்சினார்?**

## நேதாஜி பற்றி மோடி வெளியிட்டவை. . .

*நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களைப் பற்றிய தகவல்கள் அடங்கிய 100 கோப்புகளைக் குஜராத் இனப்படுகொலை புகழ் மோடி 23.1.2016 அன்று வெளியிட்டிருக்கின்றார். 23 ஜனவரி நேத்தாஜி அவர்களின் 119 ஆம் பிறந்த நாள். அவர் பிறந்த நாளில் இந்த பொய் பதிவு.*

*ஆமாம்! அது உப்புச்சப்பற்ற ஓர் வெளியீடாகப் போனது. காரணம், புழக்கத்திலிருக்கும் அதாவது மக்கள் மன்றத்தில் உலவிக் கொண்டிருக்கும் எந்த வினாவுக்கும் அது பதிலாய் அமைந்திடவில்லை.*

*குறிப்பாக நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் மரணம் குறித்து எழுப்பப்பட்ட வினாக்கள் அப்படியே இருக்கின்றன. 1945, ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் நாள் ஓர் விமான விபத்தில் இறந்தார் என்பதைத்தான் உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். இனப்படுகொலை*

புகழ் மோடி வெளியிட்ட ஆவணங்கள் சுபாஷ் சந்திர போஸ் விமான விபத்தில் இறந்தார் என்றே சொல்லுகின்றன. இதுதான் உண்மை என்றால் இது இன்றளவும் நாடறிந்த, உலகறிந்த செய்திதான். அதற்கு ஏன் 16,600 பக்கங்கள். இத்தனைப் பீடிகை! இத்தனை சஸ்பென்ஸ்.

இதுதான் உண்மை என்றால் கடந்த 70 ஆண்டுகளாக இதனை உலகே அறியக்கூடாத இரகசியம் என மறைத்து வைப்பானேன். அன்றே வெளியிட்டு இந்த மொத்த விவரத்தையும் நீத்துப் போகச் செய்திருக் கலாம். ஆகவே இனப்படுகொலைப் புகழ் மோடியும் உண்மையை மறைத்துவிட்டார் என்றேபடுகின்றது. கொலைகாரர்கள் என்றைக்கு உண்மையை சொன்னார்கள்.

இனி இந்த அறிவிப்பு உண்மையானால் பண்டித ஜவஹர்லால் நேரு அன்றைய தினங்களில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் தொடர்ந்து நேத்தாஜியின் குடும்பத்தை ஏன் உளவு பார்த்தார். ஏன் நேத்தாஜி வந்து விடுவாரோ, நேத்தாஜியின் குடும்பம் அரசியலுக்கு வந்து விடுமோ என்றெல்லாம் அஞ்சினார்? இப்போது வெளியிடப்பட்ட 16,600 பக்கங்களில் இவற்றிற்கெல்லாம் விடை இல்லை.

மக்கள் மன்றத்தில் ஆழமாகப் பதிந்து விட்ட இந்த வினாக்களுக்கு மோடியின் வெளியீட்டில் பதில் இல்லை. ஏமாற்றமே மிச்சம்.

## பாசிஸ்ட்டுகளின் அரசியல்

இந்த வெளியீட்டிலும் இனப் படுகொலை புகழ் மோடி ஓர் அரசியல் விளையாட்டையே விளையாடி இருக் கின்றார்.

ஆமாம், இதில் நேத்தாஜியின் குடும்பத்தைச் சார்ந்த சந்திரகுமார் போஸ் என்பவரும் பாரதீய ஜனதா கட்சியில் இணைந்து விட்டதாக அறிவிப்புகள்.

**(ஆதாரம் : The Hindu- English 26.1.2016)**

அதன் மூலம் நேத்தாஜி பிறந்த மேற்கு வங்கத்தில் வாழும் வாக்காளர்களைத் தன் பக்கம் ஈர்த்திட முயற்சி செய்திருக்கின்றார்.

இப்போதைய வெளியீட்டில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். அது, இப்போது வெளியிடப்பட்டவற்றில் உளவுத் துறையினரால் அன்று தரப்பட்ட தகவல்கள் எதுவும் இல்லை.

**(ஆதாரம் : Indian Express 24.1.2016)**

## மோடி வாய்திறப்பாரா?

இந்தியா விடுதலைக்காகத் தன்னையே ஒப்படைத்த மாவீரன் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ். அவருடைய மரணத்தோடு தொடர்புடைய நாடுகளில் இரண்டு நாடுகள் குறிப்பிடத்தக்கவை.

1. ஜப்பான், 2. ரஷ்யா

இந்த இரண்டு நாடுகளுக்கும் அண்மையில் மோடி உல்லாசப்பயணம் செய்து வந்தார். (செய்திகளின் மறுபக்கம் அங்கெல்லாம், இந்து ராஷ்டிராவுக்காக ஆதரவு திரட்டி வந்தார் எனக் கூறுகின்றது. இதனை, இன்ஷா அல்லாஹ் இனி வரும் நாட்களில் விரிவாகப் பார்ப்போம்.) தன் சுற்றுலாவின் போது மோடி இந்த நாட்டுத் தலைவர்களிடம் நேத்தாஜியைப் பற்றி பேசினாரா? அப்படிப் பேசியிருந்தால் என்ன பேசினார்? அதில் ஏதாவது தகவல்கள் உண்டா? இல்லையா? இதையெல்லாம் மோடி நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என மக்கள் கோருகின்றார்கள். குறிப்பாக எதிர் கட்சிகள் அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சி வினா எழுப்பி உள்ளது. இந்த வினாக்களுக்கு பதில் சொல்லிட மோடி வாய்திறப்பாரா?

இப்படியெல்லலாம் மக்கள் இப்போது கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதை இந்தியன் எக்பிரஸ் தெளிவாகத் தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

**ஆதாரம் : The New Indian Express 24.1.2016**

## இன்னொரு கேள்வி ரஷ்யாவிடம். . . ?

மோடி இன்னொரு கேள்விக்கும் பதில் சொல்லிட வேண்டும். அது, அவரே சொன்ன தகவலின் அடிப்படையில் வந்தது. அவர் முன்னாள் இந்திய பிரதமர் நரசிம்மராவ், ரஷ்யாவிடம் இந்தக் கேள்வியை அதாவது நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் இறுதி நாள்கள் பற்றிய கேள்வியை எழுப்பி

*இருக்கின்றார் எனத் திருவாய் மலர்ந் தருளினார்.*

*அவ்வாறு நரசிம்ம ராவ் ரஷ்யாவிடம் எழுப்பிய கேள்விக்கு ரஷ்யா சொன்ன பதில் என்ன? மோடி வாய் திறப்பாரா?*

**நேத்தாஜி குடும்பத்தின் இப்போதைய முறையீடுகள்**

*உளவுத்துறை நேத்தாஜி அவர்கள் பற்றி 20 ஆண்டுகளாக நேருவின் காலத்தில் சேகரித்த தகவல்கள் என்னென்ன? இவற்றை மோடி வெளியிட்டே ஆக வேண்டும்.*

*அடுத்து ரஷ்யா, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருக்கும் நேத்தாஜி பற்றிய கோப்புகளை வெளிச்சத் திற்கு கொண்டு வர வேண்டும். அவற்றி லிருக்கும் தகவல்களை மக்கள் மன்றத்தில் வைத்திட வேண்டும்.*

*நேத்தாஜியை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் போர்க் குற்றவாளி எனக் கருதினாரா? இந்தியாவிலிருக்கும் கோப்பு களில் இது போன்ற தகவல்கள் இடம் பெற்றனவா?*


*ஆங்கிலேயர்கள் நேத்தாஜியையும் அவரோடு அணி வகுத்து நின்றவர்களையும் போர்க் குற்றவாளிகள் என அறிவித்திருந்தனர். அவர்களின் கைகளில் சிக்கிய நேத்தாஜியின் போர்ப்படைத் தளபதிகளைப் பிரிட்டிஷ் இராணிக்கு எதிராகப் போர் தொடுத்தார்கள் எனக் குற்றம் சுமத்தி விசாரித்தார்கள். அவர்களில் 1,20,000 பேர் டெல்லி செங் கோட்டைக்குள் அடைக்கப்பட்டிருந்தார் கள். அவர்களில் 6 பேரை ஆங்கிலேயர்கள் கொலை செய்திருந்தார்கள்.*

*இவர்களின் 1946 இல் நடத்தப்பட்ட வழக்கில் நேத்தாஜியின் பிரதான தளபதி ஷா நவாஸ்கான் நேத்தாஜியின் இந்திய தேசப் படையின் சார்பில் குற்றச்சாட்டுகளை எதிர் கொண்டார். வாதாடினார். தண்டனையும் பெற்றார். இவற்றையெல்லாம் நாம் வைகறை வெளிச்சத்தில் எழுதிவரும் இந்தத் தொடரின் இறுதியில் காண்போம்.*

*இன்ஷா அல்லாஹ்*

**-தொடரும்**


இப்போது பரபரப்பான விற்பனையில் படித்து விட்டீர்களா!




**அ. மார்க்ஸ் அவர்களின்**

**டி.எம். உமர் பாரூக்**

**ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்**

**விலை : ரூ. 20.00**

வெளியீடு :

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

**ஆங்கிலம் : கரன் ஆம்ஸ்டிராங்** **தமிழில் : மு. குலாம் முஹம்மத்**



**நவீனங்கள் நிறைந்த இன்றைய உலகைப் பற்றி யார் கொள்ளும் பார்வையும் முழுமையானதாக அமைந்திடாது. அவர் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால்.**

**இஸ்லாத்தைப் புரிந்திட வேண்டும் என்றால், இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் புரிந்திட வேண்டும்.**

**முஹம்மத் (ஸல்) அவர்களை ஓர் இறைத்தூதர் என்ற அளவிலும், ஒரு மனிதர் என்ற அளவிலும் ஒரு தனி மனிதர் என்ற அளவிலும் புரிந்திட வேண்டும்.**

**இந்த உலகிற்கு மதங்களைக் கொண்டு வந்தவர்களில் மிகவும் அதிகமாக அறியப்படுபவர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.**

**அவர்களைப் பற்றி வெளிவந்துள்ள இலக்கியங்கள் பலப்பல. இந்த இலக்கியங்களில் பல அவரது வாழ்க்கையை சரியான கோணத்தில் நம் முன் சமர்ப்பிக்கின்றன. இன்னும் பல, வேண்டுமென்றே அவருடைய வாழ்க்கையைத் திரித்தும் புரட்டியும் தவறான எண்ணங்களையும் அவற்றின் வழி தவறான சிந்தனைகளையும் விதைக்கின்றன, வளர்க்கின்றன.**

**ஆனால் கரன் ஆம்ஸ்ட்ராங் -இன் இந்த நூல் அந்த கண்ணியமிக்க மனிதரின் வாழ்க்கையை நடுநிலையோடு நம்முன் சமர்ப்பிக்கின்றது.**

SUNDAY TIMES **லண்டலிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ்**

## அடுத்தடுத்து அடர்ந்து வந்த சோதனைகள்

மாட்சிமைமிக்க மக்கா! அதில் புகழ்மிக்க குலம்! ஹாசிமா குலம். இதில் தான் பிறந்தார்கள் புகழுக்குரியவர் என்ற பெயரைப் பெற்ற முஹம்மத் (ஸல்) அவர்கள்.

அவர் பிறப்பதற்கு முன்னரே அவர்களுடைய தந்தை அப்துல்லாஹ் அவர்கள் இறந்துவிட்டார்கள்.

தாயார் ஆமினா அவர்கள் வறுமையின் கோரப் பிடியில் சிக்கி இருந்தார்கள். அன்றைய நாட்டுப்புற அரபு மக்களின் பழக்கவழக்கங்களுள் ஒன்று வசதியான குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பாலூட்டுவது, வளர்ப்பது. அதன் வழி கிடைக்கும் பரிசில்களைப் பெறுவது. தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வது.

குழந்தைகளுக்குப் பாலூட்டவும், வளர்க்கவும் அவர்கள் நாட்டுப்புறங்களுக்கே அழைத்துச் சென்று விடுவார்கள்.

ஆனால் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி இருந்த ஆமீனாவின் மகன் முஹம்மத் அவர்களுக்குப் பாலூட்ட யாரும் வந்திடவில்லை. இறுதியில் மிகவும் ஏழையான குலத்திலிருந்த ஒரு பெண்தான் கிடைத்தாள்.

அகவை ஆறுவரை முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்த ஏழை பெண்மணியின் பராமரிப்பிலேயே வாழ்ந்தார்கள், வளர்ந் தார்கள். வறுமையும் , வாட்டமும் நிறைந்த

நாட்டப்புற வாழ்க்கையே அவ்வயது வரை அவர்களுக்கு!

நாட்டுப்புற வாழ்க்கையிலிருந்து வெளிப் போந்து மக்கா வந்த சில காலங்களுக்குள் அவர்களின் தாயாரும் மரணத்தின் மடியில் வீழ்ந்தார்கள்.

இடியாய் வீழ்ந்த இந்த சோகம் அவர்களை முழு அநாதையாக ஆக்கி அவர்களின் வாழ்க்கையையும் பாலைவன மாக்கிற்று.

'அநாதை' என்பதன் அந்தரங்கங்களை அகவாழ்விலும், புறவாழ்விலும் பட்டமுந்திய தடங்கள் அவரது வாழ்க்கை முழுவதும் பரவி க் கிடந்தது. அதன் அழுத்தமான தாக்கங்கள் அவர் வாழ்க்கையை வருடியே வந்து கொண்டிருந்தன. அதனால் வாழ்ந்த நாளெல்லாம் அநாதைகளின் ஆதரவாளராக அவர் பதித்த தடத்தால் இன்றளவும் அநாதைகள் ஆதரவையும், ஆறுதலையும் பெற்றுக் கொண்டே இருக்கின்றார்கள். இதை நாம், இதயம் நெகிழ இனி வரும் பக்கங்களில் பார்ப்போம்.

சூழ்நிலைகள் சூறாவளியாய் மழலை முஹம்மத்தின் வாழ்வில் சுழன்றடித்தாலும் சுற்றி வாழ்ந்த சொந்தங்கள், அவரை அதீத அன்புடன் வளர்த்தார்கள். அவர்களுடைய பாட்டனார் மிகவும் அன்போடு முஹம்மத்-ஐ பார்த்தார்கள், அரவணைத் தார்கள். ஆதலால் முதலில் அவர்கள் தன்னுடைய பாட்டனார் அப்துல் முத்தலிஃப் உடன் வாழ்ந்தார்கள். அப்துல் முத்தலிஃப் அவர்கள் மிகவும் சிறந்த வணிகர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தார்கள்.

பாட்டனார் அப்துல் முத்தலிஃப் அவர்கள் இரவில் கஆபாவின் வளாகத்தில் தான் தூங்குவார்கள். இதற்காக தன்னுடை பிள்ளைகள் அவருடைய படுக்கையை கஆபாவின் பக்கம் கொண்டு வந்திட வேண்டும். இப்படிப் படுக்கை வந்து சேரும் போது பாட்டனாருடன் முஹம்மதும் வருவார்கள். முஹம்மத்-ஐ தன் பக்கத்திலேயே வைத்துக் கொள்வார்கள் பாட்டனார் அப்துல் முத்தலிஃப். அன்பு பெருக்கால் பேரன் முஹம்மத்தின் முதுகில் தடவிக் கொடுத்துக் கொண்டே இருப்பார். தன் தாய் தந்தையரின் பாசத்திற்கு ஏங்கி நின்ற மழலை முஹம்மத்திற்கு பாட்டனாரின் பரிவும், பாசமும் ஆறுதலாக இருந்தது.

இந்த ஆதரவும், அதிக நாள்கள் நீடிக்கவில்லை. முஹம்மத்தின் எட்டாவது வயதில் அவருடைய பாட்டனாரும் மரணித்தார்கள். பாட்டனார் அப்துல் முத்தலிஃப் அவர்களின் சொத்துக்களில் எதுவும் முஹம்மதுக்கு கிடைக்கவில்லை. பாட்டனாரின் சொத்துக்களை அந்தக் குடும்பத்தில் செல்வாக்குமிக்கவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டார் கள். அதனால் மீண்டும் கதியற்ற கையறு நிலை.

இந்நிலையில் அவர்களின் பெரிய தந்தை அபூதாலிப் அவர்களின் அரவணைப் பின் கீழ் வாழ்ந்தார்கள் முஹம்மத் அவர்கள். அபூதாலீப் அவர்கள் அப்துல் முத்தலிஃப்யை போலவே, அன்பு செலுத்தினார். அபூதாலிப் அவர்கள் தாம் அப்போது ஹசிமா குலத்தின் தலைவராகவும் இருந்தார்கள்.

அந்தப் பருவத்தில் அந்தக் குடும்பத்தில் ஹம்சா என்பவர் மிகவும் பலமிக்கவர்களுள் ஒருவராக இருந்தார்கள். அவர்கள் அம்பு களை எய்வதிலும், வாள் வித்தையிலும் முஹம்மத்க்குப் பயிற்சி தந்தார்கள். இந்தப் பயிற்சிகள் வாழ்நாள் முழுவதும் பெருமளவில் உதவி செய்தது.

முஹம்மதுவின் பிரிதொரு பெரிய தந்தை அப்பாஸ் அவர்கள் முஹம்மத்தை வியாபாரத்தில் ஈடுபடுத்தினார்கள். வடக்கு சிரியாவுக்குச் செல்லும் தன் வியாபாரக் கூட்டத்தில் ஒரு வேலையைத் தந்தார்கள். இதில் முஹம்மத் அவர்கள் திறம்பட பணியாற்றினார்கள்.

பல்வேறு ஆய்வுகளும் தரும் ஆதாரங்களின் அடிப்படை முஹம்மத்தின் தோற்றத்தை இப்படிச் சித்தரிக்கலாம்

சராசரி உயரம்

பார்ப்பவர் உள்ளத்தில் பளிச்சென பதியும் தோற்றம். வசீகரிக்கும் சிரிப்பு.

ஆற்றிடும் பணிகளில் தீர்க்கம், துணிவு.

இதயத்தை முழுமையாக ஒப்படைத்து செயற்களம் காணும் லட்சிய லயிப்பு. இவற்றிற்கு சொந்தக்காரார். பயணத்தில் வாழ்க்கை இல்லாமையின் இடறுகளை நிரம்பவே சந்தித்தவர்.

ஆமாம்! தன் வாலிப பருவத்தில் தன் பெரிய தந்தையின் உறவினர் (தனக்கும் உறவுள்ள) ஃபாகிதா என்ற பெண்ணை திருமணம் செய்திட விருப்பம் தெரிவித்தார்கள் முஹம்மத்.

அதனை மறுத்தார்கள் அவர்களின் பெரிய தந்தை அபூதாலிஃப் அவர்கள். ஒரு மனைவியைப் பராமரிக்கும் வருவாய் முஹம்மத் அவர்களுக்கு இல்லை எனச் சொல்லி,

அடுத்து வந்தது வாழ்க்கையின் அடுத்தத் திருப்பம். அதனை அடுத்த இதழில் பார்ப்போம்.

இன்ஷா அல்லாஹ்.

**தொடரும்**

---

**35ம் பக்கத்தின் தொடர்ச்சி**



ஒருவரை சரியான தகவல் தெரிவிக்கவில்லை எனக் கூறி தற்காலிக பணி நீக்கம் செய்திருந்தார்.

ஆனால், அதன் பின்னரும் வெள்ளமும் வடியவில்லை. எந்த நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்படவில்லை. மேற் சொன்ன அறிக்கைகளும் நடவடிக்கைகளும் வெறும் கண்துடைப்பே என்பது ஜனவரி 15, 2016 இல் நாம் நடத்திய ஆய்வில் தெரிய வந்தது.

நாம் நேரில் சென்று பார்த்த போது தேங்கியிருந்த தண்ணீர் சாக்கடையாக மாறிவிட்டிருந்தது. முன்பு எவ்வளவு தண்ணீர் நின்று கொண்டிருந்ததோ அதே அளவு தண்ணீர் தற்போதும் நின்று கொண்டிருந்தது..

எனவே இதனை ஊடகங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற முனைப்பில் ஊடகங்கள் அனைவருக்கும் தெரிவித்தோம். NEWS 7 சானல் மட்டும் இதனை 17.1.2016 அன்று வெளியிட்டது.

இப்பகுதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து நமது சகோதரர் கமால் அவர்களின் வழியாக அவர்களின் மேலாளர் கவுரவ் அவர்களை தொடர்பு கொண்ட போது திருநின்றவூர் மக்களுக்கு உதவி செய்ய அவர் ஒப்புக் கொண்டார்.

இதனடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு ரூ. 1200 மதிப்புள்ள வீட்டுப் பாத்திரங்கள் 100 குடும்பங்களுக்கு தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் வரியாக திருநின்றவூர் பெரியார் நகர் பகுதி மக்களுக்கு 17.01.2016 அன்று வழங்கப்பட்டது. மொத்தம் ரூ.1,20,000 மதிப்புள்ள பொருட்கள் நிவாரணமாக வழங்கப்பட்டன.

**-ந.நி.**




# குஃப்ர் எனும் இறை மறுப்பு இருவகை

ஏக இறைவனாம் அல்லாஹ்வையும், இறைத் தூதுகளையும் மறுப்பதே மிகக் கொடிய மறுப்பாகும் (குஃப்ர்). இவ்வகை மறுப்புக்கு கம்யூனிஸ்டுகளை உதாரணமாகக் கூறலாம்.

அல்லது முஹம்மது நபி(ஸல்) ஓர் இறைத்தூதர் என்பதை ஏற்க மறுப்பதும் கொடிய மறுப்புதான். யூதர்களும், கிறிஸ்தவர்களும் இவ்வாறே மறுக்கின்றனர். இவர்கள் உலகச் சட்டங்களின் பார்வையில் இறை மறுப்பாளர்களாகவே கருதப்படுவார்கள்.

(அல்லாஹ்வையும் மறுமை நாளையும் இவர்கள் நம்பினாலும் சரி, முஹம்மது நபி (ஸல்) அவர்களை மறுப்பதால் இவர்கள் இறைவனையே மறுத்தவர்களாகிறார்கள்.)

நேர் வழி எதுவென்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்த பின்னரும் இறைத் தூதரை எந்த அளவுக்கு எதிர்த்தார்களோ அந்த அளவுக்கு மறுமையில் தண்டனை வழங்கப்படும் இவர்களுக்கு.

இதோ அல்லாஹ் கூறுகிறான், "யார் நேர்வழி எதுவென்று தனக்குத் தெளிவான பின்னரும் இந்தத் தூதருடன் முரண்பட்டு இறை நம்பிக்கையாளர்களின் வழியில்லாத வேறு வழியில் செல்கிறானோ அவனை அவனுடைய தவறான வழியிலேயே செல்ல விட்டு நரகத்தில் நுழைய வைப்போம். அது சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டது" *(4:115)*

அதே நேரத்தில் உலகில் இப்படியும் சிலர் உள்ளனர். நேர் வழி எதுவென்று அவர்கள் தெரிந்திருப்பதில்லை. காரணம் இஸ்லாமிய அழைப்பு அவர்களுக்கு கொஞ்சங்கூடக் கிடைத்திருக்காது. இஸ்லாம் என்றால் என்னவென்று சொல்லப் பட்டிருக்காது. அல்லது மெல்லிய அளவில் அழைப்புக் கிடைத்திருக்கலாம். அதை வைத்துக் கொண்டு சிந்திக்கவோ ஆய்வு செய்யவோ இயலாத அளவுக்கு அது இருக்கும் பட்சத்தில் இப்படிப்பட்டவர் மறுமையில் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

இதோ அல்லாஹ் கூறுகிறான், "(எந்த சமுதாயத்தையும்) தூதரை நாம் அனுப்பாமல் தண்டிப்பதில்லை." *(17:15)*

எனவே முஸ்லிம்களுக்கு ஒரு மிகப்பெரிய பொறுப்பு உண்டு என்று நான் நம்புகிறேன்.

உலகெங்கும் வாழும் இதர சமுதாயங்கள் நேர் வழி தவறி வாழ்வதும் இஸ்லாத்தை அதன் எதார்த்த வடிவத்தில் அவர்கள் புரியாமல் இருப்பதும் தவறான புரிதல்களை அவர்கள் தழுவியிருப்பதும் முஸ்லிம்கள் மிகவும் கவலைப்பட வேண்டிய ஒன்று.

இதற்காக முஸ்லிம்கள் அரும்பாடுபட வேண்டும். இஸ்லாத்தை எடுத்துரைக்கவும், பரப்பவும் ஒவ்வொரு மொழி பேசுவோருக்கும் அவரவர் தாய் மொழியில் இஸ்லாத்தை விளக்கிச் சொல்லவும் வேண்டும். இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கம் என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

அடுத்து சிறிய இறைமறுப்பை பற்றிப் பார்ப்போம். பெரும் பாவங்கள்தான் சிறிய இறை மறுப்பாகும். ஒருவர் எந்த அளவுக்கு பெரும் பாவங்களைச் செய்கிறாரோ அந்த அளவுக்கு அவரிடம் சிறிய இறைமறுப்பு உள்ளது.

உதாரணமாக தொழுகையை ஒருவர் ஏளனமாக விமர்ச்சிக்கவும் இல்லை. அது ஒரு கடமை என்பதை மறுக்கவும் இல்லை. ஆனால் சோம்பேறித்தனத்தின் காரணமாக தொழுவதில்லை என்றால் இவர் பெரும் பாவி, குற்றவாளி என்பதே அறிஞர்களின் ஏகோபித்த முடிவு. அதற்காக இவர் இறை மறுப்பாளராக (காஃபிர்) ஆகி விடுவதில்லை.

அதே நேரத்தில் சில நபி மொழிகளில் இப்படிக் கூறப்பட்டுள்ளன.

நபி (ஸல்) கூறினார்கள், “நமக்கும் நயவஞ்சகர்களுக்கும் மத்தியில் உடன்பாடான விஷயம் தொழுகை (நம்பிக்கையில் நயவஞ்சகத்தைக் கலந்திருக்கும் ஒருவர்) தொழாமலிருந்தால் அவர் காஃபிராகி விட்டார்”. (அறிவிப்பாளர்: புரைதா(ரழி) நூல் : அஹ்மது, தீர்மிதி, நஸயீ)

மேலும் கூறினார்கள், “ஒரு மனிதனுக்கும் இறை மறுப்புக்குமிடையே இருப்பது தொழுகையை விடுவது தான்” (விட்டவன் காஃபிராகிவிட்டான்). (அறிவிப்பாளர்: ஜாபிர்(ரழி) நூல்: முஸ்லிம், அபூதாவூத், தீர்மிதி, இப்னுமாஜா)

அறிஞர் இப்னுஹஸ்ம் (ரஹ்) அவர்கள் “நபி மொழிகளையும் குர்ஆனின் வசனங்களை யும் அவற்றின் நேரடிவாக்கியங்கள் மூலம் தான் புரிந்துகொள்ள வேண்டும். துணை விளக்கங்கள் எதுவும் அதற்குக் கூறக்கூடாது” என்ற கருத்துடையவர். மேற்கண்ட நபி மொழிகளுக்கு அவரே “தொழுகையை விடுபவன் காஃபிராகி விடுவான்” என்று விளக்கம் தரவில்லை.

“தொழாதவன் காஃபிராகி விட்டான்” என்று இமாம் அஹ்மது (ரஹ்) கூறுவதாக ஒரு தகவல் உண்டு. அதன் விளக்கம் என்ன வென்றால் அவனை சமுதாயத் தலைவரோ, நீதிபதியோ அழைத்து விசாரித்து தொழாமிலிருந்த பாவத்துக்காக அல்லாஹ் விடம் மன்னிப்புக் கோரும்படி சொல்லி அதை அவன் ஏற்க மறுத்தாலோ அல்லது பதில் ஏதும் கூறாமலிருந்தாலோ தான் அவர் காஃபிர் ஆவான்.

தொழுகை ஒரு கடமை என்பதை மறுக்காமல் அதை இலகுவாகக் கருதாமல் இருப்பவர் தொழுவதில்லை என்றால் அதற்காக அவரை காஃபிர் என்று கூற முடியாது என்பதையே இமாம் இப்னு குதாமா (ரஹ்) அவர்களும் சரியான கருத்து என்கிறார்.

தொழுவதில்லை என்பதற்காக ஒருவனுக்கு மரண தண்டனை தருவதாக இருந்தால் கூட அது அவன் தொழாமல் இருந்ததிற்கான தண்டனை தானே தவிர அவர் காஃபிர் என்பதற்காக அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒரு அறிவிப்பில் இமாம் அஹ்மது (ரஹ்) வின் கருத்தும் இதுதான் என்று இருக்கிறது. “இதுவே சரி” என்று கூறும் இமாம் இப்னு பத்தா (ரஹ்) தொழாமலிருப்ப

தாலேயே ஒருவன் காஃபிராகி விடுவான் என்பதை அடியோடு மறுக்கிறார். மேலும் "ஹன்பலீ மத்ஹபின் கருத்தும் இதுதான். மாற்றுக் கருத்து அதில் இல்லை" என்றும் கூறுகிறார்.

அல் முங்னீ என்ற நூலில் இமாம் இப்னு குதாமா (ரஹ்) கூறுகிறார்:

தொழாமலிருப்பதாலேயே ஒருவன் காஃபிராகிவிடமாட்டான். என்பதே இமாம் அபூஹனீஃபா (ரஹ்), இமாம் ஷாஃபீஈ (ரஹ்) முதலிய ஏராளமான அறிஞர்களின் கருத்து.

இதற்கு அவர்கள் பல நபி மொழிகளை சான்றாகக் காட்டுகின்றனர். "லாயிலாஹ இல்லல்லாஹ் - வணக்கத்துக்குரியவன் அல்லலாஹ் ஒருவனே என்று உளபூர்வமாகச் சொன்னவருக்கு நரகம் தடை செய்யப்படும்". "அதைக் கூறியவர் நரகத்திலிருந்து வெளி யேற்றப்படுவார்". "கோதுமை மணியளவு யாருடைய உள்ளத்தில் நன்மை இருக்குமோ அவர் வெளியேற்றப்படுவார்" என்றெல்லாம் நபி மொழிகள் உள்ளன.

மேலும் முஸ்லிம் சமுதாயத்தின் வரலாற்றின் எந்தக் காலக்கட்டத்திலும் தொழாமலிருந்தவர்களை காஃபீர் என்று கருதி அவர் இறந்தபிறகு அவரைக் குளிப்பாட்டுவது, தொழவைப்பது, முஸ்லிம் கள் அடக்கம் செய்யப்படும் பொது மண்ணறையில் அடக்கம் செய்வது, சொத்துக்கள் இவருக்கு கொடுக்கப்படுவது இவரின் சொத்துக்களை வாரிசுகளுக்கு வழங்கப்படுவதும் எதுவும் செய்யப்படாமல் இல்லை.

அவரை முஸ்லிம் என்று கருதி ஒரு முஸ்லிமுக்கு செய்யப்படும் அனைத்தும் செய்யப்பட்டிருக்கிறது.

தம்பதிகளில் ஒருவர் தொழுவதில்லை என்பதற்காக (அவரைக் காஃபிர் என்று கருதி) திருமணபந்தம் முறிந்துவிட்டது என்று கூறப்படவுமில்லை. இத்தனைக்கும் எல்லாக் காலங்களிலும் தொழாமலிருப்பவர்கள் ஏராளமான பேர் இருந்துள்ளனர்.

தொழாதவன் காஃபிர் என்றால் மேற்கண்ட சட்டங்களெல்லாம் செயல் பட்டிருக்க வேண்டுமல்லவா?

மேலும் தொழாமலிருந்தவர் விடு பட்டுப் போன தொழுகைகளை (களா) மீண்டும் தொழவேண்டும் என்பதில் முஸ்லிம்கள் மத்தியில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதை நாம் அறிவோம். அதே நேரத்தில் மதம் மாறிச் சென்று விட்டவன் தான் விட்ட தொழுகையையோ நோன்பை யோ (திரும்பி வந்தபின்) மறுபடிச் செய்ய வேண்டியதில்லை.

அப்படியானால்,"தொழாமலிருப்பவன் காஃபிராகிவிட்டான்" என்று கூறும் நபி மொழிகளுக்கு என்ன பொருள் என்றால் அது காஃபிரின் செயலுக்கு நிகரானது என்று கடுமையாக எச்சரிப்பதே. அதை அதன் நேரடிப் பொருளில் விளங்கக் கூடாது. கடும் எச்சரிக்கை என்று விளங்க வேண்டும்.

உதாரணமாகப் பாருங்கள், "ஒரு முஸ்லிமைத் திட்டுவது பெரும்பாவம். அவருடன் போரிடுவது இறை மறுப்பு" என்று நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் இப்னுமஸ்ஊத் (ரழி) நூல் : புஹாரி, முஸ்லிம்)

"ஒருவர் தன் (முஸ்லிம்) சகோதரனைப் பார்த்து காஃபிரே என்று கூறினால் அவ்விருவரில் ஒருவர் அதைக் கொண்டு செல்வார்" என்று நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரழி) நூல் : புஹாரி, முஸ்லிம்)


இவ்வாறான நபி மொழிகளின் நோக்கம் வன்மையாகவும், கடுமையாகவும் எச்சரிப்பதுதான். மாறாக அவர் உண்மையில் காஃபிராகி விட்டார் என்பதல்ல.

இவ்வாறான நபி மொழிகளுக்குக் கூறப்படும் இருவகை விளக்கங்களில் இதுவே சரியானது. (நூல்: முங்னீ பாகம்:3, பக்கங்கள் 357-359)

**தமிழ்வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# மேற்கத்திய நாகரீகத்தின் இயல்பும் அதன் வரலாறும்

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு: அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

மேற்கத்திய நாகரீகம் தனிச் சிறப்பை பெற்றிருக்கும் நாகரீகம் என்பதே ஜெனிவாவில் உரையாற்றிய ஜெர்மானிய அறிஞர் HASS அவர்களின் கருத்து. அவருடைய பேருரையை சுருக்கி இங்கே தருகிறோம்.

கிரேக்கக் கலாச்சாரம் தான் இப்போதைய மேற்கத்தியக் கலாச்சாரத்தின் நடுநாயகம். மனித சக்திகளைச் சரிக்குச் சரியாக வளர்ச்சி அடையச் செய்வதே, அம்மக்களிடத்தில் முக்கியமானதாகும். அழகான, நேர்த்தியான உடல் வாகுஅமையப் பெற்றவரே, அவர்களின் முன்னோடி. வெளிப்படையாக உணரக்கூடியவைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததுதான் இதற்கான காரணமாகும்.

உடற்பயிற்சி, உடற்கல்வி, விளையாட்டு, நடனங்கள் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்தார்கள். பௌதீக அறிவுகள், தத்துவங்கள், ஆடல்கள், பாடல்கள், கவிதைகளால் சிந்தனையைக் கூர்படுத்துவார்கள். அதே நேரத்தில் சிந்தனையின் வளர்ச்சி, உடலின் வளர்ச்சியைக் காட்டிலும் அதிகமாகாமல் கவனித்துக் கொள்வார்கள். அவர்களிடத்தில் மார்க்கம், ஆன்மீக அகமியத்திலிருந்து நீங்கி இருக்கும். அவர்களின் மார்க்கத்தில் மார்க்க ஞானமும் இருக்காது அதற்கு தெளிவுரை செய்யும் மார்க்க விற்பன்னர்களும் இருக்க மாட்டார்கள். அதே நேரத்தில் நாம் அஸ்புஸ் மற்றும் அதுபோன்ற சடங்குகளில் காணப் படும் ஆன்மீக வாடைகள் கிழக்கத்திய உலகத்திலிருந்து இரவல் வாங்கியதாகும். அதனை, யூனானிய கலாச்சாரத்தில் சேர்ப்பது சரியல்ல.

கிரேக்கர்களிடத்தில் மார்க்கம் என்பது இறைபக்தி இல்லையே என்று சொல்லும்

அளவிற்குமிகவும் சர்வசாதாரணமாகவே இருந்தது. அவர்களின் வாழ்க்கையில் வீண் விளையாட்டு ஆடல்கள் தான் நிறைந்திருந்தது என அதிகமான ஐரோப்பிய அறிஞர்கள் கூறுகிறார்கள். W.F.H. Lecy அவருடைய புத்தகமான History of European Morals இல் கூறி இருக்கிறார். கிரேக்கர்களின் இயக்கங்கள் செயலின் அறிவையும் புத்தியையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். எகிப்தியர்களின் இயக்கங்கள் செயல்கள் அதற்கு எதிராக ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

உபூரிஸ் என்ற உரோம் (சித்தாளநாட்டு) ஆசிரியர் சுட்டிக் காட்டும் செய்தி, எகிப்தியர்கள் தங்கள் கடவுளர்களிடத்தில் இறைந்து கையேந்தி அழுது புலம்பி, அந்தக் கடவுளர்களை கண்ணியப்படுத்துவார்கள். கிரேக்கர்களோ நாட்டியம் ஆடி, ஆடல், பாடல்களைப் பாடி தங்கள் கடவுளர்களைக் கண்ணியப்படுத்துவார்கள். கிரேக்க சரித்திரமும் அதையே உண்மைப்படுத்துகிறது என்ற தனது கருத்தையும் இணைத்துச் சொல்கிறார். உள்ளத்திலே பக்தியோ பயமோ இல்லாமல் ஆடல், பாடல் அத்துமீறிய கொண்டாட்டங்களில் கிரேக்க மார்க்கத் திற்கும் அதன் சடங்குகளுக்கும் விஞ்சக் கூடிய எந்த மார்க்கமும் இல்லை. கிரேக்கர்கள் தங்கள் இறைவனை சாதாரணமாக பெரியவர்கள் மூத்தவர்களை கண்ணியப் படுத்துவது போலவே கண்ணியப்படுத்து வார்கள். இறைவனைக் கண்ணியப்படுத்த நடைமுறையில் இருக்கும் சடங்குகளையும், சம்பிரதாயங்களையே பயன் படுத்துகின்றனர். (நூல் : W.E.H. Llecky, History of European Morals, London 1869 Page 344, 345)

கிரேக்கர்களின் கடவுள் நம்பிக்கையும், கொள்கையும் எப்படி இருந்தது எனறால் அதில் பயபக்தியோ, பணிவோ, சரணடைவோ, மன்றாட்டமோ இருக்கவில்லை.

இறைவனிடத்தில் இருக்கும் இறைப்பண்புகளை நீக்கி, இறைவனுக்கு சுயத்தையும், செயல்களையும், படைப்பு (என்ற சிலவற்றையும்) கட்டளையிடும் அதிகாரத்தை யும், இறைவனிடத்திலிருந்து நீக்குபவர்கள், அவ்வுயரிய பண்புகள் அனைத்தையும், அவர்கள் கூறிக் கொண்டிருக்கும். வூகூவ்ல் அஸ்ரா என்ற இயங்கும் ஜீவனிடத்திலும், நட்சத்திர இயக்கத்தோடும் இணைத்து விட்டார்கள்.

இப்படிப்பட்ட கொள்கை ஒருவன் உள்ளத்தில் பதிந்துவிட்டால் செயலுக்கும் வாழ்க்கையில் இறைவனை ஒரு சடங்காகவே தான் நினைப்பான். இறைவனையே நாடி, அவனுக்குப் பயந்து அவனையே மகத்துவத்திற்கு முன்னால் அடிபணிய மாட்டான். சேதனையை இரட்சிப்பை இறைவனிடத்தில் தேட மாட்டான். அவன்தான் இரட்சகன். அவனைவிட்டால் தனக்கு எந்த நாதியும் இல்லை என அவனுடைய திருப்புகழைப் பாடவு மாட்டான்.

கிரேக்கர் இறைவனை உண்மையாக எந்தக் காலத்திலும் வழிபட்டதில்லை. அவர்களின் வணக்கங்களும் மார்க்க கருமங்களும் உயிரற்ற வடிவமாகத்தான் இருக்கும் அவர்கள் தங்கள் இறைவனை தங்களின் வயதில் மூத்தவர்களை கண்ணியப்படுத்துவது போன்று தான் கண்ணியப்படுத்துவார்கள். இது ஆச்சரியத் தை ஏற்படுத்தும் விஷயமாகும். இதற்கு மாற்றமாக நாம் கேள்விப்பட்டால்தான் ஆச்சரியப்படும் விஷயமாகும்.

இவ்வுலக வாழ்க்கைக்கு அதிகமதிகம் முக்கியத்துவம் அளித்தலும் அதன் மாண்பை எல்லை கடந்து மகத்துவப்படுத்தியதுமே அம்மக்களின் உள்ளத்தில் கெட்ட பாதிப்பை ஏற்படுத்திவிட்டன. அல்லாதே விக்கிரக

வணக்கமும், உருவ வழிபாடும் ஆடல் பாடல் அழகியக் கலைகள் என அவர்களால் கூறப்படும் இசைகளும், தனிமனித சுதந்திரம், அதற்கு எந்த எல்லையும் வரையறையும் இல்லை எனக் கூறும் கவிஞர்கள், எழுத்தாளர்களின் சொல்லாடல்கள் கிரேக்கச் சமுகத்தில் ஒழுக்க மாண்பில் கெட்ட பாதிப்பை ஏற்படுத்தின.

அதனால் ஒழுக்கச் சிதைவு நீக்கமற அவர்களிடத்தில் வியாபித்தது. எல்லைக் கட்டமைப்புகளை தகர்த்தெறிந்தன.

இச்சைகளுக்குப் பின்னாலே ஓடுதல், அற்பஆசைகளைக் கூட அனுபவித்தல், நீண்ட நாள் பசியால் பாதிக்கப்பட்டவன் உணவைக் கண்டால் ஒரே விழுங்காய் விழுங்க நினைப்பது போன்று உலக வாழ்க்கையை விழுங்க நினைப்பது.

சுதந்திர புருஷன் பற்றி கீழ் வரும் வரிகளில் சாக்ரடீஸ் வர்ணிக்கிறார். அதை பிளோட்டோ தன்னுடைய புத்தகமான சாம்ராஜ்யம் என்ற புத்தகத்தில் மேற்கோள் காட்டுகிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் மேற்கத்திய தலை நகரங்கள் ஒன்றில் சுதந்திரமாக வாழும் இளைஞன் பற்றியும் அவன் வாழ்க்கை பற்றி திறனாய்வு செய்வது போன்றும் இருக்கிறது.

ஆசைகள் இருவகை உண்டு. நல்லவை, கெட்டவை. நல்ல ஆசைகளை மதித்து செயல்படுத்த வேண்டும். தீய ஆசைகளைத் விலக்கி வைக்க வேண்டும்.

அங்குள்ள ஒருவனிடம் இது பற்றிக் கூறப்பட்டால் அதை ஏற்கமாட்டான். காது கொடுத்துக் கேட்கவும் மாட்டான். தலையைத் தொங்க விட்டவனாய் அதனை ஏளனமாய்க் கருதியவனாய்ச் சென்று விடுவான்.

அந்த சுதந்திர புருஷனிடத்தில் எல்லா ஆசைகளும் நல்லவை, கெட்டவை என்ற பாகுபாடில் கண்ணியப்படுத்தப்பட வேண்டும். இப்படியே வாழ்வான். தனக்கு அவ்வப்பொழுது ஏற்படும் ஆசைகளைத் தீர்த்துக் கொண்டவனாய் வாழ்க்கையைக் கழிப்பான்.

ஒரு நாள் போதைத் தலைக்கேறிய வனாய் உருண்டு புரண்டு கிடப்பான். மற்றொரு நாள், தண்ணீரை மட்டம் உட்கொண்ட நோயாளியாக இருப்பான். ஒரு நாள் தன் ஆன்மாவைப் பக்குவப்படுத்த பல முயற்சிகள் செய்வான். அடுத்த நாள் எல்லா வேலைகளையும் விட்டு, விட்டு சோம்பேறியாக நாளைக் கழிப்பான். முற்றிலும் துறந்த முனிவர் போன்றும் இருப்பான். அதே மனிதன் அரசியலில் ஈடுபட்டு எழுச்சியுரை ஆற்றிக் கொண்டிருப்பான். நல்ல போர்வீரன், வீரசாகசம் செய்யும் இராணுவ வீரனைப் பற்றிக் கூறப்பட்டால் அது போன்று ஆக வேண்டும் என விரும்புவான். அதே நேரத்தில் நல்ல லாபம் அடையும் வியாபாரியை பார்த்தவுடன் அவனைப்போன்று ஆக வேண்டும் என ஆசைப்படுவான். கட்டுக் கோப்பான வாழ்க்கை என்பது அவனுக்கு இருக்கவே இருக்காது.

இந்த உலக வாழ்வு சந்தோஷமும், மகிழ்ச்சியும், குதூகலமும் மட்டுமே அதனை உயிர் இருக்கும் வரை அனுபவிக்க வேண்டியது. (நூல்: Republic Book VII)

**தொடரும்**

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.